படைப்பு
ஊற்று-5 | நதி-6 | அக்டோபர் - 2022 | திங்களிதழ்
ISSN : 2582-4015

# தகவு

கலை இலக்கிய மின்னிதழ்

www.padaippu.com



## படைப்புச் சங்கமம் - 2022

படைப்பு தகவு
கலை இலக்கிய மின்னிதழ்
ஊற்று-5 | நதி-6 | அக்டோபர் 2022

நிறுவனர் & நிர்வாக ஆசிரியர் :
ஜின்னா அஸ்மி

ஆசிரியர் :
ஆசியாதாரா

நிர்வாகக் குழு :
சகா(சலீம் கான்)
இப்ராஹிம் ஷரீப்
ஜெ. ராஜா ஜெயகரன்

தலைமை நிருபர் :
வலங்கைமான் நூர்தீன்

நிருபர்கள் குழு :
முனைவர் கோ.நித்தியா
க.சோ.திருமாவளவன்
ஸ்டெல்லா தமிழரசி
கலிங்கப்பட்டி க.கருப்பசாமி

முதன்மை வடிவமைப்பாளர் :
கமல் காளிதாஸ்

வடிவமைப்பு :
ப.முகம்மது புலவர் மீரான்

ஓவியக் கலைஞர்கள் :
அழ.ரஜினிகாந்தன்
அன்பழகன்

படைப்புகள் மற்றும்
கருத்துக்களை அனுப்ப வேண்டிய
மின்னஞ்சல் முகவரி :
padaippugal@padaippu.com

அலுவலக முகவரி :
படைப்பு குழுமம்
அரசு பதிவெண் : 521/2018
#8, மதுரை வீரன் நகர்
கூத்தப்பாக்கம்
கடலூர், தமிழ்நாடு - 607002.
admin@padaippu.com
9489375575

நேர்காணல்கள் மற்றும் கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அவரவர் கருத்துக்களே. கதை மற்றும் கவிதைகளின் கருத்துக்கள் கற்பனையே. படைப்பு தகவு மின்னிதழின் கருத்துக்கள் அல்ல.

## உள்ளே...


- தலையங்கம் -பக். 04
- படைப்புச் சங்கமம் - ஏழாம் ஆண்டு விழா -பக். 05
- பெண்ணிய நோக்கில் எஸ்.ராவின் உறுபசி நாவல் - த.விஜயலட்சுமி -பக். 20
- கவிதைக்குள் கலந்திருக்கும் கதை - மு.முருகேஷ் -பக். 29
- இனப்பையின் பசி - கவிஜி -பக். 39
- வானவில் வண்ண மின்னல் - ஆதிரன் -பக். 43
- குறியீட்டுக் காட்சிகளுடன் இணையும் கற்பனை - அழகுராஜ் ராமமூர்த்தி -பக். 48
- நிலமெனும் நங்கை நல்லாள் - கோ.லீலா -பக். 57
- மரங்களைப் பாட... - கவிஞர் ஏகாதசி -பக். 60

## சிறுகதைகள்


- **தங்கமோடி**
  - பூங்கோதை கனகராஜன் -பக். 35

- **பிஸ்கோத்து அப்பா**
  - நா.வே.அருள் -பக். 51


## கவிதைகள்


- **ரோஷான் ஏ.ஜிப்ரி** -பக். 27

- **தீபிகா நடராஜன்** -பக். 27

- **ஐ.தர்மசிங்** -பக். 28

- **மா. காளிதாஸ்** -பக். 28

- **ச.ஜெய்** -பக். 28

- **பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள் - 25**
  - ஜின்னா அஸ்மி -பக். 47

# தலையங்கம்

**வணக்கம்.**

படைப்பு 'தகவு' ஐம்பத்துநான்காவது இதழ் உங்கள் கண்முன் பரந்து விரிந்திருக்கிறது.

படைப்புக் குழுமத்தின் ஏழாம் ஆண்டு விழா மிகச் சிறப்பாக நடந்து முடிந்திருக்கிறது. எழுத்தால் ஒன்றிணைந்த உள்ளங்கள் சந்தித்து உரையாடி அன்பையும் பரிசுகளையும் விருதுகளையும் பரிமாறிக்கொண்ட இனிமையான தருணங்களின் தொகுப்பாக விழா நிகழ்ந்திருக்கிறது.

தகவு அச்சிதழாக வருவதற்கான சாத்தியங்கள் குறித்து விழாவில் பேசப்பட்டிருக்கிறது. இதழ் உருவாக்கம், படைப்பு என்ற நிலையைக் கடந்து அச்சு என்ற நிலையை அடையும்போது வணிகம், பொருளாதாரம் என்ற முக்கியப் புள்ளிகளும் அங்கு வந்துநிற்கின்றன. கையெழுத்துப் பத்திரிகைகளை எளிதில் நடத்திய திறமைமிக்கவர்கள் பலர் அச்சு முயற்சிக்கு வராததற்குக் காரணம் இவைதான். பெரும் வணிகப் பத்திரிகை நிறுவனங்களுக்கும் இலக்கிய இதழ்களைத் தொடர்ந்து அச்சில் கொண்டுவருவது என்பது சவாலாக இருக்கிறது. தமிழில் இலக்கிய இதழ்களுக்கான வணிகச் சூழல் அப்படி.

இந்நிலையில்தான், இணைய வளர்ச்சி இதழியல் ஆர்வலர்களுக்கு உற்ற துணையாகத் தொடங்கியது. மின்னிதழ் உருவாக்கச் சாத்தியம் இதழியல் வரலாற்றில் மிக முக்கியமான கூறானது. நம் தகவு இதழினை இணையத்தில் வாசிக்கும்போது அப்படியே அச்சு இதழை வாசிக்கும் அனுபவம் பெறலாம்.

எனினும் அச்சிதழ் என்னும் பெருங்கனவு இல்லாமலில்லை. நம் படைப்பு விழாவில் பேசப்பட்டதுபோல, தகவு கண்களிலிருந்து கைகளில் தவழும் நாள் குறித்த விருப்பம் தகவு சார்ந்த இலக்கியவாதிகளால் தொடர்ந்து முன்வைக்கப்பட்டுக்கொண்டே இருக்கிறது. நிறைவேறும் நாள் குறித்த பேராசையைச் சுமந்தபடி எப்போதும்போலத் தகவு தொடர்ந்து நடைபோட்டுக்கொண்டிருக்கிறது.


படைப்பு விழாவில் தங்கள் நூலின் முதல் பிரதியைக் கையில் ஏந்திய அனைத்துப் படைப்பாளர்களுக்கும் தகவு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறது. படைப்புலகுக்குள் முயற்சி எடுத்து உள்நுழைபவர்களுக்கு வழிகாட்டுதல் முக்கியத் தேவையாக உள்ள நிலையில் படைப்பு அதனைச் செவ்வனே நிகழ்த்திவருகிறது. இதனை முழுவதுமாகப் புரிந்து, புதிதாக எழுதத் தொடங்கும் எழுத்தாளர்களுக்கான அங்கீகாரங்களையும் ஊக்கங்களையும் தொடர்ந்து படைப்பு அளித்துக்கொண்டிருக்கிறது என்பதே படைப்புக் குழுமத்தின் சிறப்பு என்று பலரும் கூறியுள்ளது படைப்பிற்கான விருது எனக் கொள்ளலாம்.

இந்த மாதத் தகவின் கட்டுரைகள், சிறுகதைகள், கவிதைகள், தொடர்கள் என உள்ள அனைத்துப் பகுதிகளையும் வாசியுங்கள்.. விவாதியுங்கள்.. பகிருங்கள்.

நன்றி.

ஆசிரியர். ■

சந்துரு.ஆர்.சி.



# படைப்புச் சங்கமம் – ஏழாம் ஆண்டு விழா

**வா**சிப்பின் எல்லைகள் சுருங்கத் தொடங்கிவிட்ட இன்றைய டிஜிட்டல் சூழலில் அந்தப் பிம்பத்தை உடைத்து வாசிப்பு நிலையை மீட்டெடுக்கும் முகமாக "படைப்பு - சமூகத்தின் இணைப்பு" என்ற உயரிய லட்சியத்தை நெஞ்சில் ஏந்தியபடி இலக்கியத்துக்கான ஒரு தனி மேடையை உருவாக்குவதைத் தனது இலக்காகக் கொண்டு தமிழ் இலக்கியச் சூழலில் ஒரு வரலாற்றுத் திருப்பத்தை ஏற்படுத்தித் தனது ஏழாம் ஆண்டு படைப்புச் சங்கமம் விழாவைப் பிரம்மாண்ட அதிர்வுகளுடன் நடத்தி முடித்திருக்கிறது படைப்புக் குழுமம்.

கல்வியும் வாசிப்பும் முடக்கப்பட்ட காலத்தின் இருள் அகற்ற கடந்த நூற்றாண்டில் அறிவுத்தளத்தில் கலகங்கள் உருவாகி அதன் மூலம் பெரும் பாய்ச்சலுடன் நிகழ்கால இலக்கியங்கள் தோன்றத் தொடங்கின. வாசிக்கும் வாய்ப்பமைந்தவர்களே உயரிய படைப்பாளர்களாகவும் உருமாறத் தொடங்கினர். அதன் வழியே நூல்கள் உருவாகின. எண்ணற்ற நூல்கள் அச்சு வடிவில் வந்திருந்தாலும் இன்று வரை இங்கு ஒரு எழுத்தாளனுக்குத் தனது எழுத்துக்களை அந்தந்தக் காலத்திலேயே நூல் வடிவத்துக்குக் கொண்டுவருவதென்பது வலி நிறைந்த பெருங்கனவாகத்தான் இருந்துவருகிறது. இறுதிவரை அக்கனவு மெய்ப்படாமல் உன்னதமான இலக்கியப் படைப்புகள் பல அச்சுக்கு வராமல் எழுத்து நிலையிலேயே நின்றுவிட்டதுண்டு.

தனது படைப்பு நூல் வடிவம் பெற வாய்ப்பொன்று அமைந்துவிடாதா எனச் சோர்ந்து கிடந்த எழுத்தாளனை இன்பத்திலாழ்த்தும் விதமாக இதோ நாங்களிருக்கிறோம்.. உங்கள் படைப்புகளை நாங்கள் ஏந்திக்கொண்டு அச்சு வடிவத்தில் ஆவணப்படுத்தித் தருகிறோம் என்ற நம்பிக்கையளித்து அதற்கு நூல் வடிவம் தந்து கடந்த ஏழு ஆண்டுகளாகத் தொடர்ந்து செயல்படுத்தி எழுத்தாளர்களுக்குப் புதிய களம் அமைத்து அங்கீகரித்து வருகிறது படைப்புக் குழுமம்.

தமிழுலகின் ஆகச்சிறந்த எழுத்தாளர்களின் நூல்கள் முதற்கொண்டு எங்கோ ஓர் மூலையில் எழுதிக்கொண்டு ஏட்டளவில் மட்டுமே படைப்புகளைத் தூசி படிய வைத்திருந்த படைப்பாளிகளின் எழுத்துக்கள் வரை தனது படைப்பு பதிப்பகத்தின் மூலம் நூல்களாக அச்சிலேற்றி அவற்றை ஆவணப்படுத்தி, அந்த நூல்களின் வெளியீட்டுக்கெனவே ஆண்டுதோறும் பிரம்மாண்ட விழாவெடுத்து நடத்திக்கொண்டு வருகிறது படைப்பு.

இந்த ஆண்டும் தமிழகத்தின் படைப்பாளர்கள் பலரையும் ஒரே அரங்குக்குள் அமர்த்தி தனது ஏழாம் ஆண்டு நூல் வெளியீடு மற்றும் இலக்கிய விழாவை ஒரு குடும்ப விழாவாய் மாற்றி மகத்தான சாதனை படைத்திருக்கிறது இக்குழுமம்.

எழுதப் படிக்கத் தெரிந்தவரெல்லாம் எழுத்தாளராகிப்போன முரண்கள் நிறைந்த முகநூல் தளத்தில் சரியான படைப்புகளை அறிமுகம் செய்யும் விதமாகக் கவிதைக்கென ஒரு முகநூல் தளத்தை உருவாக்கி அதில் சிறந்த படைப்பாளிகளைக் கூர்ந்து அடையாளம் கண்டு தோள் தட்டி அவர்களது எழுத்துக்களின் வலிமையறிந்து அதை அவர்களுக்கே உணர்த்தி அடையாளமளித்து அதற்கென ஒரு விழாவெடுத்துப் பொது அரங்கில் நான்கு வார்த்தைகள் கோர்த்துப் பேசத் தயங்கிய படைப்பாளிகளையும் தங்கள் நூல் வெளியீடு குறித்துப் பொது அரங்கில் சரளமாய் உரையாட வைத்துத் தனது ஏழாம் ஆண்டு விழாவை நிறைவு செய்திருக்கிறது.

சென்னை தி.நகர், கோபதி நாயகம் தெருவில் அமைந்திருக்கும் சர் பிட்டி தியாகராயர் அரங்கம் நோக்கி அக்டோபர் 15ஆம் தேதி காலையிலிருந்தே சாலைகளெங்கும் இலக்கிய வாசம் மிதந்து வரத்தொடங்கியது. விழா நடக்கும் தியாகராயர் அரங்கம் எல்லோரையும் இலக்கிய நறுமணம் கமழ வரவேற்றுக்கொண்டிருந்தது.

உள் நுழையும்போது வெளி வாசலின் வலப்புறம் பழந்தமிழ் போர்க்கள வீரர்கள் போல் கேடயமும் நீண்ட வேலும் தாங்கி அண்ணாந்து பார்க்க வைக்கும் தங்க நிறச் சிலைகள் நின்றுகொண்டிருக்க இடது புறம் எழுத்தாளர்களையெல்லாம் கிறங்கச்செய்யும் புதிதாய் அச்சடித்த நூல்களிலிருந்து அவிழ்ந்து விழும் வாசம் ஒன்றாய்ச் சேர்ந்து வரவேற்க தமிழகத்தின் எட்டு திசைகளிலிருந்தும் கவிஞர்கள் எழுத்தாளர்கள் வாசகர்கள் என ஒவ்வொருவராய் அரங்கம்



நிறையத்தொடங்கினர். போர்க்களத்தின் குதிரை வீரர்கள் இருபுறமும் அமர்ந்திருக்க படைப்பு இலச்சினையுடன் கம்பீரமாய்க் களை கட்டியிருந்தது விழா மேடையின் பின்னணி அலங்காரம்.

விழாவுக்கு வந்திருந்தோரில் முன்பே அறிமுகமானவர்கள் கை குலுக்கியும் அணைத்துக்கொண்டும் அளவளாவியும் மகிழ முகநூலில் மட்டுமே பார்த்துக்கொண்டிருந்தவர்கள் முதன் முதலாய் நேரடியாய்ச் சந்தித்துக்கொண்டதில் அடைந்த மகிழ்ச்சியும் அன்பைப் பரிமாறிக்கொண்டதும் விழா அரங்கின் நெகிழ்ச்சியான நிமிடங்கள்.

விழாவின் தொடக்கமாக, அனைவரையும் ஒற்றைப் புள்ளியில் இணைக்கும் விதமாக படைப்புக் குழும நிர்வாகி கவிஞர் ஜின்னா அஸ்மி அவர்கள் எல்லோரையும் வரவேற்றார். முதல் நிகழ்வாய் படைப்புக் குழுமத்திற்கே உரிய வழக்கமான சிறப்பு ஏற்பாடாக, அரங்கத்தில் வந்திருக்கும் கவிஞர்கள் எழுத்தாளர்கள் வாசகர்கள் என ஒவ்வொருவராய் ஒலி வாங்கியில் தங்களைச் சுய அறிமுகம் செய்துகொண்டனர்.

முதல் அறிமுகமாய் கவிஞர் பாடலாசிரியர் ஏகாதசி அவர்களுடன் ஆரம்பித்து முன்னோடி எழுத்தாளர்கள் நாஞ்சில் நாடன், அமுதபாரதி, அமிர்தம் சூர்யா என அடுத்தடுத்து அனைவரும் தங்களை அறிமுகம் செய்துகொண்டனர். புதியவர்கள் பலரும் தங்கள் ஊர், பெயர், வெளியிடும் நூல், வாசிப்பனுபவம், வந்திருப்பதின் நோக்கம், பெறவிருக்கும் விருது எனக் காரணங்களையும் விழா ஏற்பாட்டினையும் வியந்து பகிர்ந்துகொண்டனர்.

படைப்புக்குழுமத்தின் சாதனை விருதாளர்கள் கவிஞர் இந்திரன், நாஞ்சில் நாடன், சிறப்பு விருந்தினர்களாய் வந்திருந்த கவிஞர்கள் அமுதபாரதி, அமிர்தம் சூர்யா, மு.முருகேஷ், பிருந்தாசாரதி, மானா பாஸ்கர் உட்பட பலரும் மேடையை அலங்கரிக்க தாய்த்தமிழ் வாழ்த்துப் பாடலுடன் அரசு நடத்தும் ஒரு இலக்கிய விழாவைப்போல் படைப்புக்குழுமத்தின் நூல் வெளியீட்டு விழா கம்பீரமாய்த் தொடங்கியது.

நிகழ்ச்சித் தொகுப்பாளர்களின் இனிய அறிவிப்புடன் அழகிய பேழையில்



அடுக்கப்பட்டு எடுத்து வரப்பட்ட நூல்களைச் சிறப்பு விருந்தினர்கள் எழுந்து நின்று தங்கள் கரங்களில் ஏந்தி வெளியிடத் தொடங்கினர்.

ஒவ்வொரு நூல் வெளியிடப்படும்போதும் மேடையின் பிரம்மாண்டமான பின்னணித் திரையில் நூலாசிரியரின் புகைப்படம் வாழ்க்கைக் குறிப்புகளுடன் நெஞ்சத்தைக் கொள்ளையடிக்கும் பல்வேறு காட்சியமைப்புகளுடன் படைப்புக் குழுமத்திற்கே உரிய தனித்துவமான `ஏவி` வடிவமைப்பில் பின்புலக்காட்சி விரிந்தது. வெளியிடும் நூல் குறித்த தத்துவக் கோர்ப்புடன் எழுதப்பட்ட கவித்துவம் மிக்க மதிப்புரையைக் கம்பீரமான குரலின் வழியே காட்சிப்படுத்திய நூல் வெளியீடு பார்வையாளர்களிடம் பெரும் சிலிர்ப்புகளை உருவாக்கியது.

அதே சிறப்பம்சங்களுடன் இம்மி பிசகாமல் அதே நயத்துடன் நூல்கள் ஒவ்வொன்றாய் வெளியிடப்பட இடையிடையில் இலக்கியச் சுவை பருகும் விதமாய்ச் சிறப்பு விருந்தினர்களின் வாழ்த்துரைகளும் இணைந்துகொள்ள விழா மேலும் பொலிவுறத் தொடங்கியது.

படைப்பு விழாவை வாழ்த்திச் சிறப்பு விருந்தினர் முதல் உரையாகக் கவிஞர் மு. முருகேஷ் அவர்கள் பேசினார்.

“இதுவரைக்கும் தமிழ்ச்சூழலில் ஒரு படைப்பாளன் எழுதுவதென்பது அவனுக்குள்ளிருக்கும் தனிப்பட்ட ரகசியம் என்பது போன்ற கருத்தொன்று தமிழ்க் குடும்பங்களிடம் பரவலாக இருந்துவந்தது. தன் மனைவி படைப்பாளி என்பதைக் கேட்டதும் அப்படியா என அதிர்ந்து போகும் நிறைய கணவர்கள் இருக்கும் சூழலில் இன்று இந்த விழாவுக்குக் குடும்பம்போல் நண்பர்கள் வந்திருக்கும் ஒரு அற்புதத்தைப் படைப்பு சங்கமம் திருவிழா நடத்தியிருக்கிறது என்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சி கொள்கிறேன்.

இலக்கியமும் எழுத்தும் வாழ்க்கையோடு தொடர்புடையன. வாழ்க்கையிலிருந்து எதையும் விலக்கி வைத்துவிட்டால் அந்த இலக்கியம் அர்த்தமற்றதாகிவிடும். பலரும் குடும்பத்துடன் இலக்கிய விழாவுக்கு வந்திருப்பினும் இவ்விழா அரங்கில் மூலையில் ஒருவராய் அமர்ந்து இந்த நிகழ்ச்சிகளைக் காணும் யாரோ ஒருவருக்கு நாமும் இதுபோல் ஒரு நூல் வெளியிட வேண்டுமென்று சின்னதாய் ஆசை ஒன்று நிச்சயமாக வந்துவிடும்.

தமிழ் இலக்கியச் சூழல் பல்வேறு குழுக்கள் சார்ந்து இயங்கிவந்தாலும் அதில் படைப்பு தகவு போன்ற இதழ்கள் வருவது மிகக்குறைவு. எனினும் இவை மின்னிதழ்களாய் மட்டுமே வருகின்றன. என் போன்ற வாசகருக்கெல்லாம் படைப்பு தகவு போன்ற இதழ் அச்சு இதழாக வெளிவர வேண்டுமென்பதே தீராத ஆசையாய் இருக்கிறது.

ஒரு குழுமம் ஓராண்டில் முப்பத்தெட்டு நூல்கள் வெளியிடுவதென்பது அசாத்திய சாதனை. ஒவ்வொரு புத்தகம் வெளியிடும்போதும் திரையில் தோன்றும் அதற்கான ஏவி தயார் செய்வதென்பது மிகச் சிரமமான ஒன்று. இதற்காக உழைத்த சிவந்த கண்களுக்கும் கணினி பிடித்த கைகளுக்கும் அன்பு முத்தங்கள்.



எழுத வருபவர்கள் யாரும் தமிழ்ச் சூழலில் படைப்பாளிகளைக் கொண்டாடும் மன நிலையைப் பெற்றிருக்க வேண்டும். கவிதை கதை கட்டுரை என உங்களுக்குப் பிடித்த துறையில் இயங்குவதற்கு முன்னால் அத்துறையில் உங்களுக்கு முன்னால் என்ன நடந்தது என்பதைப் படித்தால்தான் நமது படைப்பும் சிறப்பாய் அமையும். `நேற்றின் வரலாறு தெரியாமல் போனால் இன்று என்ன செய்வது என்பது புரியாமல் போகும். இன்று என்ன செய்வது என்று புரியாமல் போனால் நாளை என்பது நம் கையில் இல்லை` என்ற கூற்றுப்படி நேற்று என்ன நடந்தது என்பதைப் படைப்பாளிகள் படிக்க வேண்டும்.

ஒரு இதழில் பிரசுரமான தங்கள் கவிதையை மட்டும் தனியே எடுத்து முகநூலில் போட்டுக்கொள்ளும் வழக்கத்திலிருந்து விலகி அதனருகிலிருக்கும் நம்மைவிடச் சிறப்பாய் எழுதியிருக்கும் அடுத்தவர் படைப்பையும் வாசிக்க வேண்டும். அப்படிப் படித்தால்தான் தமிழ் எந்தச் சூழலை நோக்கிப் பயணிக்கிறது என்பதை அவதானிக்க முடியும்” என்று பேசி மகாகவி ஈரோடு தமிழன்பன் அவர்களின் வாசித்தலின் அவசியம் குறித்த முத்தாய்ப்பான கவிதையைச் சொல்லி முடித்தார்.

அடுத்து பேச வந்தவர் கவிஞர் மானா பாஸ்கர் அவர்கள்...

“படைப்பு மிக அற்புதமான செயலைச் செய்துகொண்டிருக்கிறது. கவிஞர் வைரமுத்து சொன்னார்.. இந்த நாட்டில் மிகப்பெரிய தற்கொலை என்பது புத்தகம் போடுவது என்று. ஆனால் இன்று பல எழுத்தாளர்களின் கனவைச் செயல்படுத்தி அவர்களின் புத்தகங்களைத் தொடர்ச்சியாய் வெளியிடுவதோடு மட்டுமல்லாமல் அவர்களை ஏகமாய்ப் பாராட்டவும் செய்கிறார்கள் படைப்புக் குழுமத்தினர்.

சக மனிதனை மதிப்பதும் பாராட்டுவதும் அருகிப்போய்விட்டது. கடைசிச் சொட்டு கொக்கோகோலாவுக்குத் தரும் மதிப்பு கூட மனிதன் சக மனிதனுக்குக் கொடுப்பதில்லை. இந்த இடத்தில்தான் படைப்புக் குழுமம் பாராட்டுக்குரியதாகிறது. நூல் வெளியீடு என்பது வெறும் குடும்பத்தினர் நண்பர்கள் மட்டுமே கலந்துகொண்ட நிலை இருந்தது. அது மாறி இன்று அரசு அதிகாரியாக மக்கள் சேவையாற்றிக்கொண்டே இலக்கியம் படைத்துக்கொண்டிருக்கும் கவிஞர் ஆண்டன் பெனி உட்பட பல துறைகளில் சிறப்புடன் இயங்கிக்கொண்டிருக்கும் பலரும் இங்கே குழுமியிருப்பது விழாவின் சிறப்பாகும்.

மூத்த எழுத்தாளர்கள் நாஞ்சில் நாடன், இந்திரன் போன்றோர் கௌரவித்து விருதளிக்கப்படுகிறார்கள். அவர்களை அடையாளம் கண்டு படைப்புக் குழுமம் சரியான நேரத்தில் உரியவர்களைப் பாராட்டிக்கொண்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. ஒரு படைப்பின் நோக்கமென்பதே மனித நேயம்தான். அந்த மனிதத்தைத் தூக்கிப்பிடிக்கும் படைப்புக் குழுமத்துக்குப் பாராட்டும் முத்தங்களும்.''

சிறிய இடைவேளையில் அனைவருக்கும் வலப்பக்க வெளியில் தேநீர் வழங்கப்பட்டுப் படைப்புக் குழுமத்தின் நூல் வெளியீடுகள் மீண்டும் தொடர அடுத்தடுத்த நிகழ்வுகள் சிறப்பு விருந்தினர்களின் ஆச்சர்யப் பார்வைகளாய் முகம் மலர்த்தி விழாவை மேலும் அழகாக்கியிருந்தன எனலாம்.

தொடர்ந்து கவிஞர் ஆண்டாள் பிரியதர்சினி உரையாற்றினார்.

“மிக அற்புதமான ஒரு பொழுது எப்படி இருக்கும் என்று என்னைக் கேட்பார்களானால் நிச்சயமாய் அது நாமெல்லாம் ஒன்றாகக் குழுமியிருக்கும் இந்த அக்டோபர்





பதினைந்தாம் நாளைப்போல் இருக்க வேண்டும் என்பேன். அப்படிப்பட்ட ஒரு கவிதைத் திருநாளை படைப்புத் திருநாளை நூல்களின் திருநாளை சிந்தனையாளர்களின் பெருநாளைக் கொடுத்திருக்கிறார்கள்.

சிறிய வயதில் குப்பையாய்க் கிழித்துப்போடப்பட்ட காகிதங்கள் மளிகைப்பொருட்கள் சுற்றிய காகிதங்களை விரித்து அதன் மளிகை வாசத்தோடு வாசிக்கத்துவங்கிய அனுபவத்துடன்தான் நாங்களெல்லாம் நூல்களுக்குள் நுழையத்தொடங்கினோம். அன்றைய காலத்தைக் கடந்து இப்போது டிஜிட்டல் உலகத்திற்கு வந்து நிற்பது காலத்தின் கட்டாயம்.

இந்தப் படைப்புக் குழுமத்தின் இலக்கிய விழாவினை நண்பர்கள் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் நடத்தும் ஒரு செம்மொழி மாநாடாகவே கருதுகிறேன். நான் பல திரைப்பட, தொலைக்காட்சி விழாக்களுக்குச் சென்றிருக்கிறேன். திரைப்பட மற்றும் அரசியல் தொலைக்காட்சி விழா மேடைகளில் மட்டுமே கிடைக்கும் அந்த அங்கீகாரம் அங்கு மட்டும்தானோ என்ற ஏக்கம் எதிர்பார்ப்பு வருத்தம் எனக்குள் இருந்ததுண்டு. ஆனால் இன்று அந்தப் பிரம்மாண்டங்களைக் கடந்து நடிகை நடிகர்களுக்கான ஆரவார வரவேற்புகளையெல்லாம் தாண்டி இலக்கியத்திற்கு அதைவிட உயர்வான ஒரு நிலையைக் கொடுக்க முடியும் என்பதை நிரூபித்துக்கொண்டிருக்கிறது படைப்புக் குழுமம்.

அரசியல் இலக்கிய நிகழ்வுகளுக்காகப் பலமுறை இந்த அரங்குக்கு வந்திருந்தாலும் ஒரு தனி நபர் இயக்கம் தனிப்பட்ட அமைப்பு முப்பத்தெட்டு நூல்களை இங்கு வெளியிடுவதென்பது தமிழ் வரலாற்றில் குறிப்பிடப்பட வேண்டியது. இயந்திரப் புரட்சி பசுமைப் புரட்சி வெண்மைப் புரட்சி நீலப்புரட்சி என வரலாற்றில் பல புரட்சிகளை வாசித்திருப்போமல்லவா. அவை



சமுதாயத்தால் முன்னெடுக்கப்பட்டவை. ஆனால் ஒரு அறிவுப் புரட்சியை இந்த இருபத்தியோராம் நூற்றாண்டில் முன்னெடுத்துக்கொண்டிருக்கும் ஒரு இயக்கம் எதுவென்றால் படைப்பு என்று நிச்சயமாகச் சொல்லலாம்.

எங்கள் காலத்தில் கல்லூரிப்பருவத்தில் ஒரு படைப்பை அச்சில் பார்ப்பதென்பது மாபெரும் பரவசமான ஒன்று. அந்த உணர்வை பரவசத்தை இன்று பெற முடிந்தது. நூல்களை வெளியிடுவது சிறந்த கவிதைகளைத் தேர்ந்தெடுத்து விருதுகள் தருவது சிறந்த சிந்தனையாளர்களை அடையாளம் காட்டுவது எனப் பல முன்னெடுப்புகளை எடுத்துவரும் படைப்புக் குழுமத்தை நாம் கொண்டாட வேண்டும்.

படைப்பு விழாவுக்கு வந்திருக்கும் பல படைப்பாளிகள் பழைய மரபுகளை மாற்றிப் பல்வேறு பின்புலங்களிலிருந்து




புதிய அடையாளங்களுடன் வந்திருப்பது பாராட்டுக்குரியது. பெண்கள் எப்போதும் வாய்ப்புகள் இல்லாதவர்களாகவே இருந்தார்கள். பாரதியோ பெரியாரோ அம்பேத்கரோ பாரதிதாசனோ வந்திருக்காவிட்டால் இன்னமும் கூட இந்த அரங்கத்தில் இத்தனை பெண்கள் வந்திருக்கப்போவதில்லை. வீட்டில் புளி கரைத்துக்கொண்டு கரிக்கந்தையாக, கால் மிதியடியாக, ஒட்டடையாகத்தான் இருந்திருப்போம். இத்தனைப் பெண்கள் நூல்களைப் படைத்திருக்கவும் முடியாது. இந்த மேடையேறி வந்திருக்கும் ஒவ்வொரு பெண்ணும் தன் வாழ்வில் மகள் மனைவி அம்மா ஆச்சி எனப் பல பட்டங்களைப் பெற்றிருப்பார்கள். ஆனால் இவையனைத்தையும் தாண்டி அவர்கள் முகத்தில் தோன்றும் ஆயிரம் சூரியப்பிரகாசத்துக்கு ஒற்றைக் காரணம் அவர்கள் படைப்பாளர்கள் கவிஞர்கள் எழுத்தாளர்கள் என்ற பட்டத்தைப் பெற்றுக்கொடுத்திருப்பதால்தான்.

இந்தப் பட்டம் அவர்கள் முனைந்து ஒவ்வொரு எழுத்தாகச் சேர்த்துச் சேர்த்துப் பெற்றிருப்பது, அவர்களின் சிந்தனையில் உதித்தது. அவள் மூளையில் உதித்த சொந்தச் சிந்தனையே. அவளுக்கு யாரும் சொல்லித்தராமல் திணிக்கப்படாமல் வந்த சிந்தனை.

உலகில் முதல் புரட்சிகரமான வல்லமையான பெண் யாரென்றால் ஏவாள் என்றுதான் சொல்வேன். அவள்தான் உண்ணக்கூடாது என்று விதிக்கப்பட்ட உத்தரவை முதன்முதலாய் மீறியவள்" என்று பெண்ணின் அகம் சார்ந்த வெளிகளை எல்லோராலும் உள்வாங்க முடிந்தபடி சிறப்பாகப் பேசினார்.

படைப்பு விழாவின் ஏற்பாடாய்ப் பகல் உணவு இடைவேளை அளிக்கப்பட்டு எல்லோருக்கும் சுவையான உணவுகள்



தேவைப்படுமளவு வழங்கப்பட்டன. இடைவேளை முடிந்து மீண்டும் நூல் வெளியீடு மற்றும் சிறப்புரைகள் அதே உற்சாகத்துடன் தொடங்கின.

பட்டிமன்றப் பேச்சாளர் கவிதா ஜவகர் உரையாற்றத் தொடங்கினார்.

“படைப்பு இந்த ஆண்டு செய்திருக்கும் சிறந்த விசயம் என்பது ஓய்வறியாமல் வீட்டில் உழைத்துக்கொண்டிருந்த பெண்களுக்குக் கொரானா காலத்தில் `மாண்புமிகு மகளிர்` என்ற பெண்களுக்கான கவிதைப்போட்டியை நடத்தி முடங்கிக்கிடந்த பெண்களை எழுதத்தூண்டி அவர்களை முன்னிலைப்படுத்தியது.

மதம் அரசியல் வீடு என அனைத்துத் துறைகளிலும் பெண்ணுக்கான இடம் பின் தள்ளப்பட்டே இருக்கிறது. பெண் எங்கும் வெளிப்படையாகப் பேச முடியாததற்கு, பின் தள்ளப்பட்டதற்குக் காரணம் எழுதப்பட்ட இதிகாச இலக்கியங்கள் அனைத்தும் ஆண்களால் மட்டுமே எழுதப்பட்டது. எங்கும் பெண் முன்னிலைப்படுத்தப்படாததற்குக் காரணம் ஆணின் பிடியிலேயே அனைத்து அதிகாரங்களும் இருக்கின்றன. இது மாற வேண்டும்” என்ற அடிப்படையில் தனது உரையை முடித்து, படைப்புக் குழுமத்தின் இலக்கியப் பங்களிப்பைப் பாராட்டி, பெண் ஆண் உலகத்தில் புறக்கணிக்கப்படும் வலியை அலட்சியத்தை ஒரு ஜென் கதையுடன் சொல்லி முடித்தது சுவாரஸ்யம். “பெண்ணியம் என்பது ஆண் செய்யும் அத்தனையும் செய்ய வேண்டுமென்பதல்ல. ஆண்களால் முடியாததையும் செய்து முடிக்கும் வல்லமையே உண்மையான பெண்ணியமாகும். நாங்கள் எப்போதும் உங்கள் படைப்புக் குழுமத்துடன் இணைந்திருப்போம்” என்று வாழ்த்தியதோடு தனது முதல் நூலைப் படைப்பு பதிப்பகத்தின் வழியே வெளியிட்டு மகிழ்ந்தார்.

மலையாளத்தில் எழுதப்பட்டு கே.வி.ஜெயஸ்ரீ அவர்களால் தமிழில்



மொழிபெயர்க்கப்பட்டு சாகித்ய அகாதமி விருது பெற்ற `நிலம் பூத்து மலர்ந்த நாள்` எனும் மலையாள நாவலின் மூல ஆசிரியர் மனோஜ் குரூர் அவர்கள் சிறப்பு விருந்தினராய்க் கலந்துகொண்டு ஆற்றிய உரை அனைவரையும் வெகுவாய்க் கவர்ந்தது.

அவர் "நான் மலையாள மொழியில் எழுதுபவன். எனவே என் தாய் மொழியும் தமிழ்தான்" என்றபோது எல்லோர் புருவங்களும் உயர்ந்தன.

"இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதிய சிலப்பதிகாரத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறும் நல்லுலகத்தில்தான் நானும் பிறந்தேன். என் மொழியில் உயிரெழுத்தும் மெய்யெழுத்தும் தமிழ்தான். என் நிலம் மற்றும் மொழியின் உயிரும் மெய்யும் தமிழ்தான். தமிழ் மலையாளம் இரண்டும் ஒன்றெனக் கலந்திருப்பினும் இன்று தமிழ் மலையாளம் இரண்டு தரப்பிலும் இப்புரிதல் இருப்பது சந்தேகமே. நான் தமிழகம் வந்தபோது ஒருவர் நீங்கள் எந்த நாட்டிலிருந்து வருகிறீர்கள் என்று கேட்டார். நான் கோட்டயம் என்றதற்கு அவர் ஆஹா சுந்தர ராமசாமி இளமையில் வாழ்ந்த இல்லம் கோட்டயம் என்று மகிழ்ச்சியாய்க் கூறினார். எனக்கும் மகிழ்ச்சி ஏற்பட்டது. ஆனாலும் ஒரு சோகம் என்னவென்றால் கோட்டயத்தில் இருப்பவர்களுக்கு சுந்தர ராமசாமி கோட்டயத்தைச் சார்ந்தவர் என்பதே தெரியாது.

தமிழுக்கும் மலையாளத்துக்கும் உள்ள தொடர்பை மலையாளிகள் மறந்துவிடுகிறார்கள் என்று நான் உளப்பூர்வமாக உணர்ந்தபோதுதான் `நிலம் பூத்து மலர்ந்த நாள்` என்ற நாவலை எழுதத் தொடங்கினேன். அந்த நாவலின் சுற்றுச்சூழல் முழுவதும் தமிழும் மலையாளமும் கலந்திருந்த காலத்தைப் பகிர்ந்துகொண்ட சங்க காலமாகும். இந்த நூலுக்கு மலையாள மற்றும் தமிழ் எழுத்தாளர் ஜெயமோகன் முன்னுரை எழுதியிருந்தார். இதன் தமிழ் மொழிபெயர்ப்பு நூலுக்கு முன்னுரை எழுதிய சிறந்த தமிழ் எழுத்தாளர் நாஞ்சில் நாடன் அவர்கள் இந்த நூலை மலையாளத்தில் எழுதிய தமிழ் நாவல் என்று பாராட்டினார். பிரபஞ்சன், பொன்னீலன், அ.மாதவன், வண்ணதாசன், ஜோடிகுரூஸ், சு. வெங்கடேசன் போன்ற எழுத்தாளர்கள் அனைவரும் நாவலுக்கு நேர்மறையான கருத்துக்களை எழுதியிருந்தனர். ராம் தங்கம் என்ற நல்லுள்ளம் கொண்ட சிறுகதை எழுத்தாளர் நூற்றுக்கும் மேற்பட்ட பிரதிகளை வாங்கித் தனது நண்பர்களுக்கு வழங்கினார்.

கே.வி. ஜெயஸ்ரீ மொழிபெயர்ப்பில் சாகித்ய விருது பெற்றதுதான் இந்த நூலின் சிறப்பம்சம். தமிழில் மொழிபெயர்க்கப்பட்டபோதுதான் இந்த நாவல் முழுமை பெற்றது. தமிழகத்தில் ஒரு விவாதம் நடப்பதாய் ஜோடி குரூஸ் சொன்னார். சங்க காலம் குறித்த ஒரு நாவல் மலையாளத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இது தமிழன் அல்ல ஆதித்தமிழன் எழுதியது என்றார். ஆம் மலையாளி ஆதித்தமிழன் தான்.

தமிழின் பலவிதமான கலித்துறைகள், யாப்பினங்கள், மலையாள முஸ்லீம்களின் மாப்பிள்ளைப் பாடல்கள் எனப் பலதரப்பட்ட பழந்தமிழ் இலக்கியங்களின் அடிப்படைக் கூறுகள் மலையாளக் கலை வடிவங்களில் இன்னும் அப்படியே இருக்கிறது. இசைத்தமிழ் சார்ந்த தமிழ்ப்பண்கள்தான் கேரளாவின் நாடகங்கள் கதகளி போன்ற கலைகளில் சங்கீதங்களில் காணப்படுகின்றன.



திருமுருகாற்றுப்படையில் கூறப்பட்டிருக்கும் கருவி இசைகளும் கூத்து முறை கலந்த விளக்கக் காட்சிகளும் பலவிதக் கேரள நாட்டுப்புறக் கலைகளில் தெரிகிறது. இப்படி சங்ககாலத்தில் தொடங்கப்பட்ட கலாச்சாரம்தான் கேரளாவிலும் அடிப்படையாக இருந்துவருகிறது.

உள்ளூர் கலாச்சாரங்கள் வாழ்வதற்குப் போராடிக்கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்தில் இத்தகைய சிந்தனை முக்கியமானது. அத்தகைய கலாச்சாரங்களில் ஒருவரை ஒருவர் அறிவதும் மனிதர்களிடையே அன்பும் மரியாதையும் செலுத்துவது முக்கியம்..” எனப் பேசிய அவர் மலையாளம் தமிழ் இரண்டு நிலங்களின் கலாச்சாரமும் அன்பும் ஒன்றாய்க் கலந்திருக்க வேண்டிய அவசியத்தையும் அதன் தொன்மத்தின் உறவு

# படைப்பிலக்கிய விருதுகள்











# கலை, இலக்கிய, பண்பாட்டு விருதுகள்















# கவிச்சுடர் விருதுகள்

















# கவிச்சுடர் விருதுகள்









இன்னும் இறுகப்பற்றி வளர வேண்டும்” என்றும் பேசினார்.

எழுத்தாளர் வேல ராமமூர்த்தி அவர்களின் உரையில் “இடையில் நான் சினிமாவுக்குச் சென்றதால் எழுத்தை நிறுத்திவிட்டேனா என என்னைப் பலரும் கேட்டார்கள். அது ஒருவகையில் உண்மையென்றாலும் சினிமாவைவிட எனக்குப் பிறந்த இடம் என்பது எழுத்துதான். நடிகனல்லாது நான் ஒரு எழுத்தாளனாய் எழுதும்போது முதலிலிருந்து கடைசி முற்றுப்புள்ளி வைக்கும் வரை அது எனது சுயம்பு. நடிப்பு என்பது வேறு ஒருவரால் இயக்கிக் கையாளப்படுகிறது. எப்போதும் எனக்கு நடிப்பதை விட எழுதும்போது இருக்கும் அந்த ஒரு கணம் ஞானியின் தவ நிலைக்கு ஒப்பானதொரு இடமாகும். பேனா பிடித்து எழுதும்போது இருக்கும் உணர்வுக்கும் அதில் கிடைக்கும் நிறைவுக்கும் இந்த உலகத்தில் விலையே இல்லை..” என்று பேசினார்.


- அடுத்த இதழிலும் கொண்டாட்டம் தொடரும்

ஆய்வுக் கட்டுரை

பகுதி - 2

த.விஜயலட்சுமி,
பேராசிரியர், தமிழ்த்துறை,
கேரளப் பல்கலைக்கழகம், திருவனந்தபுரம்.
ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்

# பெண்ணிய நோக்கில் எஸ்.ராவின் உறுபசி நாவல்



## பெண் உடல்

பெண் உடல் என்ற நுகர்பொருளைக் காலங்காலமாகக் கலை என்ற பெயரால் வர்ணித்துச் சிதிலப்படுத்தி, நுகர்ந்துவந்தனர் என்பதை நமது இலக்கியங்களிலும் சிற்பம், ஓவியம் போன்ற கலைகளிலும் காணலாம். அன்று படைப்பாளி பெரும்பான்மை ஆணாகவும் வாசகர் முற்றிலும் ஆணாகவும் இருந்தபோது மகடூஉ முன்னிலை போன்ற உத்திகளில் பெண்ணை முன்னிறுத்தி ஆணுக்கு ஆசைகாட்டித் தங்களது கலைப்படைப்புகளை உருவாக்கி வந்த ஒரு முறையை ஆண் படைப்பாளிகள் பின்பற்றி இருந்தனர்.

இன்று நிலை மாறிவிட்டது. இன்று படைப்பிலும் வாசிப்பிலும் பெண்கள் வந்துவிட்டனர். இருப்பினும் படைப்பாளர்கள் குறிப்பாக ஆண் படைப்பாளர்கள் ஒரு ஆண் வாசகனை மனதில் கண்டு தங்களது படைப்பை உருவாக்கும் மனநிலையிலிருந்து

இன்றும் மாறவில்லை என்பதைப் பல வேளைகளில் உணரமுடிகிறது. பெண் உடலை ஆங்காங்கே காட்சிப்படுத்தி வாசகர்களை கிளுகிளுப்படையச்செய்து தன்னோடு கூட்டிச்செல்லும் வெகுசனக் கதைசொல்லும் முறை இந்நாவலில் எவ்வாறு செயலாக்கம் பெற்றுள்ளது என்பதைக் காண்போம்.

பாத்திர வர்ணனை என்பது ஒரு பாத்திரம் குறித்த புரிதலை வாசகர்களுக்கு ஏற்படுத்துதல் என்ற நோக்கத்தோடு செய்யப்படுகிறது. **‘ஒரு ஆண் பாத்திரத்தை வர்ணிக்கும்போது அவனது திறன் சார்ந்த வர்ணனைகளும் பெண் பாத்திரத்தை வர்ணிக்கும்போது உடல் சார்ந்த வர்ணனைகளும் வருவதை இயல்பாக நாம் புனைவில் காணலாம்’** *(மேலது, பக்.53)* என்ற கருத்து இங்கும் பொருந்துவதாக அமைகிறது.

சம்பத்தும் அவனது மனைவியும் திருமணம் செய்து ஊரை விட்டு ஓடிப் போகின்றனர். அறிமுகம் இல்லாத ஒரு கிராமத்துப் பாதையில் கண்ணுக்கெட்டிய தூரம் வரை யாரும் இல்லை என்பதை உறுதி செய்துகொண்டு அங்கு அவளது சேலையை விரித்து மண் தரையில் படுத்து உறங்குகின்றனர். அந்தச் செய்தியை விவரிக்கும்போது,

**‘அவர்கள் இருவரும் ஒருவர் மீது ஒருவர் புரண்டு முயங்கி உடல் ஆசைகளைத் தீர்த்துக் கொண்டனர்’** *(உறுபசி, பக்.100)* என்று இருவரையும் கூறி புணர்ச்சி முடிந்ததும் வாசகருக்கு முன்னால் சம்பத்தின் மனைவி பாத்திரம் மட்டும் இழுத்துக் காட்டப்படுகிறது.

**‘அவள் கண்களைக் கைகளால் மூடிக்கொண்டு சிறிது நேரம் படுத்துக் கிடந்தாள். பிறகு தன் புடவையை எடுத்து மண்ணை உதறிக்கொண்டு கையில் தொடைகளில் புகுந்திருந்த மண்ணை துடைத்தபடியே சம்பத்திடம் யாரோ தொலைவில் வருவதாகச் சொன்னாள்’** *(மேலது, பக்.100).*


இந்த வர்ணனை மூலம் வாசகருடைய கவனம் அவளுடைய தொடை இடுக்குகளுக்குக் கொண்டு செல்லப்படுகிறது. அதே வேளையில் சம்பத்தின் தொடை இடுக்கு குறித்த செய்திகள் தவிர்க்கப்பட்டுள்ளன. இதே உத்தி அடுத்த பக்கத்திலும் பயன்படுத்தப்படுகிறது.

**‘சம்பத்தும் அவளும் அந்த வீட்டின் வெறும் தரையில் படுத்துக்கொண்டார்கள். அன்று இரவு யானை நிலம் அதிர நடந்து செல்வது போல அவள் உடலின் மீது இயங்கிக்கொண்டிருந்தான் சம்பத். அவளுக்குத் திடீரெனக் குருதிப் பெருக்கு ஏற்பட்டது,’** *(மேலது, பக்.101)* என்பதோடு முடிக்காமல் இப்போது புகைப்படக் கருவியின் குவியம் சம்பத்தை விட்டுவிட்டு அவனது மனைவியின் மீது பதிகிறது.

**‘அவளது பாவாடை மற்றும் புடவையில் கூட ரத்தம் படிந்து போனது. அவள் தொடைகளுக்கு நடுவில் வழியும் ரத்த பிசுபிசுப்போடு படுத்துக்கிடக்கிறாள்’** *(மேலது, பக்.101)* என்று சம்பத் செய்த வன்புணர்ச்சியோடு சேர்த்து வாசகர்களின் வன்புணர்ச்சிக்கும் ஜெயந்தியின் உடல் உட்படுத்தப்படுகிறது. சம்பத்தின் நிலை என்ன என்ற விளக்கம் முனைப்போடு தவிர்க்கப்படுகிறது. கடுமையாகப் புணர்ந்தபோது அவனது உறுப்புகளுக்கு ஏதாவது பாதிப்பு ஏற்பட்டதா என்ற ஐயங்களுக்கு விடையில்லை. இந்த ஆணுடல் விடுபடலும் பெண்ணுடல் காட்சிப்படுத்தலும் ஏதேச்சையாக நடந்தவை என்று கருத வாய்ப்பில்லை.

சம்பத் வேலை செய்த இடத்தில் கையாடல் செய்து பிடிபட்டு ஊரை விட்டு மனைவியோடு ஓடுகிறான். இருவரும் ஒரு காகிதக் குடோனில் ஒளிந்து இருக்கின்றனர்.

**‘அந்த நான்கு நாட்களும் சம்பத் மிக ஆவேசத்துடனும் வெறி கொண்டது போலவும் அவளோடு உடலுறவு கொண்டபடியே இருந்தான்’** *(மேலது, பக்.102)* என்று நிகழ்வைக் கூறிவிட்டு வழக்கம்போல் அவனை விட்டுவிட்டுப் பெண் உடலில் வாசகர் கவனம் குவிக்கப்படுகிறது.




***'பல வேளைகளில் அவள் தன்னை மறந்து உடலைத் திறந்து கிடந்தாள்,'*** *(பக்.102) என்று அவள் உடல் நிர்வாணப்படுத்தப்பட்டு வாசகர் முன்பாக காட்சிப்படுத்தப்படுகிறாள்.*

*உறுபசி நாவலின் தொடக்கம் முதல் இறுதி வரை ஒரு குறிப்பிட்ட பக்க இடைவெளிகளில் இது போன்று பெண்ணுடல் காட்சிப்படுத்தப்படுதல் வாசகர்களுக்கு உறுதி செய்யப்பட்டுள்ளது. (உதா.பக்.11, பக்.22, பக். 31, பக்.45, பக். 58.........).*

*ஒரு இடத்தில் 20 பக்க இடைவெளிக்குப் பிறகும் கதைப்படி பெண்ணுடல் காட்சிப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு இல்லாமல் போனபோது சம்பத் தான் பணி செய்யும் பத்திரிக்கையில் வந்த ஒரு செய்தி ஒன்றைக் கூறுவது போல் பெண் உடல் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.*

***'ஒரு பெண் மருத்துவரை அவரது உறவுக்காரப் பையன் வெட்டிக் கொன்றிருக்கிறான். கொன்ற பிறகு அவளோடு உடலுறவு கொள்ளலாம் என்று அவனுக்குத் தோன்றியிருக்கிறது'*** *(பக்.30). அவன் பிணத்தைப் புணர்ந்திருக்கிறான் என்று கூறி இருக்கலாம். அவ்வாறு கூறினால் வாசகருக்கு ஒரு இரக்க உணர்வுதான் ஏற்படும். அதைத் தவிர்த்து,*

***'அவளது பாவாடையை இரண்டாகக் கிழித்துவிட்டு அவள் மீது இயங்கியிருக்கிறான். அந்த மருத்துவரின் நிர்வாண உடலில் வெட்டுக்காயங்கள் பிளந்திருந்தன'*** *(பக்.130) என்று வர்ணிக்கப்படுகிறது. பாவாடை கிழிக்கப்பட்டு நிர்வாணமாக்கப்பட்ட பெண் உடலை வாசகருக்குக் காட்சிப்படுத்திக் கதையில் வந்த தொய்வை மாற்றுவதற்கான உத்தி கையாளப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.*

*மருத்துவமனையில் சில மாதங்களாகச் சம்பத் படுக்கையில் கிடக்கிறான். அங்கு அவன் மனைவி சரியான உணவு கூட இல்லாமல் மெலிந்து, உலர்ந்து வெடித்த உதடுகளோடு இருக்கிறாள். அந்த வேதனையான மனநிலையில் கூட,*

***'அவளது மார்பு விலகி இருப்பதை அவனது கண்கள் தானாகப் பார்த்துக்கொண்டே இருந்தன'*** *(பக்.22) என்று வாசகரின் முன் அந்தப் பெண்ணின் மார்பு திறந்து காட்டப்படுகிறது.*

*ஒரு குறிப்பிட்ட பக்கங்கள் வரை பெண் உடலோ பெண் வர்ணனையோ கதைப்படி வரவில்லை என்பதால் கதையோடு தொடர்பே இல்லாமல் பேருந்து நிலையத்தில் கைக்குழந்தையுடன் ஒரு பெண் வருவதாகவும் அவளும் அவளது குழந்தையும் எவ்வாறு அழகாய் இருந்தனர் என்றும் வர்ணித்துச் சொல்லப்படுகிறது. அதே பேருந்து நிலையத்தில் நூற்றுக்கணக்கான ஆண்கள் வந்து போவதையோ அவர்களது உடல் வருணனைகளோ காட்டப்படவில்லை.*

*நாவலில் இந்த இடைவெளிகளை*

நிறைக்கத் தொடர்பற்ற பல பெண்ணுடல் செய்திகள் இடம்பெற்றுள்ளன. சம்பத்தின் மரணத்தின் தாக்கத்தைப் போக்க நண்பர்கள் மூவரும் ஒரு மலைப்பயணம் செல்கின்றனர். அங்குப் பெண்ணுக்கோ பெண் வர்ணனைக்கோ வாய்ப்பில்லை என்பதால் மிகப் புத்திசாலித்தனமாக ஒரு பப்பாளி பழத்தைத் தின்னும்போது அழகர் என்ற பாத்திரத்திற்குப் பெண்களின் கர்ப்பம் கலைவதற்கு இந்தப் பழம் எவ்வாறெல்லாம் பயன்படுகிறது என்ற சிந்தனை வருவதாகக் கூறிப் பெண் உடல் காட்சிப்படுத்தப்படுகிறது.

பெண்ணுடலைக் காட்சிப்படுத்தலின் தொடர்ச்சியாக சம்பத்தின் நண்பன் மாரியப்பனின் இளமைக்கால நினைவுகளைக் கூறும் இடத்தில், 'தீக்குச்சி டான்ஸ்' என்ற ஒரு நிகழ்வு கூறப்படுகிறது. ஒரு இருண்ட அறைக்குள் ஒரு இருபது வயது பெண் நிர்வாணமாக நிறுத்தப்படுகிறாள். அதைப் பார்க்க ஐந்து ரூபாய் கொடுத்து ஒரு தீக்குச்சியைப் பெற்று உள்ளே செல்கின்றனர். உள்ளே போய் தீக்குச்சியை உரசி அந்த வெளிச்சத்தில் அவளது உடலை மேலிருந்து கீழாகப் பார்த்து ரசிக்கின்றனர் விடலைப் பையன்கள். அதன் பிறகு அவளது உடலை மனதில் நினைத்துக்கொண்டு கடற்கரையில் இரண்டு பையன்களும் ஓரினப் புணர்ச்சியில் ஈடுபட்டதாகக் கூறிப் பெண் உடல் காட்டப்படுகிறது.

அதுபோலவே மலைப்பயணம் போகும்போது அங்கு மலையில் தனிக்கட்டையாகச் செட்டியாரின் வீட்டில் வாழும் இன்னாசி என்ற 42 வயது வேலைக்காரனின் எலுமிச்சம்பழம் பொறுக்க வரும் பெண்களுடனான காமக் கேளிக்கைகள் கூறப்பட்டு வாசகர்களது கிளுகிளுப்பைச் சோடை போகாமல் காத்து முன்னேறுகிறது கதை.

நாவலின் இறுதிக்காட்சியில் சம்பத்தின் மனைவியும் நண்பர்களும் சம்பத்தினுடைய அஸ்தியைக் கடலில் கரைப்பதற்காகச் செல்கின்றனர். அழகரும் மாரியப்பனும் கரையில் நிற்கின்றனர். ராமதுரையும் ஜெயந்தியும் அஸ்தியை எடுத்துக்கொண்டு கடலுக்குள் செல்கின்றனர். அதை ஆசிரியர்,

***'கடல் சீறிக் கொண்டிருந்தது. அவளும் கூடவே நடந்தாள். தண்ணீர் அவள் புடவைக்குள்ளாக ஊடுருவித் தொடையை நனைத்தது'*** *(பக்.153) என்று எழுதுகிறார்.*

கடலுக்குள் இருவரும் நடக்கும்போது பெண்ணின் தொடை மட்டும் நனைந்ததாகச் சொல்லி அந்த நனைவு ராமதுரைக்கு என்ன உணர்வுகளை ஏற்படுத்தியது என்பதைத் தவிர்த்து அவளுடைய தொடை நனைந்தபோது அவளுக்கு ஏற்பட்ட எண்ணமாக, ***'ஏனோ சம்பத்தோடு அவள் கூடிய இரவுகள் நினைவுக்கு வந்தன'*** என்று எழுதியதின் படைப்பரசியல் புரியக்கூடியதாக உள்ளது. ஒரு பெண்ணின் உடலைக் குறித்து எழுதி வாசகர்களின் கவனத்தை அவளது தொடைக்குக் கொண்டு சென்றமையும் ஆசிரியரின் பெண் உடல் சார்ந்த நிலைப்பாட்டையும் இது காட்டுகிறது.

••

## பாலியல் அரசியல்

பாலியல் உணர்வு என்பது இரு பாலினருக்கும் இயல்பாகவே உள்ளதாகும். ஆனால் பல காலங்களாகப் பாலியல் இச்சை என்பது ஆணுக்கு மட்டுமே உரியது என்றும் பெண் தனது இச்சையைக் கூறவோ விரும்பவோ கூடாது என்றும் கட்டமைக்கப்பட்டுள்ளது.

***'தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல் எண்ணுங்காலை கிழத்திக்கில்லை'*** *(தொல். பொருள்.116).*

அவளது பாலியல் விருப்பங்களைக் குறிப்புகளாக, உடல் மொழியாக மட்டுமே இயல்பு வாழ்விலும் புனைவிலும் காட்ட வேண்டும் என்று தொல்காப்பியர் காலத்திலேயே வரையறுக்கப்பட்டுள்ளது. இந்த

வரையறையை இன்று 21ஆம் நூற்றாண்டிலும் பல படைப்பாளர்கள் தலைமேற்கொண்டு பின்பற்றி வருகின்றனர். மேலும் புணர்ச்சியில் பெறுபவன், மகிழ்பவன் ஆண் என்றும் கொடுப்பவள், இழப்பவள், துன்பமடைபவள் பெண் என்றும் ஒரு பொதுப் புரிதலைத் தந்தையதிகாரச் சமூகம் கட்டமைத்துள்ளது. இந்த ஒடுக்குமுறை உத்தி பல கலை வடிவங்களில் செயலாக்கம் பெறுகிறது. இங்கும் பாலியல் இச்சை, புணர்ச்சி என்பதில் உச்சகட்டமான இன்பத்தைப் பெறுபவன் ஆண் என்றும் எதிர்பாலினமான பெண் தாங்கொணாத வலியையும் காயங்களையும் மட்டுமே பெறுகிறாள் என்றும் திரும்பத் திரும்ப உறுபசி நாவலில் சொல்லப்படுகிறது.

ஜெயந்தியின் திருமணத்திற்கு முன் அவளது அப்பா கேரளாவில் இருந்து பத்மஜா என்ற திருமணமான, ஒரு குழந்தை உள்ள பெண்ணைக் கூட்டி வந்து மீண்டும் மணம் செய்துகொள்கிறான். பகலில் ஜெயந்தி வேலைக்குப் போய்விட்டு வீட்டுக்கு வரும்போது,

**'கதவு மூடப்பட்டிருக்கும். அவர்கள் இருவரும் பகல் புணர்ச்சியில் ஈடுபட்டு இருப்பார்கள். அந்தப் பெண் வலியால் கத்துவது கேட்கும்'** (பக்.94) என்று பெண்ணுக்கு வலி கட்டமைக்கப்படுகிறது.

சம்பத் அவளது மனைவியைப் புணரும்போதெல்லாம் வெறித்தனமாகப் புணர்வதாகவும் அவள் வலியால் துடிப்பதாகவும், ரத்தப்போக்கு ஏற்படுவதாகவும் வன்புணர்வுக்கு ஒப்பான காட்சிகள் வர்ணிக்கப்படுகின்றன.

பாலியல் அரசியல் குறித்து மிக விரிவான ஆய்வு செய்த கேட் மில்லட்,

**'குறுகிய கால அளவில் ஆண்களால் ஒன்றுக்கு மேற்பட்ட இன்ப உச்சத்தை அடைய முடியாது. ஆனால் பெண்ணால் ஐந்தாறு முழு இன்ப உச்சங்களை சில நிமிடங்களில் அடைய முடியும்'** (2021, பக்.230) என்று அறிவியல் முறையிலேயே நிரூபிக்கப்பட்டுள்ளது என்பதை விளக்குகிறார்.

உண்மை இப்படி இருக்க எதற்காகக் காமத்தைப் பெண்ணுக்கு விரும்பத்தகாத ஒன்றாக ஆண்கள் கட்டமைக்கின்றனர்? **'ஆணுக்குப் பாலியல் என்பது அவனது ஆளுகைக்குள் அடக்கி வைக்கப்பட்ட ஒன்று. ஆனால் பெண்ணுக்கு இது ஆணால், பிறரால் அடக்கி ஒடுக்கப்பட்ட ஒன்று. ஆணின் பாலியல் பெண்ணை ஆள்வது பெண்ணின் பாலியல் அதற்குள் அடங்குவது. ஆளுதல் அடங்குதல் என்ற அரசியல் உறவு பூண்டுள்ளது பாலியல்'** (ராஜகௌதமன், 2018, பக்.353) என்று தந்தையதிகாரப் பாலியல் அதிகாரத்தை விளக்குகின்றனர். இவ்வாறு தந்தை அதிகாரச் சமூகம் கட்டமைத்துள்ளதால் அதை நிலைநாட்டும் வகையில் பிரதிகளில் பாலியல் காட்சிகள் கட்டமைக்கப்படுகின்றன என்பது விளங்கும்.

மட்டுமல்லாமல் பெண் காமத்தில் இன்பம் இருப்பதாக உணர்ந்துகொண்டால் அதை அனுபவித்தல் என்பது அவளது உரிமை என்று புரிந்துகொண்டால் இன்று தந்தை அதிகாரச் சமூகம் கட்டமைத்துள்ள ஒழுக்க முறைகளை உடைத்தெறிந்துவிட்டு அவள் காமத்தின்பால் சென்றுவிடுவாள் என்ற ஆண்களின் அச்சமே கற்பு போன்ற கருத்தாக்கங்களையும் காமம் வெறுக்கத்தக்கது, வலி தருவது என்ற புரிதலையும் திரும்பத் திரும்பச் சொல்ல வைக்கிறது. உறுபசி நாவலும் இதையே செய்துள்ளது.

காமம் வலி என்று கட்டமைத்துவிட்டு அப்படிப்பட்ட காமத்தை அதே பெண்கள் விரும்புவதாகக் காட்டிச் செல்வது முரணாக இருக்கிறது. வலியை, காயத்தை, ரத்தப்போக்கைக் காமத்தில் கட்டமைத்துவிட்டு அந்தக் காமத்திற்கு அதே பெண் ஏங்குவதாகக் காட்டிச் செல்வது முன்னுக்குப் பின் முரணாக இருக்கிறது.

சம்பத் மருத்துவமனையில் நினைவற்றுச் சில மாதங்களாகக் கிடக்கிறான். அவனது

மனைவி பகல் வேளையில் உணவு சமைக்க வீட்டுக்கு வருகிறாள். சிறிது நேரம் தரையில் படுத்து மின்விளக்கைப் பார்த்துக்கொண்டு கிடக்கிறாள். அப்போது,

**‘அவள் அறியாமல் உடம்பில் காமம் மெல்ல நெளியத் துவங்கும்’ (பக். 110) என்றும் வேறொரு இடத்தில் ‘அவள் அறியாமல் அவளது உடலில் காமம் துளிர்க்கத் துவங்கி இரவு தூக்கம் வராமல் போய்விடும்’** (பக். 94) என்றும் கடல் நீர் தொடையில் தட்டியபோது சம்பத்துடனான காமம் நினைவுக்கு வந்ததாகவும் எழுதுகிறார். இவையெல்லாம் முன்னுக்குப் பின் முரணாகக் கட்டமைக்கப்பட்டுள்ளன.

••

## அதிகாரப் பராமரிப்பு

**‘ஆளும் பால் ஆளப்படும் பால் மீது தனது அதிகாரத்தைப் பராமரிக்க முயல்கிறது’** (சாரக்காம்பிள்-டோரில் மோய் (2001) மொ.பெ. ராஜ் கௌதமன் (2011), பக். 44) என்ற கேட் மில்லட்டின் கருத்துக்கேற்ப ஆளும் பாலான ஆண்பால் ஆளப்படும் பாலான பெண் பாலின் மீது தமது அதிகாரத்தைப் பல புள்ளிகளில் செலுத்திக்கொண்டே இருக்கிறது. இந்த அதிகாரப் பராமரிப்பு வாழ்வியலின் அனைத்துக் கூறுகளிலும் பரவலாக்கம் பெற்றுச் செயல்படுத்தப்பட்டு வருவதைக் காணலாம். தந்தை அதிகாரச் சமூகத்தில் வளர்க்கப்பட்ட ஒவ்வொரு ஆணும் இதை மிகச் சாதுரியமாகச் செயல்படுத்துவதைக் காணமுடியும்.

இதன் தொடர்ச்சி என்ற நிலையில் ஒரு ஆண்பால் படைப்பாளி தாம் படைக்கும் படைப்பில் வரும் பெண் பாத்திரங்கள் மீது பாலின அதிகாரத்தைச் செலுத்துவதைக் காணலாம். இவ்வாறு செலுத்தப்படும் அதிகாரம் பல நிலைகளில் பிரதியில் வெளிப்படும். பெண் வெறுப்பாகவும், பெண் உடல் மீதான தாக்குதலாகவும், பெண்ணின் எதிர்வினைகளுக்கு வாய்ப்பளிக்காமல், அவளது சிந்தனைகளைக் கூறவிடாமல் மறுக்கப்பட்ட உரையாடல்களாகவும், பெண் ஒரு இரண்டாம் நிலை உயிரி என்ற நிலையிலும் படைத்து ஆசிரியர் உலவ விடுவதைக் காணமுடியும்.

இப்படியான அதிகாரப் பராமரிப்பு மட்டுமல்லாமல் படைப்பு என்பது ஆண்பால் சார்ந்த ஒரு செயல்பாடு என்றும் அப்படைப்பைத் துய்த்தல் என்பதும் ஆண்பால்கள் மட்டுமே செய்யும் செயல் என்ற புரிதலில் படைப்பினுள் பெண் உடலை ஆங்காங்கே கடைச்சரக்காக, நுகர்பொருளாக வர்ணித்து வாசகரைக் கிளுகிளுப்பாக்கி தன்னோடு அழைத்துச் செல்லும் ஒரு படைப்பு உத்தியைப் பல முன்னிலைப் படைப்பாளர்கள் செய்துவருகின்றனர். இதுபோன்ற பாலினப் படைப்பதிகார உத்திகள் உறுபசி நாவலில் கையாளப்பட்டுள்ள முறையைக் காண்போம்.

••

## ஆசிரிய அதிகாரப் பராமரிப்பு

ஒரு படைப்பாசிரியர் தாம் உருவாக்கும் படைப்பின் மீது ஒரு வகையான சர்வாதிகாரத்தை நிலைநாட்டுகிறார். அந்தப் படைப்பின் ஒவ்வொரு கூறிலும் தனது விருப்பு வெறுப்புகளைப் பதிவுசெய்து போகிறார். அதில் வரும் கதை, பாத்திரங்கள், நிகழ்வுகள், சொல்முறை என அனைத்தின் மீதும் ஒருவகையான அதிகாரத்தைத் தக்க வைக்கிறார். இதையே ஆசிரிய அதிகாரம் என்று எனது நூலில் குறிப்பிட்டுள்ளேன் (2020, பக் 52). புனைவில் வரும் 12 வகையான ஆசிரிய அதிகாரத்தை எனது நூலில் அடையாளப்படுத்தி உள்ளேன். அவற்றில் சிலவற்றை இங்குக் காண்போம்.

••

## பாத்திரப் படைப்பு

ஒரு படைப்பில் பாத்திரப் படைப்பு என்பது மிக இன்றியமையாத செயல்பாடாகும். ஒவ்வொரு பாத்திரத்தையும் ஆசிரியர் உருவாக்கும்போது அதற்குப் பின்னால் பல உளவியல் காரணங்கள் செயல்படுவதையும்



உணரமுடியும். 'குறிப்பாக ஒரு பெண் பாத்திரத்தை ஆசிரியர் படைக்கும்போது அந்தப் பாத்திரத்தினுடைய நடை, உடை, பாவனைகள், குணநலன்கள் போன்றவற்றில் ஆசிரியருடைய முடிவுகள் அவரது பெண் குறித்த நிலைப்பாட்டை விளக்குபவையாக இருக்கும்' (த. விஜயலட்சுமி பக்.53) என்ற கருத்தின்படி உறுபசி நாவலின் கதாநாயகியான ஜெயந்தி பாத்திரத்தை அணுகிக் காண்போம்.

ஜெயந்தியின் தொடைகளும் அடிவயிறும் மார்புகளும் வெடித்த உதடுகளும் பட்டினியால் மெலிந்த உருவமும் மட்டுமே வாசகர்களுக்குத் தெரிந்துகொள்ள முடிகிறதே தவிர அவள் எப்படி இருப்பாள் என்பதை எஸ்.ரா நாவலில் எங்கும் வர்ணிக்கவில்லை. ஒருவேளை பெண்ணுடல் என்பதே காமத்திற்கான நுகர்பொருள்தானே என்ற புரிதலில் அதற்கான உறுப்புகள் மட்டும் அறிமுகப்படுத்தப்பட்டிருக்கலாம்.

ஜெயந்தி தாய் இல்லாத பெண். தந்தை வயதான காலத்தில் ஒரு பெண்ணை மணம் செய்து வந்து ஜெயந்தியின் இருப்பைக் கூட சட்டை செய்யாமல் தனது காம வெறியைத் தீர்த்துக்கொள்பவன். இவ்வாறு தமது தந்தையின் காமத்தால் பிரச்சனையில் தவிக்கும் ஜெயந்தியை சம்பத் தன்னைத் திருமணம் செய்ய விருப்பமா என்று கேட்டபோது அவள் அதற்குச் சம்மதித்து அவனுடன் ஓடி வந்துவிடுவதாகக் கதை பின்னப்படுகிறது. அவள் சம்பத்துடன் வந்த நாள் முதல் அவனது அஸ்தியைக் கரைக்கும் நிமிடம் வரை ஜெயந்தி எந்தவிதமான மகிழ்ச்சியையும் அனுபவித்ததற்கான செய்திகளே நாவலில் இல்லை.

சம்பத் ஒரு மனநோயாளி. எப்போது எப்படி நடந்துகொள்வான் என்று தெரியாது. காம வெறி பிடித்தவன். வேலை வெட்டி இல்லாமல், காசு பணம் இல்லாமல் சுற்றுபவன். மனம் போன போக்கில் அலைபவன். அவனோடு ஜெயந்தியும் அலைந்துகொண்டிருக்கிறாள். அவனது ஆசைகள், நிபந்தனைகள், வறுமை என எல்லாவற்றிற்கும் இசைந்து நடக்கிறாள். ஓரிடத்தில் கூட அவனை எதிர்த்துப் பேசியதில்லை. அவனது குறைகளையோ குற்றங்களையோ யாரிடமும் சொல்வதில்லை. இதைக் குறித்து அவள் மனதளவில் கூட வெறுப்பாக எண்ணுவதோ, தான் எடுத்த முடிவு தவறாகிவிட்டது என்று புலம்புவதோ கிடையாது. இக்காரணங்களுக்காக அவனை விட்டுப் பிரியவும் இல்லை. அவனது மரணம் வரை அவனுக்குச் சேவை செய்கிறாள் என்று படைத்துக்காட்டப்படுகிறாள்.

இப்படியான பெண் நமக்கு ஒன்றும் புதியவள் அல்ல. இந்தப் பெண்களை ஒரே வகைமாதிரிகள் (Stereotypes) என்று பெண்ணியம் வகைப்படுத்தும். சத்தியவான் சாவித்திரி, நளாயினி, சந்திரமதி, கண்ணகி போன்ற பாரம்பரியமான கற்புக்கரசிகளில் இப்பெண்களைக் காணலாம்.

கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்று வாழும் ஒரு பெண்ணை மனைவியாகப் பெறுவது எக்காலத்திலும் ஒரு ஆணின் கனவு, எதிர்பார்ப்பு ஆகும். அப்படியான ஒரு பெண்ணை நாவலில் படைத்து உலவ விடும்போது இன்றைய சூழல், வாசகர்களின் மனநிலை, தருக்கம், எதார்த்தம் என்பவற்றையும் மனதில் கொண்டு செயலாக்கம் செய்திருக்க வேண்டும். எனில் அது பொருத்தமாக இருந்திருக்கும். ஆனால் இங்கு வாசகர் மனதில் ஜெயந்தியைக் குறித்து முரணான, ஏளன உணர்வே ஏற்படுகிறது.

- வளரும் ■

# அகதி நதி!

இந்த முகநூல் பக்கமும்
நாளை முடங்கிப்போகலாம்
நம்பிக்கை மீதிருக்கும் நம்பிக்கையும்
இல்லையென்றாகிற்று

நதியாய் நகர்ந்து சென்று
ஆழியுள் அகப்பட்ட தவிப்பில்
உப்பு கரிக்கிறது வாழ்வு

நானின்று சர்வதேச யாசகன்
எரித்துச் சாம்பலாக்கியவர்களிடம்
எதுவும் கேட்க நாதியற்று
கை ஏந்திக்கொண்டிருக்கிறேன்

புகைந்துகொண்டிருக்கும்
காலத்தில் என் கால்கள்
புதைந்தபடி இன்னும்...இன்னும்

மீட்சியற்றும் சாட்சியற்றும்
ஈறாகும் போக்கில்
இருப்பைத் தக்கவைக்க நான்
இன்னும் பலருடன்
புழுங்கி வெந்த மனதை
பசியாற்றிக்கொண்டிருக்கிறேன்

அவிழ்க்கமுடியாத
மர்ம முடிச்சுகளில்
இறுகியும் மூடியும்
எல்லா வழியும்
இன்று இயலாவாளியாய்
விழிகளுக்குள்ளேயே
அடங்கி விம்மியபடி
காட்சிக்கு வராமம்
மண்மீதான கனவுகள்

ஒத்தி ஒத்தித் தள்ளிவைக்கும்
ஒத்திகைகளில் பொழுதுகள்
உறவுப் பாடலில் தணிந்து
குரல் கசிய விம்மியபடி
மின்மினிகளின் சிறகசைப்பில்
ஊசலாடும் உயிர்ப் பூ

இறுதிச் சமிக்கையைச் சமர்ப்பித்து
கடைசி ஒளித்துளி
தூர்ந்து அணைய
துலாமிடுகிறது காலம்

ஒரு விருட்சத்தை
இழுத்துச் செல்லும்
சிற்றெறும்பின் திராணியுடன்
பேரடவியில் திக்கற்று
இருளைச் சமீபித்து நகரும்
அகதி நதி நான்!

- ரோஷான் ஏ.ஜிப்ரி – இலங்கை.

இருவருக்கு மட்டுமே
இடமிருக்கும் வீட்டில்
திடீரென முளைக்கிறது
பேரமைதியொன்று
ஆக்டோபஸ் கரங்களால்
வீட்டின் எல்லா மூலைகளையும்
ஆக்ரமிக்கத் தொடங்குகிறது
எனையன்றி யார் கண்ணுக்கும் தெரியாமல்
பகிரங்கமாகப் பின்தொடர்கிறது
கண்விழிக்கும் நொடியில்
கோரமுகம் காட்டிப் பயமுறுத்த
இரவெல்லாம் உறங்காமல்
அருகிலேயே அமர்ந்திருக்கிறது
இருவருக்கு மட்டுமே
இடமிருக்கும் வீட்டில்
இப்போது புதிதாய்
ஏதோ ஒன்று உடைந்திருக்கிறது
ஏதோ ஒன்று முளைத்திருக்கிறது

- தீபிகா நடராஜன்

ஒரு நொடியை
யாருக்காகவும்
கூட்டுவதுமில்லை
குறைப்பதுமில்லை

எதற்காகவும்
யாரையும்
நகைப்பதுமில்லை
பகைப்பதுமில்லை

யாருக்காகவும்
நிற்பதுமில்லை
நடப்பதுமில்லை
பறப்பதுமில்லை

சிலருக்குப் போதவில்லை
சிலருக்குப் போகவில்லை

விரும்பினால்
சிக்கிக்கொள்கிறது
வெறுத்தால்
விலகிக்கொள்கிறது

ஒரே அளவுகோல்தான்
சிலருக்கு
சுகமாய்க் கழிகிறது
சிலருக்கு
சுமையாய்க் கனக்கிறது

ஆண்டாண்டு காலமாய்
தேடிக்கொண்டேயிருந்தேன்
அதன் அதிசயக் கால்களை...

என் ஒவ்வொரு அசைவிலும்
ஒளிந்தே இருக்கும்
அதன் தனித்துவம் புரிந்தபோது
நானே வெட்கப்பட்டுக்கொள்கிறேன்
எனக்குள்...

அதையும்
கண்டுகொள்ளவேயில்லை
காலம்...

• ஐ.தர்மசிங்

மறுபடியும் பொறுமை காத்து
அன்பை விரித்து
சம்மணமிட்டு அமர்ந்து
தியானம் செய்ய
மடியிலேயே எரிந்து விழுகிறது
இனி மீட்டெடுக்க முடியாத
உன் நட்சத்திரச்சொல்

குளிர்ந்த இரவு
கொஞ்சம்கூடக் கண்ணைத் திறக்கவில்லை.

சடசடவென்ற சத்தத்துடன்
சாம்பலாகிறது
உன் சொ(ற்)க்கப்பனை

திருவிழா முடிந்து
நிலை சேர்ந்துவிட்டாள் அம்மன்

வேறு வழியில்லை
அடுத்த காப்புக்கட்டு வரை
அமைதியாய் இரு.

• மா. காளிதாஸ்

சீரியல் பல்புகள்
மின்னுகிற மண்டபத்தின்
முன்னே
இளையராஜாவின் பாடல்
பெரிய ஸ்பீக்கரில்
ஒலித்துக்கொண்டிருக்கிறது
வான வேடிக்கை,
மேளதாளங்களோடு
மாப்பிள்ளை பெண்ணை
குதிரை வண்டியில்
கூட்டி வருகிறார்கள்
மண்டபத்துக்கெதிரே
மூங்கில் கூடை
பின்னிக்கொண்டிருப்பவரின்
குழந்தைகள்
இங்குமங்கும்
ஓடியாடி
கல்யாண சந்தோஷத்தை
காட்டுகிறார்கள்...

• ச.ஜெய்

● மு.முருகேஷ்

# கவிதைக்குள் கலந்திருக்கும் கதை



*1970*களிலும் 80களிலும் கவிதை பற்றிய உரையாடல்கள், கட்டுரைகளில் தவறாமல் இடம்பெற்ற கவிதையொன்று உண்டெனில், அது 'நெம்புகோல் கவிதை' தான்; எழுதியவர் கவிவேந்தர் மு.மேத்தா.

இந்தக் கவிதையைக் கேட்கிற / வாசிக்கிறபோதெல்லாம் என்னை நோக்கியே விரலை நீட்டுவதான உணர்வே உண்டானது. 'ம்... நாம்தான் அந்தக் கவிதையை எழுதப்போகிறோம்' என்கிற நம்பிக்கையும் உள்ளெழும். எனக்கு மட்டுந்தான் இப்படியான உணர்வா என்றால் நிச்சயமாக இல்லை; என்னைப் போல் இந்தக் கவிதையை வாசித்த பலருக்கும் அப்படியான உணர்வே ஏற்பட்டது என்பதை அவர்களுடனான உரையாடல்வழி கண்டுகொண்டேன். இதோ... கவிதை;

**'வைகறைப் பொழுதுக்கு**
**வார்த்தைத் தவமிருக்கும்**
**வானம்பாடிகளே – ஓ**
**வானம்பாடிகளே!**
**இந்த**
**பூமி உருண்டையைப்**
**புரட்டி விடக்கூடிய**
**நெம்புகோல் கவிதையை**
**உங்களில்**
**யார் பாடப்போகிறீர்கள்?'**

முதல் வாசிப்பிலேயே நம் மனதில் அப்படியே ஒட்டிக்கொண்ட இக்கவிதை, கவிதையெழுதும்போதெல்லாம் நம்மருகே வந்து உட்கார்ந்துகொண்டு, நம்மை நோக்கி இந்தக் கேள்வியை எழுப்பிக்கொண்டே இருந்தது.

சொல்லலங்காரங்கள் ஏதுமின்றி இயல்பாக எழுதப்பட்ட கவிதை வரிகள் சில காலமெல்லாம் நம்மைக் கைப்பிடித்துத் தொடர்ந்து வரும். அதுவும் காதலைப் பற்றியதெனில் சொல்லவா வேண்டும்?

***‘நீ***

***நீயாகத்தான் இருக்கிறாய்;***

***நான்தான்***

***நானாக இல்லை.’***

*மு.மேத்தாவின் இந்தக் கவிதையை வாசித்தபிறகு, ‘யாரும் யாராகவும் இருப்பதில்லை’ என்பதான காதலுற்ற மனம் படும் அவஸ்தையை வேறு சொற்களில் எவராலும் இதை விடவும் அழுத்தமாகச் சொல்லிவிட முடியாதல்லவா..!*

*மேலோட்டமான பார்வையில் சாதாரணக் கவிதை போல தோற்றங்கொண்டிருந்தாலும் வாசித்து முடித்ததும், வாழ்வின் பெருஞ்சோகத்தை மொத்தமாய் ஆறே வரிகளில் கொட்டி வைத்துவிட்டதைப் போன்ற உணர்வினை உண்டாக்கும் மு.மேத்தாவின் கவிதையொன்று; கவிதையின் தலைப்பே பாதிப் பொருளைத் தந்துவிடுகிறது.*

***‘அரளிப்பூ அழுகிறது’***

***பூக்களிலே நானுமொரு***

***பூவாய்த்தான் பிறப்பெடுத்தேன்***

***பூவாகப் பிறந்தாலும்***

***பொன் விரல்கள் தீண்டலையே!***

***பொன் விரல்கள் தீண்டலையே! – நான்***

***பூமாலை யாகலையே!’***

*பூக்களைப் பாடாத கவிஞர்களேது..? வாசமிக்க பூக்களைப் பாடவே எல்லோரும் விரும்புவார்கள். அப்படித்தான் பாடியும் உள்ளார்கள். ஆனாலும் அரளிப்பூவைப் பாடவும் எங்கோ ஒரு கவிஞனுக்குத்தானே மனம் வருகிறது. அப்படியான ஈர மனமும், சமூகத்தின் மீதான பெருங்காதலும் கொண்ட கவிஞரான மு.மேத்தாவின் கவிச்சிந்தனையில் கசிந்த பல கவிதைகள் நினைவுப் படகில் நீந்தி நீந்தி இப்போதுதான் கரையேறி வருகின்றன.*

*மு.மேத்தா எழுதிய ‘கண்ணீர்ப் பூக்கள் (1974)’, ‘ஊர்வலம் (1977)’ இரண்டு கவிதை நூல்களையும் கையில் வைத்திருந்த பல கல்லூரி மாணவர்களைப் பார்த்திருக்கின்றேன்*



*நான். இவையிரண்டும் அவசியம் படிக்க வேண்டிய நூல்கள் என்பதோடு, மனதிற்கு மிகவும் நெருக்கமான கவிதைகள் நிறைந்த தொகுப்புகளாக விளங்கியவை. அதிகம் வாசகர்களைக் கொண்ட கவிஞராக மட்டுமில்லாமல், இளைய மனங்களைக் கொள்ளை கொண்ட கவிஞராகவும் ராஜபாட்டையில் வலம்வந்தவர் கவிவேந்தர் மு.மேத்தா. “கண்ணீர்ப் பூக்கள் கவிதை நூலை நம் கையில் வைத்திருப்பதே ஒரு கௌரவம்” என்று அண்ணன் பாவலர் அறிவுமதி சொன்னது எவ்வளவு சரியான மதிப்பீடு.*

*1974 சனவரியில் வெளியான மு.மேத்தாவின் முதல் கவிதை நூல் ‘கண்ணீர்ப் பூக்கள்’, இதுவரை 40க்கும் மேற்பட்ட பதிப்புகளைக் கண்ட தமிழில் அதிக விற்பனையான கவிதை நூல்களுள் ஒன்று. அன்று தொடங்கி இன்று வரைக்கும் தொடர்ந்து கவிதைத்தளத்தில் சோர்வில்லாமல் எழுதிவரும் கவிஞர் மு.மேத்தாவே, இன்றைக்கும் தமிழ்க் கவிதையின் தாத்தாவாகப் புகழ் அரியணையில் கம்பீரமாக வீற்றிருக்கிறார்.*

*தேனி மாவட்டத்திலுள்ள பெரிய குளத்தில் பிறந்த முகமது மேத்தா, பள்ளிப் பிராயத்திலேயே மு.மேத்தாவானார். 1945ஆம் ஆண்டு செப்டம்பர் 5 அன்று பிறந்தவர்.*

*நான்காம் வகுப்பு படிக்கும்போதே கவிதைகளை எழுதத் தொடங்கிய மு.மேத்தா, உயர்நிலைப் பள்ளியில் படிக்கையில் ‘தமிழ்ச்சோலை’ எனும் கையெழுத்து*

இதழினைத் தொடங்கினார். கல்லூரியில் படிக்கிற காலத்தில் 'எழுச்சி முரசு' எனும் கையெழுத்து இதழில் தனது கவிதைகளோடு, நண்பர்களின் கவிதைகளையும் அறிமுகம் செய்தார்.

முதலில் பாரதிதாசனின் கவிதைகளைப் படித்த கவிஞர், பின்னரே பாரதியின் கவிதைகளைப் படிக்கத் தொடங்கினார். மு.மேத்தாவின் தாத்தா பெயர் 'மேத்தர்' என்பதாகும். இதற்கு 'குதிரைப் படைத்தலைவர்' என்பது பொருளாகும். ஆறாம் வகுப்பு படித்துக்கொண்டிருக்கையில் 'மு. மேத்தா' எனும் பெயரால் அழைக்கப்பட்டார். உயர்நிலைப் பள்ளியில் படிக்கையில் மாணவத் தலைவர் தேர்தலுக்கு நின்றபோது 'மு.மேத்தா' என்பதே அனைவராலும் அறியப்பட்ட பெயரானது. மதுரை தியாகராசர் கல்லூரியில் முதுகலை தமிழ் பயின்றதோடு, மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டமும் பெற்றார் மு.மேத்தா.

"சாதியோ, மதமோ, வேறு எதுவுமே அந்தப் பெயரில் தெரியாததால் எனக்கு அந்தப் பெயர் பிடித்திருந்தது. நான் ஒரு பொதுமனிதன்" என்பதே தன் பெயர் பற்றிக் கவிஞர் எப்போதும் சொல்லிவரும் கருத்தாகும். சென்னை மாநிலக் கல்லூரியில் தமிழ்ப் பேராசிரியராகப் பணியாற்றி ஓய்வு பெற்றிருக்கும் கவிஞர் மு.மேத்தா, தமிழில் புதுக்கவிதைக்குப் புதிய எழுச்சியைத் தந்த வானம்பாடிக் கவிஞர்களுள் குறிப்பிடத்தக்கவர்.

மு.மேத்தாவின் கவிதைகளில் 'பழையன கழிதலும் புதியன புகுதலும்' கலந்தேயிருக்கும். பழையனவற்றின் அவசியத்தையும், புதியனவற்றின் தேவையையும் சரியாக உணர்ந்த கவிஞர், மிகத் தேர்ந்த கற்பனையாலும், எளிய சொற்களாலும் மனித உணர்வுகளைத் தட்டியெழுப்பும் கவிதைகளைப் படைத்தளித்துள்ளார். கோவையில் நடைபெற்ற வானம்பாடிகளின் முதல் கூட்டத்திலேயே, 'நான் மரபுக்கும் புதுமைக்கும் பாலமாக இருப்பேன்' என்று உறுதிபடக் கூறினார்.

**'விழிகள்**

**நட்சத்திரங்களை வருடினாலும்**

**விரல்களென்னவோ**

**ஜன்னல் கம்பிகளோடுதான்'**

-என்று எதார்த்தத்தை அப்படியே சொல்லும் மு.மேத்தாவின் கவிதை வரிகள், வாசக மனதில் பெரும் தாக்கத்தை உண்டாக்கின.

சின்னச் சின்ன வரிகளே என்றாலும், ஒரு பாறையைச் செதுக்கும் கூர்கொண்ட உளியின் நுட்பம் மு.மேத்தாவின் கவிதை வரிகளுக்குள் இருந்தன. அதனாலேயே மு.மேத்தாவின் கவிதைகளை வாசித்த பலரும் கவிஞர்களாகப் பரிணமித்தார்கள் என்பது வரலாறு.

**'ஒரு மூங்கிற்காட்டையே**

**அழித்து**

**ஒரே ஒரு**

**புல்லாங்குழல் செய்தேன்;**

**ஊதும் போதுதான்**

**அது ஊமையென்று**

**தெரிந்தது...'**

இத்தோடு முடிந்திருந்தால் மு.மேத்தாவின் கவிதைகளுள் இதுவுமொன்று என்றாகியிருக்கும். ஆனால், கடைசியில் கவிஞர் சேர்த்திருக்கும் ஒற்றை வரிதான் இந்தக் கவிதையை எல்லோர்க்கும் நெருக்கமாக்கிவிடுகிறது. இன்னமும் நம் நினைவில் நிலைத்திருக்கிறது. அந்த ஒரு வரி;

**'உன்னைப் போலவே.'**

அந்த 'உன்னை' யாராக இருக்கக்கூடும்; நண்பனாக – காதலனாக – காதலியாக – அம்மாவாக – அப்பாவாக – சகோதரியாக – மனைவியாக என யாரோடு பொருத்திப் பார்த்தாலும் அதற்கான அர்த்தச் செறிவோடு விளங்குகிறது இக்கவிதை.

மு.மேத்தாவின் கவிதைகளில் நேரடியான உரையாடல் தொனியே அதிகம் வெளிப்படுகிறது. அவை கவிதைகள் என்பதை விடவும் கவித்துவம் கலந்த உரைவீச்சு என்றொரு விமர்சனமும் உண்டு. ஆனால்,



கவிஞர்களுக்கான கவிதை எழுதும் கவிஞராக தனது அறிவுஜீவித்தனத்தைக் காட்டாமல், சாதாரண வாசகனையும் மனதில் கொண்டு கவிதை படைக்கும் மு.மேத்தா, என்றும் மக்களுக்கான கவிஞராகவே அறியப்படுகிறார்.

"இவர் இதுவரை கவிதையே எழுதவில்லை; எதிர்காலத்தில் எப்போதாவது எழுதலாம். இந்திய நாட்டிலே பிறந்த எந்தக் குடிமகனும் ஜனாதிபதியாகலாம் என்கிற மாதிரி ஒரு நம்பிக்கை. அவ்வளவுதான்" என்று இலக்கிய விமர்சகரான வெங்கட் சாமிநாதன் சொல்வது எத்தகைய வன்மமான விமர்சனம் என்பதைக் கவிதை ரசிகர்கள் அறிவர். ஆனாலும், தனது 'கண்ணீர்ப் பூக்கள்' கவிதை நூலின் 40ஆவது பதிப்பிலும் வெங்கட் சாமிநாதன் எழுதியதையும் சேர்த்தே பதிவுசெய்திருக்கும் மு.மேத்தாவின் கவிதை மனதைத் தமிழ்க்கூறும் நல்லுலகு நன்றாகவே அறிந்திருக்கிறது.

ஒரு நூற்றாண்டினைக் கடந்திருக்கும் தமிழ்ப் புதுக்கவிதைப் பயணத்தில் 'தடம் பதித்த கவிதைகள்' என்று பத்துக் கவிதைகளை மட்டும் நாம் தேர்வு செய்தாலும், அதில் மு.மேத்தாவின் கவிதைகள் இரண்டு, மூன்று நிச்சயம் இடம்பெறும். அதிலொன்று;

'தேசப்பிதாவுக்கு ஒரு தெருப் பாடகனின் அஞ்சலி.' இப்போது படிக்கையிலும் நமக்குள் ஒரு இரசவாதத்தை நிகழ்த்துவதே இந்த அஞ்சலிக் கவிதையின் அஞ்சலிடாத சிறப்பாகும்.

**'உன்னுடைய படங்கள்**
**ஊர்வலம் போகின்றன**
**நீ ஏன் தலை குனிந்தபடி**
**நடுத்தெருவில்**
**நிற்கிறாய்?'**

- என்று தேசப்பிதாவைப் பார்த்துக் கேட்பதாகத் தொடங்கும் கவிதை,

**'தேசப் படத்திலுள்ள**
**கோடுகள் -**
**விடுதலைக்குப் போராடிய**
**வீரத் தியாகிகளின்**
**விலா எலும்புக் கூடுகள்'**

- என்பதாகச் சொல்லி,

**'அமுத சுரபியைத்தான்**
**நீ தந்து சென்றாய்;**
**இப்போது**
**எங்கள் கைகளில் இருப்பதோ**
**பிச்சைப் பாத்திரம்!'**

-எனும் வலி மிகு உண்மையைச் சொல்வதோடு,

**'சட்டக் கட்டிடங்களில்**
**ஓட்டைகள் விழுந்துவிட்டன**
**வயதாகிப் போனதால்**
**தர்ம ஸ்தூபிகள்**
**தள்ளாடுகின்றன'**

- என்று தேச நிலையை எண்ணி மனம் வருந்தி,

**'கண்ணீரின் வெப்பத்தால்**
**என் கவிதை**
**முழுமை பெறாமலே**

**முடிந்து விடுகிறது'**

- என்று முடித்திருப்பார்.

காகிதத்தில் முடிந்துபோன கவிதை, நம் மனதில் குடியேறி, தேசத்தின் சீரழிந்த நிலைக்காக மனம் கசிய வைக்கிறது. மாற்றங்களை நோக்கி இத்தேசம் வேகமாக அடியெடுத்து வைக்க வேண்டுமென்பதற்கான உத்வேகத்தையும் ஊட்டுவதாக அமைந்துள்ளது.

கவிஞரெனும் ஒரு முகம் மட்டுமா இவருக்கானது. இல்லையே..! சிறுகதையாளர், சரித்திர நாவலாசிரியர், கட்டுரையாளர், காவியம் படைப்பவர், திரைப்படப் பாடலாசிரியர் என்கிற பன்முகப்பட்ட திருமுகமே மு.மேத்தாவினுடையது. தனது இரண்டாவது கவிதை நூலான 'ஊர்வலம்' நூலிற்குத் தமிழக அரசின் முதற்பரிசினைப் பெற்றுள்ளார். 'ஆனந்த விகடன்' இதழ் நடத்திய பொன்விழா இலக்கியப் போட்டியில் 'சோழ நிலா' எனும் சரித்திர நாவலுக்காக முதல் பரிசினைப் பெற்றார். 2004இல் வெளியான 'ஆகாயத்துக்கு அடுத்த வீடு' கவிதை நூலுக்காக, 2006ஆம் ஆண்டிற்கான சாகித்ய அகாதமி விருதும் பெற்றுள்ளார்.

மனச்சிறகு (1978), அவர்கள் வருகிறார்கள் (1980), முகத்துக்கு முகம் (1981), காத்திருந்த காற்று (1982), ஒரு வானம் இரு சிறகு (1983), திருவிழாவில் தெருப்பாடகன் (1984), ஒற்றைத் தீக்குச்சி (1997), கலைஞருக்கும் தமிழ் என்று பேர் (2010), கனவுகளின் கையெழுத்து (2016) உள்ளிட்ட இருபதுக்கும் மேற்பட்ட கவிதை நூல்கள், வெளிச்சம் வெளியே இல்லை (1981) எனும் கவிதைச் சிறுகதை நூல், இரண்டு சிறுகதை நூல்கள், மூன்று நாவல்கள், ஏழு கட்டுரை நூல்கள் எழுதியுள்ள மு.மேத்தா, தனது பெருங்காவியமாக 'நாயகம் ஒரு காவியம்' (1994) எனும் படைப்பினை வெளியிட்டார். கவியரசு கண்ணதாசன் படைத்த 'இயேசு காவியம்' (1982) புதுக்கவிதை நூலினை முன்னுதாரணமாகக் கொண்டு மு.மேத்தா 'நாயகம் ஒரு காவியம்' படைக்க, கவிஞர் வாலி 'அவதார புருஷன்' எழுதத் தூண்டுகோலாக அமைந்ததும் இக்காவியமே என்பதும் குறிப்பிடத்தக்கது.




1981 சனவரியில் விஜயகுமார் இயக்கத்தில் சங்கர் கணேஷ் இசையில் வெளியான 'அனிச்சமலர்' திரைப்படத்தில் பாடலாசிரியராக அறிமுகமானார் மு.மேத்தா. இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் முந்நூறுக்கும் அதிகமான பாடல்களை எழுதியிருப்பதோடு, இரு படங்களுக்கு உரையாடலையும் எழுதியுள்ளார்.

'யார் வீட்டில் ரோஜா, பூப்பூத்ததோ... (இதய கோவில் -1985)', 'பாடு நிலாவே, தேன் கவிதை ஒரு பூ மலர... (உதய கீதம் – 1985)', 'கற்பூர பொம்மை ஒன்று, கைவீசும் தென்றல் ஒன்று... (கேளடி கண்மணி – 1990)', ' எம்பாட்டு எம்பாட்டு, நெஞ்சினிக்கும் பூங்காத்து... (பூமணி – 1996)', 'மயில்போல பொண்ணு ஒண்ணு, கிளி போல பேச்சு ஒண்ணு... (பாரதி-2000)' எனப் பட்டியலிட்டால் சொல்லிக்கொண்டே இருக்கும்படியான எண்ணற்ற வரிகள் காற்றின் மீதேறி, இசை பவனி வரும் சிறப்பு மு.மேத்தாவின் திரைப்பாடல்களுக்குண்டு.

மு.மேத்தாவின் பல கவிதைகளில் கதையும் கலந்திருக்கும். ஒரு கதைக்கான கருவை அப்படியே கவிதையாக்கும் வல்லமை கவிஞரிடம் உண்டு என்பதைப் பல கவிதைகள் வழி அறியலாம். 'செருப்புடன் ஒரு பேட்டி', 'கண்ணீர்ப் பூக்கள்', 'தாலாட்டு கேட்காத தொட்டில்கள்' ஆகியன கதைக்கவிதைகளே. ஒரு துளிப் பதமாகக் கதைக்கவிதையொன்று;

தலைப்பு: 'ஒரு கடிதம் அனாதையாகிவிட்டது.'

**'சேரும் முகவரி சரியில்லை**


அனுப்பிய முகவரி அதில் இல்லை!

ஒரு கடிதம்

அனாதையாகி விட்டது..

ஒரு கடிதம்

அனாதையாகி விட்டது..




பற்பல ஊர்களின்

முத்திரை பதிந்தது

பற்பல தெருக்களில்

விசாரணை நடந்தது

பற்பல தினங்கள்

பறந்து கடந்தது!

பிறந்த இடத்தின்

பெயரே இல்லை

புகுந்த இடமோ

புரியவில்லை.

அந்தக்

கடிதத்தை–

அஞ்சல் நிலையங்கள்

ஆராய்ச்சி செய்தன.

ஒட்டியிருந்த

உறையின் உள்ளே

இருந்த தாளில்–

எழுதியிருந்தது

இப்படி:

“ஒரு வாரத்திற்குள்

உங்கள்

பதில் வர வேண்டும்.

இல்லாவிட்டால்

உயிர்ப்பறவை சிறகடிக்கும்

கடைசி முத்தமிட என்

கல்லறைக்கு வரலாம்.”

சேரும் முகவரி சரியில்லை

அனுப்பிய முகவரி அதில் இல்லை

ஒரு கடிதம் அனாதையாகி விட்டது!

ஒரு கடிதம் அனாதையாகி விட்டது!”

*சரியான முகவரியில்லா இந்தக் கடிதம் மட்டும்தான் அனாதையாகிப் போனது. ஆனால், கவிவேந்தர் மு.மேத்தா எழுதிய இக்கவிதையோடு சேர்ந்து, அவரெழுதியிருக்கும் பல நூறு கவிதைகளும், திரைப்பாடல்களும் கவிதை ஆர்வலர்களின் இதய வாசலில் முத்திரை பதித்த கடிதமாக, முகம் மலர வைக்கும் இலக்கிய வரிகளாகக் காலமெல்லாம் நின்று நிலைத்திருக்கும்.*

- இன்னும் சொல்வேன்

சிறுகதை

**பூங்கோதை கனகராஜன்**
ஓவியங்கள் : அழ.ரஜினிகாந்தன்



# தங்கமோடி

கடலில் குளித்துச் சுத்தமாக எழுந்த கதிரவன் உலாப்போக தனது குதிரைகளில் ஏறிக்கொண்டிருந்த காலை வேளையில், `கடலைக்கா பிடுங்க ஆள் வந்துடுச்சு` என்ற அம்மாவின் குரல் கேட்டது. அப்பா வாசலில் பசுமாட்டில் மடி சுரந்தவுடன், கன்னுக்குட்டியை இழுத்து மொளக்குச்சியில் கட்டிவிட்டு, கடலைக்காய் பிடுங்க வந்த ஆட்களோடு வயலுக்குப் போனார். அம்மா அவசரமாகப் பால் பீய்ச்சி, பால்காரனுக்கு ஊற்றிவிட்டு, வீட்டுக்குத் தேவையான பாலைப் பாத்திரத்தில் வைத்து மூடிவிட்டு என்னிடம் `பாலைக் காய்ச்சி காப்பி வை. மத்தியான சோத்துக்குத் தயிர் வேணும். கச்சிதமா பால் ஊத்திக் காப்பி வச்சிட்டது போவ மிச்சத்தைப் பொறை ஊத்து. பொறைத் தயிர் அளவா ஊத்து. அதிகமா ஊத்தினா மத்தியானம் தயிர் புளுப்பா இருக்கும். அப்புறம் உங்க நல்லபாட்டன் கிட்ட நீதான் பேச்சு வாங்குவ. பாத்துக்க,` என்று பால் உறை ஊற்ற எப்போதும் பாடும் புராணம் பாடிவிட்டுச் சென்றது. எங்களை மிரட்டுவதற்காக அப்பாவை நல்லபாட்டன் என்று கூறி எப்போதும் அம்மா தன்னை நல்லவளாக்கிக்கும்.

ஆனாலும் அப்பா என்னை எப்பவும் தங்கமோடின்னுதான் கொஞ்சுவாங்க. ஆனால் அதுக்கு அர்த்தம் என்னான்னு நான் கேட்டதில்லை. அதுவே என்னோட பேர் மாதிரி ஆயிடுச்சு. வைக்கப்புல் போருக்கிட்டதான் வெறகு பொளந்து போட்ருப்பாங்க. கிழங்கு குச்சிகூட மேல்தோல் அரக்கிக் காய வச்சி சமையலுக்குக் காய வச்சிருப்பாங்க.

பக்கத்திலேயே மருதாணிச்செடி பொதராட்டம் வளந்து கெடக்கும். அதுல அடுக்கு மல்லிச்செடியும், குண்டு மல்லிச்செடியும் வளந்து கொடி கொடியாப் படந்து பூவாப் பூத்துக் கெடக்கும். தடத்து மேலயே வீடு இருக்கிறதால அந்தப் பக்கமா வெவசாய வேலைக்குப் போறவங்க யார் வேண்டுமானாலும் பூ பறிச்சிக்கலாம். ஒன்னும் சொல்ல மாட்டோம். அது போகவே எனக்குப் பள்ளிக்கூடம் வச்சிட்டுப் போக நெறயவே பூ இருக்கும். அங்கதான் போய் வெறகு ஒடிச்சாந்து அடுப்புப் பத்த வைக்கணும்.

ஒரு தடவை அம்மா வெறகு அள்ளி வந்து சமையல் ரூமில் போட்டபோது குட்டிப் பாம்பு ஒன்று நெளிந்து ஓடியது. அம்மா ஏதோ கொசு அடிப்பது போலச் சாதாரணமாக அடித்துப் போட்டது. உள்ளம் குழந்தை போல இருக்கணும், பண விஷயத்துல எப்பவும் சரியா இருந்தா எதுக்கும் பிரச்சினை வராது, தப்பு செஞ்சா மன்னிப்பு கேட்கத் தயங்கக்கூடாது, தப்பு செய்யலன்னா தைரியமா நிக்கணும்ன்னு சொல்லித் தர்ற அப்பா பாம்பைக் கண்டா நடுங்கிப்போவாரு.

பஸ்ல இருந்து காட்டுக்கு அஞ்சாறு வயல் தள்ளித்தான் நம்ம கொட்டாய் இருக்கும். இருளில் பஸ் விட்டு இறங்கி வந்தால், இரண்டு பக்கமும் சங்கம் முள்செடி பொதையா வளந்து கிடக்கும். இருட்டினாலே பாம்புங்க இரண்டு பக்கமும் போய் வந்துக்கிட்டு இருக்கும். பாம்பு வரும்ங்கறதால அப்பா செருப்புக் காலால தரையை ஓங்கித் தட்டிக்கிட்டே நடந்து வருவார். சத்தம் கேட்டா பாம்பு பொதருக்குள்ளாற இருந்து வெளியே வராதுன்னுதான். எங்கம்மா ஆம்பள மாதிரி பாம்பு பாத்தாலே, `என்ன ஆய்டும்? உயிருதான போவும். எதுக்குமே பயப்படக்கூடாது`ன்னு சொல்லிட்டு அசால்ட்டா பாம்பு அடிச்சிட்டுப் போவும். நானெல்லாம் அதைப் பார்த்து நடுங்குவேன்.

அடுப்பு பற்ற வைக்க தென்னஞ்சோவையை அடியில வச்சி, அதுக்கு மேல நாலஞ்சு குச்சிக்கெழங்குக் குச்சிய நல்லாக் காஞ்சத வச்சி அடுப்பு பத்த வச்சா பொகைஞ்சுத் தள்ளும். ஊதாங்கொழல எடுத்து சன்னமா ஊதிக் கொஞ்சம் கொஞ்சமா தீ புடிக்க வைக்கணும். வேகமா ஊதினால் அடுப்பு அணைஞ்சு போய்விடும். தீ நல்லாப் புடிச்ச பின்னாடிதான் அடுப்பில பாத்திரம் வைக்கணும். இல்லாட்டி ஊதும்போது காப்பி பொகை வாசம் வந்துரும். அப்படி வந்துச்சுன்னா, எங்கம்மா என்னோட முன்னோர் அத்தையையெல்லாம் திட்டி, `புள்ளை வளத்து வச்சிருக்கா பாரு, ஒழுங்கா காப்பி கூட வக்கத் தெரியலன்னு நாளைக்குப் போற ஊட்ல உன் மாமியாகிட்ட எனக்குப் பேச்சு வாங்கி வைக்காதே`ன்னு கத்த ஆரம்பிச்சிரும்னு, பயந்துகிட்டே பொகை வாசம் அடிக்காம காப்பிய வச்சிட்டு, கடலைக்காட்ல கடலைக்கா திருகுற ஆளுங்களுக்குக் காப்பி எடுத்துக்கிட்டுப் போய்க் கொடுத்துட்டு வந்தேன்.

மத்த நாளெல்லாம் அம்மா வேலை வைக்காது. காட்ல வேலை இருக்கும்போது மட்டும் வேலை வைக்கும். அப்பா என்னைத் தூக்கி வச்சி செல்லம் கொஞ்சோ கொஞ்சுன்னு கொஞ்சுவார். ஆனால் வேலைன்னு வந்துட்டா `நாளைக்கு டாக்டரா கலெக்டரா ஆனாக்கூட நீ எல்லா வேலையும் தெரிஞ்சிருக்கணும்`னு கண்டிப்பா இருப்பாரு. `வேலை முத்தா? புள்ள முத்தா`ன்னு திட்டுவாரு. மனசுக்குள்ள `உம்பேருதானப்பா முத்து`ன்னு சொல்லிக்குவேன்.

தம்பி அதுக்குள்ள அப்பாவுக்கு ஒத்தாசையா கடலைக்கா செடி புடுங்கினா, கொஞ்சம் காய் மண்ணுல நின்னுடும்னு மம்மட்டி எடுத்துப் போய்க் குடுத்துட்டு வந்த பின்னாடி இரண்டு பேரும் அவசரமா பள்ளிக்கூடம் கௌம்பினோம். அம்மா அவசரத்துல சோறு கொதிக்கக் கொதிக்கப் போட்டு வச்சது. தம்பி பழைய சோறு தின்னுட்டான். எனக்குப் பழைய சோறு தின்னா தொண்டை வலி காய்ச்சல் வரும்னு அம்மா பழைய சோறு போடாது. இவன் அக்காவுக்கு மட்டும் சுடுசோறுன்னு அம்மாவை நொடிச்சிக்கிட்டே சோறு தின்னான். எனக்கு சோறு சூடா இருக்குன்னு சாப்பிட முடியல. பள்ளிக்கூடத்துக்கு வேற நேரம் ஆவுதுன்னு எனக்கு அழுவாச்சி வந்துடுச்சு. சரி வச்சுத்தொலைன்னு அம்மா சொல்லுச்சோ இல்லையோ அப்பாடின்னு வட்டல்ல சோத்தை மூடி வச்சிட்டு, சைக்கிள எடுத்துப்

புத்தகம் சாப்பாட்டுப்பை எடுத்துக்கிட்டுக் கௌம்பிட்டோம்.

மொதல்ல நானும் தம்பியும் ஒரே சைக்கிள்லதான் போவோம். நான் அப்பல்லாம் ரொம்ப ஒல்லியா இருப்பேன். அதனால் தம்பிதான் சைக்கிள் பின்னாடி வச்சிக் கூட்டிப் போவான். சண்டை வந்துட்டா மொழங்கையால பின்னால என்னை இடிக்கிறான்னு அப்பாகிட்ட சொன்னவுடனே, அப்பா எனக்குப் புது சைக்கிள் வாங்கித் தந்துட்டாங்க. அவன் சைக்கிள் கத்துக்கிட்டபோது, நமக்குப் பின்னால பொறந்தவன் நமக்கு முன்னால சைக்கிள் கத்துக்கிட்டான்னு ஒரே நாளில் நான் ரோஷத்தோடு சைக்கிள் கத்து வச்சிருந்தது நல்லதாப் போச்சு.

என்னோட புது சைக்கிள் அழகா பளபளன்னு இருந்துச்சு. அதுல போகும்போது ஏதோ நானே மகாராணியாய்ட்ட மாதிரி பெருமையா இருக்கும். தம்பி அக்காவுக்கு மட்டும் எது கேட்டாலும் அப்பா வாங்கித் தந்திர்றாங்கன்னு கடுப்பாகி, நான் கைப் பிடிக்கிற சைக்கிள் ஹேண்டில் பாரில் முள் குத்தி வச்சுட்டான். நான் பாக்காம பிடிச்சுக் கையெல்லாம் ரத்தம் வந்துடுச்சு. அப்புறம் அப்பாகிட்ட அடி வாங்கி அழுதுக்கிட்டே என்னை மொறச்சிப் பாத்தான். நான் பாக்காத மாதிரி இருந்துக்கிட்டேன்.

அவன் நான் தொலைச்ச பொருளெல்லாம் கணக்கு வச்சுக்கிட்டு, `அக்கா இதுவரைக்கும் இரண்டு தோடு தொலைச்சிருக்குது. ஒரு புது சைக்கிள் சந்தையில விட்டுத் தொலைச்சிருக்குது. அக்காவை மட்டும் அப்பா சினிமா பார்க்க சேலம் கூட்டிப்போய்க் கண்காட்சி, சர்க்கஸ்லாம் பாத்துட்டு நல்ல ஹோட்டல்ல பிரியாணி, மீன் வாங்கித் தருவாங்க. நான் அஞ்சு ரூவா கேட்டாக் கூட அப்பா தர மாட்டாரு`ன்னு கோவிச்சுக்குவான்.

அப்பா தம்பியிடம், `நீ எங்கேயாவது போனா வெளையாடிக்கிட்டு இருக்காம, உடனே வரணும்`னு சொல்வாங்க. `நீ வூட்ல இருந்தாத்தான நான் கூட்டிப்போவேன்`னு சொல்வார். அவன் எங்கிட்ட பாசமா இருந்தாலும் எங்கிட்ட நெறயா குறும்பு பண்ணுவான். ஒருநாள் மஞ்சக்காட்ல வேலை செய்றவங்க தண்ணீர் கட்டிட்டு இருக்கும்போது நானும், தம்பியும் தண்ணில வெளாடிட்டு இருந்தோம். செம்மண்ணா சேறு ரத்தமாட்டம் இருக்கும். அதை அள்ளித் தம்பி என் மேல் வெளையாட்டுக்காகப் போட கண்ணில் பட்டுக் கண்ணு செவப்பா ஆயிடுச்சு. ஆனால் நான் தம்பிதான் போட்டான்னு சொன்னால் அவனுக்கு அடி விழுகும்னு யார்கிட்டேயும் சொல்லல. அப்புறம் தம்பி, எப்ப பாத்தாலும், `என்னோட அக்கா கல்யாணத்துக்கு ரோட்ல இருந்து கொட்டாய் வரைக்கும் ட்யூப் லைட் போடுவேன். நெறயா நகை போட்டு அக்காவுக்குப் பசுமாடு சீர் தருவேன்`ன்னு சொல்லிக்கிட்டே இருப்பான்.

ஒருநாள் அப்பா அம்மா இல்லாதபோது தம்பி கரண்ட்ல ஏதேதோ விஞ்ஞான வேலை செஞ்சு பார்த்தான். என்னிடம் ஒயரைக் குடுத்துட்டு ஸ்விட்ச் போட்டதும் ஷாக் அடிச்சுக் கீழே விழுந்துட்டேன். அப்பா அம்மாகிட்ட சொல்லக் கூடாதுன்னு குலதெய்வம் நல்ல புள்ளி அம்மன் மேல சத்தியம் வாங்கிட்டான்.

இரண்டு பக்கமும் வயல்களுக்கு நடுவில் இட்டேரி வழியா போனா அப்படியே ஆனந்தமா இருக்கும். பாட்டெல்லாம் பாடிட்டே போவோம். அப்புறம் அந்த இட்டேரி மெயின் ரோட்டில் சேந்துக்கும். மெயின் ரோட்டில் அரை மணி நேரத்துக்கு ஒரு பஸ் வரும்.

சுடுசோத்தை அவதிஅவதியா அள்ளித் தின்னதால சைக்கிள் மிதிக்க மிதிக்க வேத்துக் கொட்டுது. அச்சச்சோ ஒம்பதரை விநாயகம் பஸ் வந்துடுச்சே.. ஒம்பதே முக்காலுக்குப் பள்ளிக்கூடத்தில மணியடிச்சிடுவாங்களேன்னு வேகமாப் போனா மணி அடிச்சு பிரேயர் நடந்துக்கிட்டு இருந்திச்சு. நேரமானதால வெளியே நிக்க வச்சுட்டாங்க. முக்காவாசி வாத்யார் டீச்சருங்க உள்ளூர்க்காரங்கதான். சொந்தக்காரங்கதான் நெறயாப் பேர். பிரேயர் முடிஞ்சதும் தலைமையாசிரியர் ரத்தினம் மாமா எந்தலையைப் பாத்ததும் நல்லாப் படிக்கிற புள்ளைன்னு, கிளாசுக்குப் போன்னு சொல்லிட்டாங்க.

மொத பீரியடே கெமிஸ்ட்ரி லேப்ல தேவியண்ணன் சார் கிளாஸ். கோவக்கார

மனுஷன். எனக்கு அவரப் பாத்தாலே கைகால் ஒதறும். நான் பதட்டத்தில பியூரெட்ட போட்டு ஒடச்சிட்டேன். `இதென்ன இரும்புலயா செஞ்சி வச்சிருக்குது. கண்ணாடியில செஞ்சது. தெரியுதா`ன்னு சொல்லிட்டுத் திட்டாம போனாலும், லேப்ல ஒடச்சதுக்குப் பணம் கேட்டா வூட்ல எலும்ப ஒடப்பாங்களேன்னு பயமா இருந்துச்சு.

எங்கூர்ல தார்சு வூடா இருந்தாலும், ஓட்டு வூடா இருந்தாலும், கூரை வூடா இருந்தாலும் தோட்டத்தில வூடு கட்டியிருந்தா அதை கொட்டாய்ன்னுதான் சொல்லுவோம். தோட்டத்தைக் காடுன்னுதான் சொல்லுவோம். ஒவ்வொரு தெருவிற்கும் பேர் இருக்கற மாதிரி, ஒவ்வொரு காட்டுக்கும் அடையாளத்துக்கு ஒரு பேர் இருக்கும். எங்க காட்டுக்குப் பேர் கல்லுக்காடு. சாயங்காலம் கொட்டாய்க்குப் போனதும் பறந்து பறந்து வூட்டு வேலைலாம் ஒழுங்கா செஞ்சது பாத்து எல்லோருக்கும் ஆச்சரியம். சாய்ங்காலம் வேலை வச்சா படிக்கணும்னு சொல்லி ஏமாத்துமே! இது எப்படி இப்படி வேலை செய்துன்னுதான்.

காட்டில வேலை செஞ்ச பொம்பளைங்க வெவரம் தெரியாம, `பொட்டப்புள்ளையை நல்லா படிமாணம் பழக்கி வச்சிருக்காங்க`ன்னு புகழ்ந்தாங்க. நான் பியூரெட்ட ஒடச்சது தெரிஞ்சிடுமேன்னு பயத்தை வெளில காமிக்கல. இருநூறு முன்னூறு ரூபாய் கேப்பாங்களே பள்ளிக்கூடத்திலன்னு கவலையா இருந்துச்சு. அவ்வளவு பணம் இருந்தால் வெவசாய நெலத்துல ஆளுங்களுக்குப் பத்து நாள் கூலி குடுப்பாரே அப்பா! நாம வீண் பண்ணிட்டமேன்னுதான் எனக்கு ரொம்ப வேதனையாப் போச்சு. பெரியவங்க பேசினாலும் திட்டினாலும் திருப்பி ஒரு வார்த்தை பேசறது தவறான பழக்கம்ன்னு சொல்லி வளத்திருந்ததால, நம்ம மேல தப்பே இல்லைன்னாலும், பதிலுக்குப் பதில் பேசக்கூடாது. அவங்க திட்றத நல்லா வாங்கிக்கிட்டு அழுதாலும், ஒரு நல்ல சந்தர்ப்பத்திலதான் நாம எதுவும் தப்பு செய்யலைன்னு சொல்லணும். பெரியவங்க திட்டினால் திருப்பிப் பேசற பொண்ணுங்களை, பக்கத்தில இருக்கறவங்க இது வூட்டுக்கு அடங்காத புள்ளைன்னு பட்டம் கட்டி, கல்யாணத்துக்குப் பொண்ணு பாக்க வந்தாக்கூட கெடுத்து வச்சிடுவாங்கன்னு, பயந்துக்கிட்டுப் பொண்ணுங்க வாயே திறக்க மாட்டோம்.

பள்ளிக்கூடத்தில இருந்து திரும்பி வந்தபோது, ஆளுங்க கடலக்காட்ல கடலைக்கா பிடுங்கி முடிஞ்சதும் வள்ளம் வச்சு அளந்தாங்க. ஒரு வள்ளம் நாலு படி அளவு புடிக்கும். நானும் கொஞ்சம் கடலச்செடி பிடுங்கிக் கடலைக்கா திருகி, அளந்து அவங்களுக்குக் கொடுக்கற அளவு காசு நானும் வாங்கினேன். அதை யானைக்குட்டி உண்டியல்ல சேத்து வச்சுட்டு, நெறஞ்சவுடனே, எங்கள் ஊர் கரூர் வைஸ்யா பேங்க்லதான் போட்டு வைப்பேன்.

அப்படியே கடலைக்காய கழுவாம பச்சைக் கடலைக்கா தின்னதுல வாயெல்லாம் செம்மண்ணு. பச்சைக் கடலைக்கா பறிச்ச உடனே தின்னா பால் காயா, அப்படி ஒரு ருசியா இருக்கும். அடுத்த நாள் பக்கத்துக் காட்டில் பாட்டி செத்துப்போச்சு. அங்கே போன எடத்துல அப்பா, அம்மாகிட்ட நான் பியூரெட்ட ஒடச்சதை ட்ரில் டீச்சர் சொல்லிட்டாங்க. இன்னைக்கு எப்படியும் பியூரெட் ஒடச்சது, குட்டு உடைஞ்சுடும்னு தெரிஞ்சு, வேலை செஞ்சா கொஞ்சம் கம்மியா அடி வாங்கலாம்ன்னு, நல்ல புள்ளையாட்டம் அவங்க வரும்போது, வெறகு எடுத்து வந்து, காப்பி வச்சுக்கிட்டு இருந்தேன்.

அப்பாவும், அம்மாவும் குளிச்சிட்டு வூட்டுக்குள் வந்ததும் நல்லா அர்ச்சனை நடந்தது. `நாளைக்குக் கல்யாணம் ஆகிப் போற வூட்ல எல்லாத்தையும் போட்டு ஒடை. புள்ள வளத்தி வச்சிருக்கிற லட்சணத்தப் பாருன்னு உன் மாமியாக்காரி எந்தாடையில இடிப்பா`ன்னு அம்மா ஆரம்பிச்சது. `மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம்`ன்னு அப்பா அடிக்கடி போதனை பண்ணுவார். திட்டுனா நமக்கு அழுவாச்சி பொத்துக்கிட்டு வரும்போது எங்கே போய் மலர்ந்த முகமா இருக்கிறது? அப்பா முன்னால் அழுதால், இன்னும் கொஞ்சம் சேர்த்து அடி விழும்ன்னு நான் அழுவறது தெரியாம இருக்க என்னோட கண்ணீரைப் பொகையும் வெறகடுப்பருகில் மறச்சுக்கிட்டேன். ■

● கவிஜி

# இனப்பையின் பசி




ஆதிதொட்டு இன்றுவரை.. ஏன் இனியும் கூட இது தொடருமோ..


மனிதனின் உள்ளே பதுங்கி இருக்கும் மிருகம் எப்போதாவது இப்படி எப்படியாவது தலைதூக்கிவிடும். அப்போதெல்லாம் எதிரே இருக்கும் மனிதன் இரையாவது இரைப்பை தாண்டி இனப்பையின் பசி.

இனத்துக்கும் இடத்துக்கும் அடித்துக்கொண்டு சாகும் பிற்போக்குத்தனம்... எப்போதும் பாயத் தயாராக இருக்கும் பசித்த புலி. அது பாயாமல் இருக்க... அதற்குப் பண்பாட்டைத் தீனியாகத் தொடர்ந்து போட வேண்டிய கட்டாயம் அறிவார்ந்த சமூகத்துக்கு எப்போதும் உண்டு. அவைகளை எல்லாம் தாண்டி, போட்டு வைத்த சட்ட திட்டங்கள் எல்லாம் மீறி, ஒரு வன்மம் பொதுவாகி, கூட்டத்தில் புகுந்த மத யானையாக எப்போது மாறுகிறதோ அப்போது எதிர் வீட்டுக்காரனின் சிறு அலட்சியம் துளி புன்னகை கூட உள்ளிருக்கும் ஈகோவை உறுமிக்கொண்டு வெளிவரச் செய்துவிடும். தானாக ஒரு வறட்டுத்தனம் மண்டைக்குள் திட்டமிட்டுச் சூழத் தொடங்கிவிடும்.

எப்படி ஹிட்லருக்கு மரை கழண்டதோ.. எப்படி இடி அமீன் புத்திக்குள் புழு புரண்டதோ.. எப்படி போல்பாட் மண்டைக்குள் அழுக்கு சுழன்றதோ.. எப்படி ராஜபக்சேவுக்கு அரை கிறுக்கு பிடித்ததோ.. அப்படித்தான் ருவாண்டாவில் ஹுட்டு - டூட்ஸி என்ற இரு இனங்களுக்கு இடையே ஒண்ணுக்கும் உதவாத உயிர் எடுக்கும் பகை நடந்தது. அது ஓர் இனக்கலவரம். தங்களுக்குள்ளேயே பிரிந்து தங்களைத் தாங்களே வெட்டிக்கொண்ட தற்குறித்தனம்.

1994இல் நடந்த கோர சம்பவங்களின் தொகுப்பாகத்தான் இந்த சினிமா நம் முன்னே திரை விரிகிறது.

வெளியே கலவரம் வெடித்துத் தள்ளுகிறது. யாரை யார் வெட்டுகிறார்கள் என்று தெரியவில்லை. நேற்று வரை நம்மோடு பேசிச் சிரித்த பக்கத்து வீட்டுக்காரன் இன்று கையில் அரிவாள் கொண்டு நம்மை வெட்டத் தேடிக்கொண்டிருக்கிறான். ஆண்ட்டி அங்கிள் என்று பேசி விளையாடிய சிறுவன் கையில் கத்தி. அவன் வெட்டத் தேடிக்கொண்டிருப்பது அந்த அங்கிள் ஆண்ட்டியைத்தான்.




படத்தின் நாயகி ஹூட்டு இனமாக இருந்தாலும் அவள் ஒரு பொதுநலவாதியாக இருந்தபட்சத்தில் கொலை வாள் அவள் பக்கமும் திரும்புகிறது. அவளும் பக்கத்தில் இருக்கும் பள்ளியில் ஆசிரியராக இருக்கும் அவளின் கணவரும் தம் இனமாக இருப்பினும் தவறுக்கு உடன்படோம் என்று டூட்ஸி இனத்துக்கு ஆதரவாக இருக்கிறார்கள். இதுதான் வாய்ப்பென்று போட்டுத் தாக்க உள்ளிருந்தே ஒரு கூட்டம் வலை வீசுகிறது. அதனால் அவர்கள் வீட்டிலேயே பேஸ் மட்டத்தில் இருக்கும் நின்றால் தலை முட்டும் ஓர் அறையில் நாயகியை அடைத்து வைத்துவிட்டு "எக்காரணம் கொண்டும் வெளியே வரக் கூடாது. நானாக வந்து உன்னை அழைத்துச் செல்கிறேன்" என்று கணவன் வெளியேறிவிடுகிறார். கொஞ்ச நேரத்தில் வெளியே நடக்கும் கலவரத்தில் இருந்து தப்பித்தால் போதும் என்று மூன்று பெண்கள் இதே வீட்டுக்குள் ஓடோடி வந்துவிட.... வேறு வழி இல்லாமல் அவர்களையும் அதே குட்டி அட்டாலிக்குள் அடைத்துக்கொள்கிறாள் நாயகி.

அந்த மூன்று பேரில் ஒருத்தி டூட்ஸி இன இளைஞி. இதுக்கெல்லாம் காரணம் ஹூட்டு இனத்தின் மிருகத்தனமான இனவெறிதான் என்று குற்றம் சாட்டுகிறாள். வன்புணர்வுக்கு ஆளான வலி அவளின் தீராக் கோபமாக வெளிப்படுகிறது. அவளின் துயரம் இயலாமைக்குள் சுழன்று எங்கெங்கோ அலைந்து தன்னையே தனக்குள் பிராண்டிக்கொள்ளும் அளவுக்குத் தகித்த உணர்வாக இருக்கிறது. இன்னொருத்தி அந்த ஊரில் இருக்கும் தேவாலய டூட்ஸி இன நன். மனிதர்களிடையே நடக்கும் கிறுக்குத்தனங்களில் தனது தெய்வ நம்பிக்கை கேள்விக்குறியாவது அல்லது அதுவழி அவள் மனதுக்குள் நிகழும் புரிதல் என்று அவள் இருதலைக் கொள்ளியாக இருக்கிறாள். மானுடப் பிழை ஒரு பக்கம். மாற்று வழி இல்லாத கடவுளின் வலி ஒரு பக்கம்.

இன்னொருத்தி ருவாண்டாவுக்கு சேவை செய்ய வந்த அமெரிக்கப் பெண். சிறு வயதில் தெரிந்தோ தெரியாமலோ தான் செய்த பெரும் பாவத்துக்கு சேவை செய்து புண்ணியம் சேர்க்க வந்தவள். சுய கழிவிரக்கத்தில் ஒவ்வொரு நாளும் செத்துச் செத்து வாழ்பவள். அவளும்

இங்கே இவர்களோடு சிக்கிக்கொண்டு தவிக்கிறாள். வாழ்வுக்கும் சாவுக்கும் இடையே பாவத்தின் நினைப்பும் புண்ணியத்தின் தகிப்பும் அவளை அலைக்கழிக்கிறது.

இனக்கலவரத்தில் ஈடுபடும் முட்டாள்கள் சமயம் கிடைக்கையில் எந்த இனப் பெண்ணையும் வன்புணர்வுக்கு ஆளாக்குவது தொன்றுதொட்டு நடக்கும் கேவலம். அது இங்கேயும் நடக்கிறது. உள்ளிருக்கும் மிருகத்தை வெளியே விடுகையில் அது எதிர் தரப்பை மட்டும் தாக்குவது இல்லை... தன் பக்கத்தைக்கூட தாக்குகிறது. அதற்குத் தேவை தன் வெறிக்கு ஒரு காரணம். அதற்கு இனம் என்பது ஒரு வலை. இனக் காப்பாளன் என்பதெல்லாம் ஜிப்புக்குப் போடும் தீனி. அவ்வளவே.

வீட்டின் அடிவாரத்தில் மூடிக் கிடக்கும் குட்டியூண்டு அறையில் நால்வரும் நெருக்கி நான்கு மூலையில் அமர்ந்து வெளியே நடக்கும் கலவரத்துக்குக் காது கொடுத்து இதயம் நடுங்கி மூளை கசிகிறார்கள். ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளும் தங்கள் பார்வை எண்ணம் வலி வெறுப்பு விருப்பு... எல்லாவற்றுக்கும் மேலாக உயிர் பயம்... என்று நாட்கள் நகர்கின்றன. பத்து நாள் இருபது நாள் என்று அந்தச் சிறை வாசம் தொடர்கிறது. எப்படியாவது இங்கிருந்து தப்பிவிட வேண்டும் என்ற பதற்றம் நாட்கள் கூடக்கூட அவர்களுக்குள் கூடிக்கொண்டே போகின்றது.

அந்த அறையில் இருந்து வெளியே பார்க்க இருக்கும் ஒரு சிறு கட்டிட இடைவெளி. அதன் வழியாகத்தான் சூரிய வெளிச்சம் உள்ளே வர முடியும். சில போது மூத்திர தெறித்தல்கள்கூட உள்ளே சிதறுகின்றன. விரட்டி விரட்டி வெட்டப்படும் காட்சி கண்ணுக்குத் தெரியும் வரை அந்தச் செவ்வகக் கட்டிடச் சந்தில் ரத்த வாடை. பயமும் படபடப்பும் சக மனிதனைக் கண்டு அஞ்சி நடுங்கும் அவலமும் அவர்களை மாறி மாறிப் புரட்டி எடுக்கும்போது “மனிதா.. இந்தப் பூமியை என்ன செய்துகொண்டிருக்கிறாய்...?” என்ற கேள்வி நமக்கு வராமல் இல்லை. அவர்களின் பதற்றம் நம்மை நொடிக்கு நொடி தொற்றிக்கொண்டே இருக்கிறது. எப்போ யாருக்கு இவர்கள் இங்கே மறைந்திருப்பது தெரியப்போகிறதோ என்று நமக்குள் ஏற்படும் தவிப்புக்கு எந்த வகையிலும் அமைதி இல்லை. எதிரே இருக்கும் மனிதன் வேறொரு நிறத்தில் இருக்கிறான் என்பதற்காக.. வேறொரு மொழி பேசுகிறான் என்பதற்காக... வேறொரு விருப்பத்தில் இருக்கிறான் என்பதற்காக அவனை வெட்டுதல் எப்படி முறையாகும் என்று திரும்பத் திரும்பக் கேள்விகள் நம்மைக் குத்திக் கிழிக்காமல் இல்லை.

நாட்கள் நகர நகர.. பசியும் தாகமும் அவர்களைப் பறித்துத் தின்று குடிக்கிறது. ஆனால் திடும்மென வந்து மேலே மூடி இருக்கும் கதவைத் திறந்துகொண்டு கணவனின் கைகள் அவர்களுக்கான உணவைப் போட்டுவிட்டு “கொஞ்ச நாள்தான். பத்திரமா இருங்க.. பேச்சுவார்த்தை போயிட்டு இருக்கு. சரி ஆகிடும்...” என்று திடம் கொடுத்து மறுபடியும் தலைமறைவுக்கு ஓடுவான். வாயும் வயிறுமாக இருக்கும் நாயகி பதறுவாள். கதறுவாள். கணவனைத் தன்னோடு இருக்கும்படிக் கெஞ்சி நடுங்குவாள். என்ன பேச்சுவார்த்தை... யாரோடு பேச்சுவார்த்தை... விளங்க முடியாத வெறி எங்கும் எங்கெங்கும். சட்ட திட்டங்களுக்கு இடையே சிக்கிச் சின்னாபின்னமாகும் தனிமனித வாழ்வு... பேரச்சத்தில் உள்ளார்ந்து ஒடுங்கி நடுங்கி ஆதரவுக்கு ஏங்கும்போது கண்ணீரும் கவலையும்தான் மிச்சம்.

“வெளியே நடப்பது தெரிந்துகொள்ள நான் வெளியே இருக்க வேண்டும். அது மட்டுமல்ல உங்களுக்கு உணவுக்கு நான் வெளியே இருந்துதான் ஆக வேண்டும்.. கொஞ்சம் பொறு.. வந்துவிடுகிறேன்....” என வலுக்கட்டாயமாகக் கதவை மூடித் தாளிட்டு மேலே கார்பெட்டைப் போட்டு மூடி நகர்ந்துவிடுவான். அவன் எங்கு போகிறான்... எங்கு தங்குகிறான்.. எப்படி தன்னைத் தற்காத்துக்கொள்கிறான்.. என்று எதுவும் அந்த மனைவிக்குத் தெரியாதது போலவே நமக்கும் தெரியாது. வெளியே நடக்கும் எல்லாவற்றையும் இந்த நான்கு கதாபாத்திரங்களைப் போலவே நாமும் சத்தங்களாலும் கதறல்களாகவும் அழுகைகளாகவும் ஓலங்களாகவும்தான் உணர முடியும். கேமரா இந்த அறைக்குள் மட்டுமே அலைந்து திரிகிறது... ஆசுவாசத்துக்கு ஏங்கும் அவர்களின் இதயம் போல.

அதே நேரம் அவர்களுக்குள் இருந்த கருத்து வேறுபாடுகள் களையப்பட்டு அன்பும் அரவணைப்பும் மேலோங்க மெல்ல முளைவிடுவது ஒற்றுமை. அது அப்படித்தான். பசியும் தனிமையும் இருளும் சோர்வும் சக மனிதனோடு இணக்கமாக்கிவிடும். ஒருவரைச் சாராமல் ஒருவர் வாழ இந்தப் பூமி இடம் கொடுக்கவில்லை என்பதை எப்போதுதான் இந்த இனவெறியர்கள் புரிந்துகொள்வார்கள்.. அதுவரை பலி கொடுத்துக்கொண்டே இருக்க வேண்டுமோ என்னவோ.. நாட்கள் ஐம்பதைக் கடந்துவிடுகின்றன.

ஹூட்டு இனத்தின் பிரிசிடெண்ட் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து நடந்த இந்த வெறியாட்டம் டூட்ஸி இனத்தைச் சார்ந்த கிட்டத்தட்ட பத்து லட்சம் பேரை மூன்று மாதக் கால இடைவெளியில் கொன்று தீர்த்திருக்கிறது என்பது மூச்சிரைக்கச் செய்யும் செய்தி. இரு இனத்துக்கும் இடையே நடந்த மிகப்பெரிய வன்முறை இது. வேகமாய் வெட்டிவிட்டுப் பிறகு நின்று நிதானமாக வெட்டி வெட்டிப் பார்க்கும் குரூரம் வீதிக்கு வீதி நடந்தது. ஹூட்டு இனத்தில் இருக்கும் நாயகி மாதிரியான சமாதான விரும்பிகளைக்கூட கட்டாயக் கொலைக்கு இழுத்துவிடுகிறார்கள் ஹூட்டு கொலையாளிகள். சும்மா இருப்பவனைக்கூட வெறி ஏற்றிக் கையில் அருவாளைக் கொடுக்கும் காட்சிகள் கொடூரமானவை.

“வா வந்து எங்களோடு சேர்ந்து அவர்களைக் கொல்...” என்பதுதான் கத்தி எடுத்தவன் தாரக மந்திரம். இல்லை முடியாது என்றபோது அந்தக் கத்தி சொந்த இனத்தின் மீதும் திரும்பும். பார்க்கும் இடத்தில் எல்லாம் படுகொலைகள் குலை நடுங்கச் செய்தன. குத்துவெட்டு துப்பாக்கிச்சூடு அடித்துக் கொல்லுதல் வன்புணர்வு தீ வைத்தல்... என விரட்டி விரட்டி வெட்டி வீழ்த்தி வீதி நிறைய பிணங்களைக் கொட்டிய இன வெறியன்கள் மானுடத்தைக் குப்பையாக்கினார்கள்.

பசி என்னவெல்லாம் செய்யும் என்று நன் செய்யும் ஒரு காரியம் நம் முகத்தில் கடவுள் எனும் பிம்பத்தைச் சுக்கு நூறாக உடைத்தெறியும். எந்த இன மனுஷனுக்கும் மூத்திரத்தை அடக்கும் வல்லமை இல்லையே. பிறகென்ன பெரிய புடுங்கி மேலோங்கிய இனம்.

வயிற்றில் உதைக்கும் குழந்தைக்குக்கூட பேர் வைத்து அந்தச் சுவற்றில் அவர்களின் பெயர்களோடு இணைத்து எழுதிச் சிரித்துத் தங்களைத் தாங்களே தேற்றிக்கொள்ளும் இடம்... படத்தின் மையத்தில் ஓடும் சரடில் இருக்கும் மானுடத் தேவை. நால்வருக்கும் தேவை அமைதி அமைதி அமைதி அமைதிதான். அது அவர்களின் கையில் இருக்கும் புத்தகத்தின் வழியே அவர்களைத் தொடர்ந்து படித்துக்கொண்டே இருக்கிறது. வெளியே இருக்கும் அத்தனை மிருகங்களையும் மாற்றிவிடும் ஓர் அமைதிக்குத்தான் எண்பது நாட்கள் தாண்டிவிட்ட நிலையில் அவர்களின் அந்தச் சின்ன பதுங்குகுழிப் போராட்டம். இறுதியில் என்னதான் ஆனார்கள் என்பதுதான் இனத்தின் தேவை கூடி வாழ்வதா.. கொன்றுபோடுவதா.. என்ற கேள்வியோடு நம்மைப் படம் முடிந்தும் திரையை வெறிக்கச் செய்கிறது.

1994இல் ருவாண்டாவில் நடந்த உண்மைச் சம்பவத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட திரைக்கதை இது. “ஹோட்டல் ருவாண்டா” படம் பார்த்தவர்களுக்கு அதன் இன்னொரு பகுதியில் நடந்த இந்த வரலாற்றுப் பிழை இன்னும் சுலபமாகப் புரிபடும்.

ஹூட்டு - டூட்ஸி.. இன்னும் இருக்கின்ற எந்த வெங்காய இனமாக இருந்தாலும்... எல்லாம் மனித இனம் என்பதுதான் மனதில் இருக்க வேண்டிய உறுதி. அதைக் குலையவிடாமல் பார்த்துக்கொள்ள வேண்டிய கட்டாயம் கலைகளுக்கு உண்டு. அதன் ஒரு வடிவம்தான் நிஜத்துக்குள் திரை கட்டிய இந்த சினிமா.

இறுதியில் நான்கு கைகளும் இணைந்து இந்த உலகத்திடம் வேண்டுவது அமைதி.. அமைதி.. அமைதி.. அமைதி.

| | |
|---|---|
| திரைப்படம் | : **Trees of Peace** |
| இயக்குநர் | : **Alanna Brown** |
| மொழி | : **English** |
| ஆண்டு | : **2022** |

■

தொடர் – 5

ஆதிரன்



# வானவில் வண்ண மின்னல்

## மரம் (Tree)

*யாருமில்லாத இரவின் தனிமையில்*

*வேரின்றி வாழும் கனவைக்*

*காணுகின்றன மரங்கள் – ஆதிரன்*

நமது பூமியின் உயிர் மரங்களில் இருக்கின்றன. முன்னெப்போதையும் விட மரங்களைப் பற்றிய அறிவை மனிதன் மிக அதிகமாகத் தெரிந்துகொண்டுள்ளான். மரங்களைப் பற்றிய புரிதல் என்பது மனிதனின் வாழ்வாதாரம் சார்ந்தது. காற்றுக்கு அசைவது தவிர மரங்கள் பொதுவாக நிலையானவை. அவைகள் ஒலி எழுப்புவதில்லை. ஆனால் பூமிக் கோளத்தில் மற்ற உயிரிகளைப் போலவே சக மரங்களுடன் பேசிக்கொள்கின்றன.

உண்மையில் மரங்கள் ஒரு சமுதாய உயிர்கள். மரத்தின் ஒவ்வொரு இனமும் தனிச் சமுதாயமாய் இயங்க வல்லமை கொண்டவை. மேலும் அவை மற்ற இன மரங்களுடன் எப்பொழுதுமே ஒரு நிலையான கூட்டுறவைப் பேணுபவை. பூச்சி இனங்களைப் போல், எறும்புகளின் கூட்டு வாழ்க்கையைப் போல் காட்டுமரங்களும் கூட்டுறவு மற்றும் ஒன்றுக்கொன்று சார்பு கொண்டும் உறவுகளை உருவாக்கிக்கொள்கின்றன. அதற்கான பிரத்யேக மொழிப் பரிமாற்றங்களும் கூட்டு நுண்ணறிவுப் புலமும் (collective intelligence) அவைகளிடம் சிறப்பான முறையில் அமைந்துள்ளன. முதலில் மரங்களின் மொழி பற்றிச் சுருக்கமாகப் பார்க்கலாம்.

மரங்களின் சொற்கள் வாசனைகளால் (scent) ஆனவை. அவை பேசுவதற்கு

மணங்களை உருவாக்கிக் காற்றில் பரப்புகின்றன. தன்மைக்கேற்ப அவை வேதிப்பொருள்களாகவோ வாயுக்களாகவோ உற்பத்தி செய்து காற்றில் கசியவிடுகின்றன. மரங்களின் உரையாடல் என்பது மிக மெதுவானது. அவை காற்றில் ஒரு நிமிடத்திற்கு முக்கால் இன்ச் நீளம் பரவுவதை ஆய்வாளர்கள் உறுதி செய்துள்ளனர். அதிகபட்சமாக நூறு அடிகள் வரை அவை பயணிக்க வல்லவை எனக் கணித்துள்ளனர்.

சிலவகை மரங்கள் முக்கியமாக இந்தியா மற்றும் ஆப்ரிக்கப் பகுதியில் மட்டுமே வளரக்கூடிய கருவேலமரங்கள் *(acacia trees)* சக மரங்களுக்கு எச்சரிக்கை விடுக்கும் விதமாக ஒருவகையான வாயுவை உற்பத்தி செய்து காற்றில் பரப்புகின்றன. அருகிலிருக்கும் மரங்கள் அதன் எச்சரிக்கைத் தன்மைக்கு ஏற்றாற்போலத் தமது பாதுகாப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுகின்றன.

மரணத்தின் மரம் *(death apple tree)* என்று அழைக்கப்படும் ஒருவகை மரம் வட அமெரிக்காவிலும் கரீபியன் தீவுகளிலும் காணப்படுகின்றது. இவைகளிலிருந்து வெளியேறும் ஒருவகை வேதி மணம் நமது உடம்பில் கடும் உபாதைகளை உருவாக்க வல்லவை. இதன் காய்கள் நமது ஊர் அரளிவிதைகளைப் போல மரணத்தை விளைவிக்கும். மனிதனுக்கு மிக அதிக தீங்கு விளைவிக்கும் மரம் எனக் கின்னஸ் நூலில் இடம்பெற்றுள்ளது இந்த வகை மரம். காற்று இல்லாத நேரத்தில் அவசரத் தகவல் தொடர்பிற்கு அவை மிக ஆச்சர்யகரமான வகையில் வேதி சமிக்ஞைகளை *(chemical signalsj)* உற்பத்தி செய்து தனது வேர்களில் பரவிக்கிடக்கும் பூஞ்சைகளின் மூலம் மற்ற மரங்களுக்குத் தகவல்களை அனுப்புகின்றன.

பூஞ்சைகளின் உலகம் என்பது மிகவும் பிரத்தியேகமானது. அதன் பிரம்மாண்டம் அளவிட முடியாதது. உண்மைப் பூஞ்சைகளை நாம் ஒட்டுண்ணி வகைகள் என்று மிகத் தவறாகப் புரிந்துவைத்திருக்கிறோம். தாவரங்களும் பூஞ்சைகளும் ஒன்றுக்கொன்று அளவிடமுடியாத வகையில் உதவிகள் புரிந்துகொண்டு ஒருவகை விசேசமான கூட்டுமுறை வாழ்வை வாழ்ந்துவருகின்றன என்பது அறிவியல்பூர்வமான உண்மை.

அதேபோல மரங்களின் சமுதாய இயக்கம் அவற்றின் வேர்களின் மூலமாக நிகழ்த்தப்படுகின்றது. மண்ணுக்கடியில் மரங்களின் சமுதாயம் தனது வேர்களில் உள்ள மென்மையான மேலும் தலைமுடி போல நீண்ட வேர்க்கால்களால் இயக்கம் பெறுகின்றன. இந்த வேர்க்கால்கள் மண்ணுக்கடியில் விரவிக்கிடக்கும் நுண்ணிய பூஞ்சைகளின் *(microscopic fungal filaments)* இழையைத் தொடர்பு கொள்வதன் மூலம் தங்களது சமுதாய வலைப்பின்னலை *(mycorrhizal networks)* உருவாக்கிக்கொள்கின்றன.

பூஞ்சைகள் தங்களுக்கான வெப்பத்தை மரங்கள் மூலமாகப் பெற்றுக்கொள்ளும் அதே சமயத்தில் மரங்களுக்குத் தேவையான நைட்ரஜன் போன்ற வேதிப் பொருட்களை மரங்களுக்கு மண்ணிடமிருந்து பெற்றுத் தருகின்றன. மரங்களின் சமுதாயம் *(tree's colony)* இவ்வாறாக மண்ணுக்கடியில் நிலப்பரப்பு முழுவதும் பரவிக்கிடக்கின்றன. பூமியின் கோடிக்கோடிக்கணக்கான மரங்களின் இலைகள் எவையும் ஒன்றுக்கொன்று ஒத்தது அல்ல. கைரேகைகளைப் போல் அவை தனித்திருக்கின்றன.

மரங்கள் ஓசைகளை எழுப்புகிறதா என்ற சுவாரஸ்யமான கேள்விக்கு விஞ்ஞானிகள் பதில்களைத் தேடிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் நமது மூதாதையர்கள் மரங்களுடன் உரையாடுவதில் வல்லவர்கள். மரங்கள் ரோசப்படும் என்பாள் எனது பாட்டி. மரத்தைத் திட்டினால் அது தன்னளவில் எதிர்வினை செய்யும் என்பது நமது கிழவிகளுக்குத் தெரிந்திருக்கிறது. காய்க்காத மரத்தைத் திட்டினால் ரோசப்பட்டுக் காய்த்துவிடுமாம். அனுபவ உண்மை என்கிறார்கள் முன்னோர்கள். நீங்கள் மரம் நட்டு அதனுடன் பேசி வாருங்கள். அவை உங்களுக்குச் செவிசாய்க்கும். மரத்தைத் தொடும்போது அது நமது உணர்வுகளைப்



புரிந்துகொள்ளும். பூமியின் இந்தப் பேரியற்கை நிச்சயமாக ஒரு காரணத்திற்காக உருவாகியுள்ளது என்பது எனது புரிதல். ஆனால் நிச்சயம் அது கடவுள் பற்றியதல்ல.

லட்சக்கணக்கான வகைகளில் நம்மிடையே - உண்மையில் மரங்களுக்கிடையேதான் மனிதர்கள் வாழ்கிறார்கள் – வளரும் மரங்களுக்கு ஒரு காரணம் இருக்கிறது. அது இந்தப் பூமியை உயிரோடு இருக்கச் செய்வது மட்டுமே. உலகின் மிகப்பெரிய மரம் பற்றிய ஒரு சுவாரஸ்யமான செய்தியை இணையத்திலிருந்து அப்படியே தருகிறேன்.

*'நம் ஊர் ஆலமரம்போல், ஆப்பிரிக்கா கண்டத்துக்கு ஒரு ராட்சத மரம் இருக்கிறது. உண்மையிலேயே ராட்சத உருவம்தான். 30 மீட்டர் உயரம் 50 மீட்டர் சுற்றளவுகொண்ட பிரமாண்டம் இந்த மரங்கள். இதன் தண்டுப்பகுதி வீங்கி இருக்கும். அதனால் உள்பகுதியில் அதிக வெற்றிடம் இருக்கும். இதை மக்கள் வசிப்பிடமாகப் பயன்படுத்திக்கொள்கிறார்கள். பவோபாப் என்று அழைக்கப்படும் இந்த மரங்கள் ஆப்பிரிக்காவின் அடையாளங்களுள் ஒன்று. கம்பீரத்துக்கு எடுத்துக்காட்டு. 32 ஆப்பிரிக்க நாடுகளில் இந்த மரங்கள் இருக்கின்றன. கிராமப்புற ஆப்பிரிக்காவின் வறண்ட, ஏழ்மையான பகுதிகளில் பவோபாப் மரங்கள் வளர்கின்றன. பவோபாப் தோட்டம் என்று எதுவும் இல்லை; ஒவ்வொரு மரமும் சமூகம் அல்லது குடும்பத்துக்குச் சொந்தமானவை.*

*ஒரு மனிதனுக்குத் தேவையானவை மூன்று. உணவு, உடை, இருப்பிடம். இந்த மூன்றையுமே இந்த ஒரு மரம் தருகிறது. குறிப்பாக, வறண்ட பகுதிகளில் தண்ணீர்தான் உயிர் நீர். பவோபாப் மரத்தின் நடுப்பகுதியில் குழிகள் இருக்கும். அது ஒரு இயற்கையான மழைநீர் சேகரிப்புக் கலன். வறண்ட பகுதியில் தாகத்துடன் அலையும் மனிதர்களின் தாகத்தைத் தீர்ப்பது இந்தத் தாவரம்தான். அவற்றின் சத்தான இலைகள் வனவிலங்குகள் மற்றும் வளர்ப்பு விலங்குகளுக்குத் தீவனமாகிறது. அதே இலைகளை மக்கள், கீரையைப் போல வேகவைத்து உண்கிறார்கள். பவோபாப்பின் நார்ச்சத்து மிக்க பட்டையைப் பயன்படுத்தி, துணி, கூடைகள் தயாரிக்கப்படுகின்றன.*

இது பாரம்பர்ய மருந்துகளிலும் பயன்படுத்தப்படுகிறது. இந்த மரமே வறண்ட பகுதிகளின் நீர் மற்றும் பழங்களின் முக்கிய ஆதாரமாக உள்ளது.

இதன் பழங்கள் கிளையில் 6 மாதங்களுக்கு மேல் இருக்கும். வெயிலில் காய்ந்து தேங்காய் ஓடுபோல ஆகிவிடும். அதன் கூழ் பகுதி காய்ந்து பொடியாக மாறிவிடும். அதற்குப் பிறகு கீழே விழும். இந்தப் பழத்தை எடுத்து உடைத்தால் உள்ளே மக்காச்சோளத் தக்கை போல் விதைகளுடன் இருக்கும் பகுதியை எடுத்துச் சலித்து, கஞ்சி காய்ச்சிக் குடிக்கிறார்கள். இதில் வைட்டமின் சி மற்றும் நார்ச்சத்து நிறைந்துள்ளது.

இது அழகுப்பொருள்கள் தயாரிப்பில் பயன்படுகிறது. அழகு உலகின் ரகசியம் என இதன் பழங்கள் கருதப்படுகின்றன. மரங்களின் வெற்று உட்புறங்கள் தங்குமிடமாக இருக்கிறது. பழங்குடியின மக்களால் சடங்கு நோக்கங்களுக்காகவும் பயன்படுத்தப்பட்டுள்ளன. அதனால்தான் இதை ஆப்பிரிக்காவின் 'வாழ்க்கை மரம்' என்று அழைக்கிறார்கள். இந்த மரங்கள், வறண்ட காலங்களில் இலைகளை இழந்து, ஒவ்வொரு ஆண்டும் ஒன்பது மாதங்களுக்கு இலைகள் இல்லாமல் இருக்கும்.

இத்தனை சிறப்பு வாய்ந்த பவோபாப் மரங்கள் தற்போது அழியும் நிலையில் இருக்கின்றன. இந்தத் தாவரம் ஒன்றுதான், இன்று உயிருடன் இருக்கும் மிகப்பெரிய மற்றும் நீண்ட காலம் வாழும் தாவரம் ஆகும். கடந்த 12 ஆண்டுகளில் ஆப்பிரிக்காவின் மிக மூத்த 2,500 ஆண்டுகளுக்கும் மேலான 13 மரங்களில் 9 பவோபாப் மரங்கள் இறந்துவிட்டன. இது காலநிலை மாற்றம் காரணமாக இருக்கலாம் என்கிறார்கள் விஞ்ஞானிகள்.

பவோபாப் (Baobab) என்ற இந்த மரம், இலவம்பஞ்சு வகையைச் சார்ந்தது. இந்த மரமும் பருத்திக் குடும்பத்தைச் சார்ந்ததுதான். மடகாஸ்கர் உள்ளிட்ட ஆப்பிரிக்க நாடுகளைப் பூர்வீகமாகக் கொண்டவை. இருப்பினும், பிற்காலத்தில் இவை ஆசிய மற்றும் ஆஸ்திரேலியா கண்டங்களிலும் அறிமுகப்படுத்தப்பட்டதாகச் சொல்லப்படுகின்றது.

ஆப்பிரிக்காவின் ஒரு சில பகுதிகளில் இருக்கும் இவ்வகை மரங்கள், பல்லாயிரம் ஆண்டுகள் வயதுடையவை. ஜிம்பாப்வே நாட்டிலிருந்த 2,450 வயதுடைய மரம் ஒன்று, 2011-ம் ஆண்டு இறந்துவிட்டது. 2,000 ஆண்டுகள் வயதுடைய இரண்டு மரங்களில் ஒன்று நமீபியாவிலும், மற்றொன்று தென்னாப்பிரிக்காவிலும் இருக்கின்றன. நமீபியாவில் இன்னொரு மரம் சுமார் 1,275 ஆண்டுகள் வயதுடையது என்று கணக்கிடப்பட்டுள்ளது.

பல்லாயிரம் ஆண்டுகள் வயதுடைய இவ்வகை மரங்களில் சில இந்த நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து இறப்பதற்குக் காரணமாகப் பருவநிலை மாறுபாடு சுட்டிக் காட்டப்படுகிறது. விலங்குகளில் பிரமாண்டமான டைனோசர் அழிந்ததைப் போல, தாவரங்களின் பிரமாண்டமான பவோபாப் அழியும் நிலையில் இருக்கிறது. இந்த நூற்றாண்டுதான் பவோபாப் இனத்தின் இறுதி நூற்றாண்டாக இருக்கும் என்ற கருத்து வலுத்து வருகிறது. இந்நிலையில், இந்த இனத்தைத் தொடர்ந்து பாதுகாக்க எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விஞ்ஞானிகள் குழு ஆய்ந்து வருகிறது.'

மரத்தைப்பற்றி அக்கறை கொள்ளாத மனிதர் வாழ்வு ஒரு வீண்.

**மேலும் பார்வைக்கு :**


1. https://www.e-flux.com/journal/119/402976/trees-more-than-human-collectives/
2. The Hidden Life of Trees: What They Feel, How They Communicate - by PETER WOHLLEBEN
3. Walden by Henry David Thoreau
4. Nature Anatomy by Julia Rothman
5. What A Plant Knows by Daniel Chamovitz ■

ஆழ்மனத் தேடல் - 25

## பிரதி எடுக்க முடியாப் பிம்பங்கள்

● ஜின்னா அஸ்மி



இருட்டில் என்ன
செய்துகொண்டிருக்கிறாய்
என்றபடியே வெளியே வந்தான் அவன்

விளக்கை
தேடிக்கொண்டிருக்கிறேன்
என்றேன்

நீயே ஒரு விளக்குதான்
நீ ஏன் மற்றொரு விளக்கை
தேடிப் போகிறாய்
எனச் சிரித்துவிட்டுக் கேட்டான்
எதற்காக விளக்கைத் தேடுகிறாய்?

வெளிச்சத்திற்காக என்றேன்

இருள் பிடிக்காதா என்றான்
வெளிச்சம் பிடிக்கும் என்றேன்

இருள் இல்லை என்றால்
வெளிச்சத்திற்கு
வேலையே இல்லையே
என மீண்டும் சிரித்தான்

இருளில் எதுவுமே இல்லையே
என நானும் சிரித்தேன்

இருளில் எல்லாமே இருக்கிறது
உன்னால்தான் பார்க்க முடியாது என்றான்
அவன் மேலும் சொன்னான்
இருளில் தொடங்கி
இருளில் முடிவாய்
என்பதே இன்னும் புரியவில்லை உனக்கு...
கருவறையில் தொடங்கி
கல்லறையில் முடிவது வரை
எல்லாமே இருள்தானே...
வெளிச்சத்தைத் தேடிப் போனால்
வாழ்வு கிடைக்கும்
இருளைத் தேடிப் போனால்
ஞானம் கிடைக்கும்
என்று சொல்லிவிட்டு மறைந்தான்

- அவன் இன்னும் சொல்வான்

அழகுராஜ் ராமமூர்த்தி,
இரண்டாம் ஆண்டு கல்வியியல்,
ஸ்ரீ சுந்தரேஸ்வரி கல்வியியல் கல்லூரி, மல்லி.

# குறியீட்டுக் காட்சிகளுடன் இணையும் கற்பனை



**நூல் : தேவிபாரதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் - தன்னறம் வெளியீடு**

தன்னறம் தன்னுடைய ஆக்கபூர்வமான இலக்கியப் பணியைத் தேவிபாரதியைக் கௌரவித்ததன் மூலம் செய்துள்ளது. தேவிபாரதிக்கு விருது வழங்குவதும் அவரது சிறுகதைகளைத் தொகுத்து இலவசமாக வாசகர்களுக்கு வழங்கி அவரைக் கவனம் பெறவைப்பதும் இருட்டில் கிடந்த கலைஞனை வெளிச்சத்திற்கு இழுத்துவந்து ஒளியை அவன் மீது பாய்ச்சும் பணியாகும். இந்தச் செயல்பாட்டைத் தன்னறம் நேர்த்தியுடன் நிகழ்த்தியுள்ளது. விருதளிப்பதோடு நின்றுவிடாமல் அவரது சிறுகதைகளைத் தேர்ந்தெடுத்துத் தொகுத்துப் பரவலாக்கும் பணியையும் சேர்த்துச் செய்யக்கூடிய இந்தச் செயல்பாடு உயரியது. இந்த இலக்கிய முன்னெடுப்பில் தேவிபாரதியின் தேர்ந்தெடுக்கப்பட்ட சிறுகதைகள் தொகுப்பினை இலவசமாகப் பெற்றுக்கொண்டவர்கள் அதனைப் படித்துவிட்டு மற்றொருவருக்கு வழங்குவதன் மூலம் தன்னுடைய பங்களிப்பையும் செய்ய முடியும்.

இந்தச் சிறுகதைத் தொகுப்பைப் பொறுத்தவரை தன்னறம் சிறுகதைகளைத் தேர்வு செய்த வகைமை சிறப்புக்குரியதாக இருக்கிறது. காந்தி, புத்தர், இயேசு, டால்ஸ்டாய், காமராசர், மணிமேகலை, மாதவி, கண்ணகி, நல்லதங்காள், விவேகானந்தர், பாரதி, புதுமைப்பித்தன், சுந்தர ராமசாமி, பிரபஞ்சன், ஞானக்கூத்தன், அசோகமித்திரன் என்ற பெயர்களையும் அவர்களது அடையாளங்களையும் அந்தப் பெயர்களுக்கான நிகழ்காலத்திய சமூக, இலக்கிய இருப்பையும் தேவிபாரதி தனது கதைகளுக்குள் ஓடவிட்டிருக்கிறார். ஒவ்வொரு கதைக்குள்ளும் வரக்கூடிய இந்தப் பெயர்களையும் பெயர்களைத் தாங்கிய மனிதர்களையும் அவர்கள் செய்த செயல்பாடுகள் மற்றும் வாழ்க்கை நிகழ்வுகளை நிகழ்காலச் சூழலின் மீது போர்த்திக் குறியீட்டுக் காட்சிகளுடன் தேவிபாரதி யதார்த்தமான சோதனையை நிகழ்த்தியிருக்கிறார்.

'கருப்பு வெள்ளை கடவுள்' கதையின் நிகழ்விடம் வெள்ளியங்கிரி மலையில் உள்ள சுப்ரமணிய கவுண்டர் கட்டிய சத்திரம் மண்டபம். பக்தர்களுக்காகக் கட்டப்பட்ட அந்த மண்டபத்தின் தற்போதைய அமைப்பு பற்றிய விவரணைகளோடு அங்கு தங்கியிருக்கும் பரதேசிகளைப் பற்றியும் வருடந்தோறும் நிகழும் தற்கொலை மற்றும் கொலைகளைப் பற்றியும் தகவலளிக்கப்படுகிறது. அப்படிப்பட்ட அந்த மண்டபத்தில் காமராசர் எனும் ஒரு அரசியல் ஆளுமை இறந்துபட்டிருப்பதைப் பரதேசி தகவலளிக்க, அந்தச் சடலத்தை அப்புறப்படுத்த வரும் போலீஸ் அதிகாரியின் மூலம் காவல்துறை அதிகாரிகள் பற்றிய சித்திரம் வரையப்படுகிறது. 15 வயது சிறுவன் பொக்லைன் இயந்திரத்தை அரசு சட்டத்தை மீறிக் காவல்துறை அதிகாரிகளுக்கு முன்பே இயக்குவதும், பாலியல் வன்முறைகளைத் தடுக்கும் பெரும் பொறுப்பிற்குரிய இன்ஸ்பெக்டரும் கான்ஸ்டபிளும் பல வழிகளில் சென்று அந்தச் சடலத்தை அகற்றுவதும் அப்போது வரக்கூடிய

பெரிய திருப்பத்தோடும் என அந்தக் கதை முடிகிறது. காமராசரைப் புனைவுக்குள் நகர்த்தி அவர் மீது மக்கள் கொண்ட மதிப்பு மற்றும் மரியாதையோடு ஏனைய சில சிக்கல்களையும் தனது மொழியில் தேவிபாரதி அசைவாடச் செய்துள்ளார்.

காந்தியை மையப்படுத்தி எழுதப்பட்ட கதை 'பிறகொரு இரவு'. இதில் காந்தி படேல் சந்திப்பு, காந்தி வேடமிட்ட வங்காள இளைஞன் பகவதி சரண் எனப் பலவற்றைத் தேவிபாரதி எழுதியுள்ளார். இயேசு, டால்ஸ்டாய் என்போர் வழியில் உயிரைப் பொருட்படுத்தாமல் போராட்டத்தின்போது அவர் மேற்கொண்ட பயணம் இந்தக் கதை. காந்தியை வேறொரு கோணத்தில் அவரது உள்ளுணர்வோடு தேவிபாரதி படைத்திருப்பதும் அவரது மொழியும் இந்தக் கதைக்கு உரமேற்றியுள்ளன. இந்தக் கதையில் வரும் காந்தி தனது பயணத்தின்போது நீங்கள் யார் எனக் கேட்டவர்களிடம் எல்லாம் நான் காந்தி என்கிற உண்மையைச் சொல்லும்போது அவர்கள் கூறக்கூடிய மறுமொழியானது தெனாலிராமன் படத்தில் அரசனாக இருந்த வடிவேல் சாதாரண மனிதனாகத் தனது நாட்டின் நிலையை அறியச் செல்லும்போது தன்னை அரசன் எனப் பிரகடனப்படுத்தும் நேரத்தில் அரசன் என்று பொய் சொல்லாதே மக்கள் உன்னைக் கொன்றுவிடுவார்கள் எனச் சொல்வது போன்ற நிலைக்கு ஒப்பானது.

காந்தி அமிர்தசரஸுக்குச் செல்லும்போது அவரைப் போன்றே வேடமிட்ட பலரை ரயில் நிலையத்தில் சந்திக்கிறார். அவர்களைக் காந்தி சந்திக்கக்கூடிய இடமானது சார்லி சாப்ளின் மாறுவேடப் போட்டியில் கலந்துகொண்ட உண்மையான சார்லி சாப்ளின் போட்டி முடிவில் இருபதாவது இடத்தை அடைந்தது போலக் காந்தியைப் போன்ற வேடமணிந்து தங்கள் வாழ்க்கையை நடத்தி வந்த பலர் அந்த இரயில் வண்டிக்குள் இருக்கின்றனர். அப்போது இரயில் நிலைய மாஸ்டர் உண்மையான காந்தியைக் கண்டுபிடித்துவிடுகிறார். அவர் எப்படி காந்தியைக் கண்டுபிடிக்கிறார், அவருக்கும் காந்திக்கும் இடையில் நடந்த உரையாடலில் பரிமாறப்படும் கருத்துக்கள் ஆகியன இந்தக் கதையில் முக்கியத்துவம் பெறுகின்றன. குறியீட்டுக் காட்சிகளுடன் தேவிபாரதியின் கற்பனை இணையும் புள்ளி இந்தக் கதையில் சாத்தியமாகியுள்ளது.

'ஒளிக்கும் பிறகு இருளுக்கும் அப்பால்' என்ற கதை பௌதிக மாணவியான சசிக்கும் அவளது கணவன் விஷ்வத்திற்கும் இடையில் நடக்கும் சண்டை, அவளுக்கும் அருணுக்கும் இடையிலான காதல் தொடர்பு, விஷ்வத்தைக் கொலை செய்தல் என்று கதையின் நிகழ்ச்சிகள் இருக்கின்றன. இந்தக் கதையில் கைக்கடிகாரமும் நேரமும்தான் கதையின் முழு நகர்வோட்டமாக விளங்குகிறது. அருணோடு இணைந்து கணவன் விஷ்வத்தை சசி கொலை செய்கிறாள். அருண் சடலத்தை அப்புறப்படுத்த வண்டியைத் தயார்படுத்தச் செல்லும் அந்த இரவில் இவள் குருதியின் மரணவாடையைக் கலைத்துப்போட வீட்டைச் சுத்தம் செய்யும்போது பரிசளிக்கப்பட்ட கைக்கடிகாரம் கிடைக்கிறது. கடிகாரத்தில் நேரம் பின்னோக்கி நகர்கிறது. நேரத்தோடு சேர்ந்து அந்த அறையும் செயல்பாடுகளால் விளைந்த மாற்றங்களும் காலத்தால் திரும்பப் பெறப்படுகிறது.

மாநாடு படத்தில் சிம்புவுக்கு உயிர் திருப்பி அளிக்கப்பட்டுக் கொண்டிருந்தது போல விஷ்வத்திற்கும் உயிர் காலத்தால் திரும்ப அளிக்கப்படுமா? என்பதில்தான் கதையின் முடிவு இருக்கிறது. ஒவ்வொரு வரியிலும் திகில் சூழ்ந்த கதைப்போக்கு. விஷ்வம் உயிரோடு வந்தால் அவனை சசி அதற்குப்பின் எப்படி அணுகுவாள்.. அதுவரை பின்னோக்கி நகர்ந்த கடிகாரம் அவனுக்கு உயிரை அளிக்கும் நேரத்தில் மட்டும் முன்னோக்கி நகர்ந்தால் அல்லது அப்படியே நின்றுவிட்டால் என்ன ஆகும் என்கிற கற்பனைகள் எழுகிறது. ஆண் பெண் உறவுச்சிக்கலைத் தேவிபாரதி இருளுக்குள் வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளார்.

'மீதி' கதை ஒரு தந்தையின் இறப்பிற்குப் பின் அவர் வசித்த வீட்டில் உள்ள மீதிப் பொருட்களை எடுக்க வந்த மகனுக்கு அந்த வீட்டின் அருகாமையிலுள்ள அவரது தந்தையின் நண்பர்கள் அவர்மீது வைத்திருந்த அன்பைச் சொல்லும் கதை. உறவில் உயிரை விட்டபின் இருக்கும் பொருள்களுள் எந்தப் பொருளுமற்ற அன்பும் ஓர் அடக்கம் என்பதைப் பற்றிய இந்தக் கதையைத் தனது தந்தையின் நினைவாகத் தேவிபாரதி எழுதியிருக்கிறார்.

தங்கராசு டெய்லர் தனது மனைவி கொண்டு வந்த தையல் மிஷினை அவளை விட அதிகமாக நேசித்ததையும், அந்த தையல் மிஷின் மூலம் அதிக புகழை அந்த ஊரில் அடைந்தவனாகவும் இருந்ததைச் சொல்லும் கதை, அந்தத் தையல் மிஷின் விற்கப்பட்டு தங்கராசு டெய்லர் புலம்புவதாக முடிகிறது. சுதந்திரத்திற்குப் பிந்தைய சூழலில் ஏற்பட்ட பெறும் மாற்றத்தின் காரணமாகக் கிராமங்களில் உள்ள பல தொழிலாளர்கள் பாதிப்புக்கு உள்ளாகினர். சுதந்திரத்திற்குப் பிந்தைய மாற்றங்கள் பற்றி சுந்தர ராமசாமியின் 'ஒரு புளியமரத்தின் கதை' நாவல் அழுத்தமாகப் பதிவு செய்திருக்கும். கரிசல் கதைகளிலும் சுதந்திரப் போராட்ட நடவடிக்கைகள்

மூலமும் அதற்குப் பிந்தைய இந்திய வளர்ச்சிக் காலகட்டங்களிலும் கிராமங்களில் உள்ள தொழிலாளர்களெல்லாம் நவீனத்தை அடையச் சிரமப்பட்டு எவ்வாறெல்லாம் பாதிப்புக்கு உள்ளாகினர் என்பது பதிவாகி இருக்கிறது. அப்படியான ஒரு தொடர்ச்சியாகத்தான் இந்தக் கதை எனக்குத் தெரிகிறது. ஊருக்கு ஒன்றென இருந்த தையலகம் நான்காக மாறும்போது அந்த ஊரின் பழைய தையல்காரனின் வாழ்வாதாரம் எப்படி பாதிக்கப்படுகிறது என்பதைக் கிராமத்தில் உள்ள எல்லாத் தொழில்களுக்குமான சாட்சியாக 'கருவி' கதை மூலம் தேவிபாரதி முன்வைக்கிறார்.

'கழைக்கூத்தாடியின் இசை' - கலைமீதான நம்பிக்கையோடும், குடும்பச் சூழலின் காரணமாகவும் சென்னை நகரில் உள்ள ட்ரிபிள்கேனில் தங்கியிருக்கும் மனிதர்களையும் அவர்களது வாழ்வியல் சூழலையும் கௌதம நீலாம்பரன் மற்றும் மிஸ்டர் எக்ஸ் என்ற இரு கதாபாத்திரங்கள் மூலம் இந்தக் கதை பதிவு செய்துள்ளது. வெட்டியாகத் திரியும் ஒருவனுக்கு விரக்தியும் விரக்தியினுள் ஒளிந்துள்ள தேடலும் கைக்கூடும்போது தனது பார்வையில் படும் ஒவ்வொன்றையும் பல்வேறு கோணங்களில் ரசித்து ஆய்வுக்கு நகரும்போது தனக்கு இருக்கும் சுயபிரக்ஞையை வைத்துப் பொருத்திப் பார்த்துத் தனது நனவு நிலையைச் சோதிக்கும் சூழல் அமையும். அதுதான் இந்தக் கதையிலும் நுண்ணிய குறியீட்டுப் பதிவுகளாக உரையாடலின் உட்புகலோடு பதிவாகி இருக்கிறது. கண்ணகிக்கும் அவளது சிலைக்கும் அருகில் காந்திக்கும் அவரது சிலைக்கும் அருகில் தற்போது என்ன நடக்கிறது அவையெல்லாம் அவர்களது வாழ்வோடு அல்லது கருத்துக்களோடு கொஞ்சமாவது பொருந்துகிறதா அவர்கள் ஏன் வெற்றுச் சிலைகளாக இருக்கின்றனர் என்ற கேள்வியை வாசகர் மனதில் எழுப்புகிறது.

பெயர்களுக்கான சொற்களில் பஞ்சம் என்ற பகடியான உரையாடல் வளர்ச்சியின் மூலம் எழுத்துத்துறையில் நிகழ்ந்த மாற்றங்களும் மாறாமைகளும் என்று எத்தனையோ பார்வைகளை ஒரே கதைக்குள் தேவிபாரதி புகுத்தியுள்ளார். தனது சுயபிரக்ஞையோடு எழுத்தாளர்களின் பெயர்கள் சினிமாச் சூழல் என்பனவற்றையும் கதைகளுக்குத் தேவையான இடத்தில் சுட்டியதோடு இரண்டு கதாபாத்திரங்களினுடைய தனிப்பட்ட வாழ்வைக் குறித்த மறைமுக வெளிப்பாட்டையும் நிகழ்த்திக் காண்பித்திருக்கிறார்.

மணிமேகலை, கண்ணகி, மாதவி, சித்ராபதி என்று காப்பியக் கதாபாத்திரங்களின் வழியே கூத்துக்களையும் யாக்கையின் நிலையாமையையும் கூறக்கூடிய கதையாக 'ஊழி' இருக்கிறது. மூன்றாம் தமிழாகிய நாடகத் தமிழைப் பற்றிய கண்ணகியின் பழங்கதைகள் கதையை நீளச் செய்கிறது. உடலின் அழிவும் இழிவும் எவ்விதப் பூச்சுமின்றி இக்கதையில் வெளிப்பட்டிருப்பது தெரிகிறது.

பார்ப்பனியத்தையும் பெண்ணிய அடிமைத்தனத்தையும் ஒரே புள்ளியில் நிறுத்தும் வித்தை தேவிபாரதி மூலமாக 'பழி' சிறுகதையில் சாத்தியமாகி இருக்கிறது. ஒரு பிராமணப் பெண் தாழ்த்தப்படுவதும் ஒரு தலித் ஆண் ஆதிக்கத்தைச் செலுத்தும் நிலையில் அமைவதுமே இக்கதையின் மையம். அந்த மையத்தை வேசித்தனக் கூடாரத்தின் வழி நுழைய வைக்கக்கூடிய இக்கதை இத்தொகுப்பில் குறிப்பிடத்தக்க ஒரு கதை.

மனப்பிறழ்வும் கனவும் மாறி மாறி ஒருவனைப் பாடுபடுத்தி அழிவிற்கு நேராகத் தள்ளுவதைச் சித்தரிக்கக்கூடிய கதையாக அழிவு இருக்கிறது.


சாதியச் சிக்கலுக்குள் நின்றுகொண்டு பெண்ணியத்தைப் பேசும் கதை 'பரமனின் பட்டுப்பாவாடை.' மாய எதார்த்த வெளிக்குள் நின்று பச்சை வண்ணத்தை உடைய பாவாடையின் நினைவோட்டத்தில் இக்கதையானது அமைந்துள்ளது. கல்வி பெண்ணியத்திற்குள்ளும் சாதியத்திற்குள்ளும் ஏற்படுத்தக்கூடிய தாக்கத்தை உள்ளபடியே இக்கதை எடுத்துக்காட்டுகிறது.

நல்லதங்காளை நவீன வடிவத்திற்குள் ராட்டினம் சுற்ற வைக்கும் கதையாக 'உயிர்த்தெழுதலின் சாபம்' கதையைச் சொல்லலாம். ராட்டினக்காரனுடன் ஏற்பட்ட தொடர்பிலிருந்து நல்லதங்காளின் ஏராளமான ஏக்கங்கள் நீட்சியடைகின்றன. நல்லதங்காளைச் சுதந்திரத்தோடு உலாவவிடுவதிலேயே இக்கதை அதன் உச்ச எல்லையைத் தொட்டுள்ளது.

சந்தேகம், காமம், குடும்ப உறவின் அகச் சிக்கல், கனவு என்ற அடுக்கடுக்கான கேள்விகளுக்குரிய விடையாகக் கேள்வியின் மீது தொடுக்கப்படும் மற்றுமொரு கேள்வியாக வீடென்ப கதை இருக்கிறது.

இத்தொகுப்பில் உள்ள கதைகளைக் காமம், வேசைத்தனம், சாதிய தாழ்வுமனம், மாற்றத்தை எல்லாம் பழைய கண்களில் இருந்து பார்க்கும் ஒளி, தத்துவார்த்தத் தேடலின் படிகள், பழந்தமிழ் இலக்கியத்தின் மறு உருவாக்கம், கனவின் வழிப்பட்ட கலைப் பிறழ்வு மனம், மாயவெளியில் திரியும் பதட்டம் எனக் கூறினால் பொருத்தமாக இருக்கும்.

நா.வே.அருள்
ஓவியங்கள் : திண்டுக்கல் தமிழ்பித்தன்



# பிஸ்கோத்து அப்பா

கனடாவுக்கும் அப்பா கடைசியாகப் போகிற காட்டுக்கும் ரொம்ப தூரம். அது எந்தப் பயணத்தினாலும் ஓர் அடியைக் கூட குறைத்துவிட முடியாத வாழ்க்கைப் பயணம். என்னை முழுவதுமாக வாரிச் சுருட்டி வாயில் போட்டுக்கொண்ட வழிப்போக்கனை ஏமாற்றிவிடுகிற வாழ்க்கைப் பயணம். இனி, அப்பாவை நினைத்தால்கூட அருகிலிருந்து ஒரு வார்த்தைகூடச் சொல்ல முடியாத, வாழ்க்கையின் தூரத்தைக் கடந்து திசை மாறிப்போன, வக்கற்ற மனிதனின் வாழ்க்கைப் பயணம்.

அவர் இனி என்னைக் கேள்வி கேட்கவே முடியாத தூரத்தில் இருவரையும் விலக்கிவைத்த பிரபஞ்சப் பயணம். ஏதோ ஓர் பேருந்தில் ஏறி உட்கார்ந்து எங்கேயோ போகிற திசையற்ற பயணத்தில் அப்பாவும் நானும் எதிர் எதிர்ப் பக்கங்களில் பயணம் மேற்கொண்டுவிட்டோம். அவருக்கான ஒரு கறுப்பு ஊர்தி வந்துவிட்டது. எனக்கான விமானத்தில் ஏற்றிவிட்ட பிறகுதான் அவரது ஊர்திக்கு உள்ளே சென்றார். அதற்குள்ளிருந்தபடியே பயணத்தில் எனக்கு என்னென்ன அசௌகரியங்கள் என்பதைக் கவனிப்பதாகத்தான் திறந்திருந்தன அவரது கண்கள். இனி, சந்தித்துக்கொள்ளவே முடியாத சதுரங்கப் பயணம். இந்த முட்டுச் சந்தில் இனி நான் சந்திக்க வேண்டிய பாக்கிப் பயணி மரணம் மட்டும்தான்.

அப்பாவைப் பார்த்துவிட்டு வந்த கடைசிப் பயணம். பசுமையான அதன் நினைவுகள். அப்பாவின் முகத்தில் படர்ந்திருந்த தாடியின் முடிகள் அவருக்கு உள்ளிருந்த கவலைகளிலிருந்து வேர்கள் கிளைத்த தாவரங்களைப்போல வெளுத்துப்போயிருந்தன. கனடாவின் குளிரையும் ஊடுருவி வெப்பம் தந்து வெதுவெதுப்பை ஊட்டுவதாக இருந்தது. அப்பாவுடன் இருந்து நான் எடுத்த புகைப்படங்கள், வீடியோக்களை நான் எனது அலைபேசியிலிருந்து இழந்துவிட்டிருந்தேன். இது எப்படி நிகழ்ந்தது? ஏன் இவ்வளவு அலட்சியம்? கனவின் உச்சியிலிருந்து ஆராதித்த ஒருவரின் காணொளிகளை ஒரு சருகினை உதிர்ப்பதுபோல உதிர்த்த மரமா நான்? இப்போது மாத்திரமல்ல. எப்போதுமே என் இயல்பு இப்படித்தான் இருந்திருக்கிறது. அது மட்டுமல்ல. கடைசியாக அப்பாவைச் சந்தித்த அந்தப் பயணம் மிகவும் முக்கியமானது. எனது குற்ற உணர்ச்சிகளை முழுவதுமாக என்னை எனக்கே உணர்த்திய வாழ்க்கையின் மகா தருணங்களால் ஆனது.

அப்போது அவர் கேட்ட ஒன்றுக்கு என்னால் பதில் சொல்ல முடியாத கையறு நிலையில் இருந்தேன். இப்போது நினைத்தாலும் வெட்கமாக இருக்கிறது. “எல்லாமாக இருந்த ஒருவருக்கு எல்லாமாக இருக்கும் ஒன்றை ஏன் கொடுக்கத்

தோன்றவில்லை என்பது எனக்குப் புரியவில்லை. என்னைப் பார்த்து நான் கேட்டுக்கொள்கிற கேள்வி இதுதான். இந்தப் பிரபஞ்சத்தில் சஞ்சாரம் செய்யக்கூடிய நான் உண்மையான பிரகிருதிதானா? ஏன் இப்படி இருக்கிறேன்.. எதனால் இப்படி நிகழ்கிறது என்பதற்கெல்லாம் என்னிடம் பதில்கள் இல்லை. என்ன செய்வது? இப்படித்தான் இருந்து தொலைக்கிறேன்."

மூன்றாவதாக ஒரு புத்தகம் போட்டு ஆசுவாசமாகியிருந்த தருணத்தில்தான் அப்பாவைப் பார்ப்பதற்கு ஊருக்குப் போய் வந்தேன். ஆனால் அந்தப் பயணம் அவ்வளவு லகுவாக நடந்துவிடவில்லை. காலம் அதற்கு முன்பு பல நாடக ஒத்திகைகளை நடத்திவிட்டது. ஒருவேளை ஒரு எழுத்தாளனாக ஆக நேர்ந்துவிட்டால் முற்றிலுமாக இப்படியொரு எழுத்துத்திட்டம் என் மனதிலிருந்ததா என்று சந்தேகப்படுமளவுக்கு இதை மறந்துவிட்டு எங்கேயாவது ஏதோ ஒரு போக்கில் போய்க்கொண்டிருப்பேன். இதுதான் நான்.

நான் அந்தந்த நேரத்தைய ஆள். அந்தந்த நேரத்து உணர்ச்சிக் குவியலில் ஒரு மலையைப் போலக் குப்பையாகிப்போன மகா சல்லிப் பயல். கொடுமையாக நோய் பரவிக்கொண்டிருந்த கொரோனா காலம். கொரோனா காலத்தில் அப்பாவைச் சந்திக்கப் போகாத மகனாக இதயத்தின் மாத்திரைகளைத் தினம் தினம் எண்ணி எண்ணி விழுங்கித் தொலைத்த ஈரமற்ற வாழ்க்கை எனக்கு வாய்த்துத் தொலைத்தது. எனக்கு என் அப்பாவைப் போல என் மகனுக்கு அவனுடைய அப்பா தேவைப்படுகிறார். சின்ன மீனைப் பெரிய மீன் விழுங்குகிற கதைதான்.

வாழ்க்கை என்பதென்ன? பாசம் ஆடுகிற பகடைதானே? அவரவரும் அவரவர் கரையில் நின்றுகொண்டு பாசத்தின் தூண்டிலை ஏதோ ஒரு சமுத்திரக் கரையில் பாவிக்கொண்டு இருக்கிறோம். அப்பாவும் ஊரில் மற்றவர்களும் நன்றாக இருந்து வருகிறார்கள் என்கிற செய்தி மிகவும் அவசியமான செய்தியாக இருந்தது. அவர் குரலை அலைபேசியில் கேட்கிறபோதெல்லாம் அவர் ஆறுதல் சொல்வார். அவர் என் இதய நோய் குறித்து அவ்வளவு அக்கறையாக விசாரிப்பார். அந்த வயதில் அவர் ஒரு இதய நோயாளி என்பதை மறந்துவிட்டு என்னைப் பற்றி மட்டுமே அங்கலாய்த்துக்கொண்டிருப்பார். கொஞ்ச நாள்களை உருட்டிப் புரட்டித் தள்ளிய பிறகு ஒருநாள் அவரைப் பார்த்துவிட்டு வந்துவிடுவதென யாரிடமும் சொல்லிக்கொள்ளாமல் கிளம்பிவிட்டேன்.

மனசு சதா எதாவது தீனி கேட்டுக்கொண்டேயிருக்கிறது. நொறுக்குத் தீனிதான் மனசுக்கு நோய், நொறுக்குத் தீனிதான் அதற்கு மருந்து. அறுந்து தொங்கும் பலவிதச் சிந்தனைகளின் சிலந்திவலைப் பின்னல்கள்தான் மனசின் தீராத விளையாட்டுகள். சைதாப்பேட்டையிலிருந்து எப்போது கிளம்பினேன் என்று தெரியவில்லை. நொப்பும் நுரையும் தள்ளிக்கொண்டுவந்த குதிரைகளின் மூச்சிரைத்தல்களினூடேயே கோயம்பேட்டிற்கு வந்து சேர்ந்துவிட்டேன்.

எனது சொந்த ஊருக்குப் போய் நான்கு மாதங்களாகிவிட்டன. அப்பாவும் எனது ஊரும் அந்தளவுக்கு அந்நியமாகிப் போயிருந்தார்கள். இவ்வளவு நாள்கள் பார்க்காமல் இருந்ததே இல்லை. எப்போது சொன்னாலும் `பரவாயில்லப்பா... நீ ஒடம்பப் பாத்துக்க.... எல்லாம் சரியாயிடும்... அப்பறம் முடியறப்ப வா...` என்றுதான் சொல்வார். நாலைந்து மாதங்களுக்கு மேல் ரப்பர், இழுவையின் எல்லையைத் தாண்டி அறுந்து போய்விடுகிறது.

"என்னப்பா நீ வர்ரியா... எனக்கு ஒன்னயும் ஒன் வீட்டயும் பாக்கணுமுன்னு ஆசையா இருக்குது... பேசாம நான் வந்துடவா..." என்று எனது சித்தப்பாவே கேட்க ஆரம்பித்துவிட்டார்.

"எனக்கு முதுகு வலிப் பிரச்சினைப்பா. டாக்டர்கள் முதுகுத்தண்டில் ஆப்பரேஷன் செய்யணும்னு சொல்லிட்டாங்க. அதனால்தான் வரல... இப்போ கொரோனா வேற. எச்சரிக்கையா இருக்கணுமாம்..." என்று சொன்ன அடுத்த நொடியே.. "வேணாம்பா... வேணாம்பா.... நீ நல்லா இருந்தாதாம்பா எல்லாமே.... நீ வரவேணாம்பா..." என்று சொல்லிவிட்டார்.

ஒரு வாரத்திற்குள் அவரது உடம்பு கொஞ்சம் படுத்த ஆரம்பித்துவிட்டது. எனக்கு லேசாகப் பயம் வர ஆரம்பித்துவிட்டது. இனியும் தாமதிப்பதில் அர்த்தம் இல்லை. இப்போது கிளம்பித்தான் ஆகவேண்டும். புறப்பட்டுவிட்டேன். சென்னைக் கோயம்பேட்டிலிருந்து சிங்கபெருமாள் கோயில் வரை பேருந்து ஊர்ந்துதான் போகும் என்பது தலைவிதியை நம்பாதவர்கள்கூட நம்புகிற போக்குவரத்து விதி.

மரவட்டை என்று சொல்லும்படியான ரயில் பூச்சிமீது ஏறி ஊருக்குப் போகிறபோது எவ்வளவு நேரம்தான் வெறுமனே வேடிக்கை பார்த்தபடி பயணிக்க முடியும்? கொஞ்ச நேரத்துக்குள் சிலபேர் ஒரு குட்டித் தூக்கம் போட்டுவிடுகிறார்கள். சிலர் வாய்கோணித் தூங்குவதைப் பார்த்தால் இந்த உலகத்தை நக்கலடிப்பது போல இருக்கும். இவர்களுக்காகவே வந்திருக்கும் முகக் கவசக் கலாச்சாரம் வாழ்க என்று சொல்லத் தோன்றியது. முகக் கவசம் போட்டபடி இவ்வளவு தூரப் பிரயாணம் சிரமமான காரியம்தான். மூச்சு முட்ட ஆரம்பித்துவிடுகிறது. கழற்றினால் கெரோனா பயம். இருப்பு கொள்ள முடியாத இம்சை.

ஆமை வேகத்தில் மிக மெதுவாக ஊர்ந்து செல்லுகிற துர்ப்பாக்கியமான ஒரு பயணத்தில் இப்படி ஏதேதோ நினைப்புகள் அடுக்கடுக்காக வர ஆரம்பித்துவிடுகின்றன. மனசு ஏதாவது ஒரு கயிற்றைப் பற்றிக்கொண்டு ஏற ஆரம்பித்துவிடுகிறது. முக்கியமான நினைவுச் சங்கிலி அறுந்து தொங்குகிறது. நானோ அறுந்த சிலந்தி இழைகளை முடிச்சுப் போட்டுப் புதிய புதிய இழைகளில் ஏறிக்கொண்டிருக்கிறேன். எதையோ தீவிரமாகச் சொல்ல வந்து திடீரென்று மனம் வேறொன்றில் லயித்துவிடுகிறது.. அப்போதைக்கப்போது என் மனம் மாறிவிடுகிறது. என் இயல்பை ஒரு நேர்க்கோட்டில் நிறுத்த முடியுமா என்று என்னால் நம்ப முடியவில்லை. இப்படியேதான் காலம் தள்ளியாக வேண்டும்.

ரொம்ப வேண்டியவராக இருப்பார் ஒருத்தர். கண்ணுக்கு எதிரில் குத்துக் கல்லாட்டம் நின்றுகொண்டிருப்பார். ஒரு வார்த்தை பேசத் தோன்றியிருக்காது. ஆனால் அவர் போய்விட்ட பிறகு அடடா எதையெதையல்லாம் பேசியிருக்க வேண்டும் என்று மனம் வருந்த ஆரம்பிக்கும். தும்பை விட்டுவிட்டு வாலைப் பிடிக்கிற கதைதான். அதுதான் எனது விசித்திர மனசு.

ஆயாவை உட்காரவைத்து டேப் ரெக்கார்டரை ஆன் பண்ணி அவருடன் நானும் தம்பிகளுமாய் உரையாடிய கேசட். பொக்கிஷம் போலத்தான் பத்திரமாக வைத்துக்கொண்டிருந்தேன். இப்போது எங்கு போயிற்று என்று கேட்டால் என்னிடம் பதில் கிடையாது. ஒவ்வொரு ஆண்டும் ஆயாவின் நினைவு தினத்தன்று உயிர்போகும் அந்த வலிக்கு மருந்தே கிடையாது. என்னை நானே தின்றுகொண்டிருக்கிறேன். அம்மாவுடனும் பேசி செல்போனில் பதிவு செய்துவிட்டேன் என்று மிகவும் மகிழ்ந்துபோயிருந்தேன். காலகாலத்துக்கும் அம்மா என் கைபேசியில் ஆசீர்வதித்துக்கொண்டேயிருப்பார் என்று கனவு கண்டுகொண்டிருந்தேன். ஆனால் அந்தப் பதிவு இப்போது இல்லை. அந்தப் பதிவை எப்படி நீக்கம் செய்தேன். எனக்குத் தெரியாது. அம்மா போன பிறகு எவ்வளவு பெரிய இழப்பு அது? என் கையை நானே கத்தரித்துக்கொள்ள வேண்டும்போல் தோன்றுகிறது. எனது செல்போனைப் பார்க்கும் போதெல்லாம் ஏற்படும் துயரத்துக்கு அளவே கிடையாது.

சிறு வயதில் என்னை நானே கவிஞனாகக் கற்பிதம் செய்து ஊசியில் ஓலைச் சுவடியில் எழுதி நீண்ட நாட்களாகப் பத்திரமாகப் பாதுகாத்து வந்தேன். ஒரு பைத்தியக்காரக் கனவின் நவீன அடையாளமாக இருந்திருக்க வேண்டிய அந்த ஓலைச் சுவடி இப்போது எங்கே? அன்று எழுதிய என் முதல் கவிதை இப்போது எங்கே இருக்கிறது? தனது தடத்தைத் தானே அழித்துக்கொள்கிற கால்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? கவிஞனாக வரவேண்டும் என்று ஒருநாள் முழுதும் சென்னை சாந்தோம் கடற்கரையில் கடல்மாதாவிடம் வேண்டுகோள் வைத்து அதன் நினைவாக ஒரு பிடி மணல் எடுத்துப் பத்திரப்படுத்திய அந்தக் காகிதப் பொட்டலத்தைக் கவிதை நோட்டுகளின்

நடுவில் ஒரு விலையுயர்ந்த பொருளைப் போல வைத்திருந்தேன். இன்று அந்தக் கனவுப் பொட்டலம் எங்கே போனது என்றே தெரியவில்லை.

என் மூளையின் ஞாபகப் பட்டியலில் அந்தந்த நேரத்துத் தேவையைப் பொறுத்தே தீர்மானிக்கிற சூட்சுமம் எதற்குள் இருக்கிறது? நான் பள்ளியில் படிக்கிறபோதே பெரிய அகூர் ஐயாவிடம் எனது கடிகாரத்தைச் சரிசெய்து கொடுக்கச் சொல்லிக் கேட்டேன். வாட்ச் ரிப்பேர் செய்வது அவரது சைடு பிசினஸ். அவருக்கு என்ன தோன்றியதோ தெரியவில்லை. நடந்துகொண்டிருந்த அவர் தலைக்கு மேல் தொங்கிய வேப்பமரத்தில் ஒரு கொத்தைப் பறித்து என்னிடம் கொடுத்து `இதைப் பிடி` என்றார். `என்ன சார் இதைக் கொடுக்கிறீங்க` என்று சொல்லியபடியே கீழே போட்டுவிட்டேன். `போ... ரிப்பேர் பண்ண முடியாது` என்று சொல்லிவிட்டார். நான் கை நழுவியவன் என்று சொன்னார். அதன் பொருள் என்ன? ஒரு ஆசிரியரை இப்படி அலட்சியம் செய்து அவர் கொடுத்த வேப்பிலைக் கொத்தைக் கீழே எறிந்திருக்கக்கூடாதோ? அப்போது எறிந்துவிட்டேன். வாழ்நாள் முழுவதும் எண்ணியெண்ணி மருகுகிறேன்.

எப்படி நான் முக்கியமான தருணங்களில் எப்படி அலட்சியத்தில் மூழ்கிவிடுகிறேன் என்று எனக்கே புரியவில்லை. முக்கியமான விஷயங்களைக் கோட்டை விடுவதுதான் எனது வாழ்க்கையின் சாராம்சம் போலும். எப்படிப்பட்ட இளகிய மனசாக இருந்தும் என்ன பயன்? இருக்கக்கூடாத நேரத்தில் இருக்கிற அந்த அலட்சிய பாவத்துக்கு என்ன காரணம்? எனது வாழ்க்கை என்பது வரத்தின் கூடவே ஒட்டிக்கொண்டு வந்த சாபம் போலத் தோன்றுகிறது.

ஒரு வழியாய்ப் பேருந்து திண்டிவனம் வந்து சேர்ந்துவிட்டது. சென்னையிலிருந்து திண்டிவனம் வந்தது பெரிதில்லை. திண்டிவனத்திலிருந்து ஊருக்குப் போவதுதான் மிகவும் கஷ்டமான காரியம். முதலில் திண்டிவனத்தில் மோசமாக நிர்வகிக்கப்படும் பேருந்து நிலையத்துக்குச் செல்ல வேண்டும். பேருந்து வரும் வரையில் உட்காரச் சகிக்காத, வெற்றிலை எச்சில் இல்லாத இடமாகப் பார்த்து உட்காரவேண்டும். பேருந்து வந்ததும் முண்டியடித்து ஏறவேண்டும். ஏறி இடம் கிடைத்து உட்கார்ந்துவிட்டால் ஓட்டுநர் வந்து வண்டியை எடுக்கும் வரை பொறுமையுடன் காத்திருக்க வேண்டும். ஊர் போகிற வரையிலும் குண்டும் குழியுமான சாலையில் பேருந்து விழுந்து விழுந்து எழுந்திருக்க வேண்டும். அப்போது நாம் இருக்கைகளில் விழாமல் இருந்தாக வேண்டும். வாழ்க்கையே ஒரு வித அதிர்ஷ்டத்தோடு சம்பந்தப்பட்ட விஷயமாக ஆகிவிடுகிறது.

திண்டிவனத்தில் என் சின்ன வயசில் ஒரு மறக்க முடியாத சம்பவம் நடந்தது. எனக்கு ஈளை உடம்பு. எங்கெங்கோ சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார் என் சித்தப்பா. எங்குமே சரியாகவில்லை. ஒரு நிரந்தர நோயாளிச் சிறுவனைத் தோளில் சுமக்கிற பல்லக்காகத்தான் அவர் இருந்திருக்கிறார். என் வாழ்க்கையில் கிடைக்கிற எந்த மிகப் பெரிய சிம்மாசனமும் அவரது தோள்களை விடச் சிறியதுதான். அவர் தோளில் நான் உட்கார்ந்து போன அந்த நாட்கள் எனக்குத் தந்த மகிழ்ச்சி எந்தச் சொர்க்கத்தைவிடவும் மிகப் பெரியதுதான். திண்டிவனத்தில் டாக்டரிடம் காட்டிவிட்டுக் கறி கடைக்குப் போகலாம் என்று என்னைத் தூக்கி வைத்துக்கொண்டார். எனக்கும் சந்தோஷம். அங்கு போனால் கடைக்குக் கடை உரித்த ஆடுகள் தொங்கிக்கொண்டிருந்தன. ‘ஏம்பா... நீ அடுப்புக் கரி சொல்றன்னுதான நெனச்சேன்... ஐயய்யோ... இந்தக் கறி எனக்கு வேண்டவே வேண்டாம்’னு அடம்பிடிச்சி அழ ஆரம்பிச்சேன்.

டாக்டர் ஈளையை முறிக்கக் கறி கொடுக்கச் சொல்லியிருந்தாலும் எனக்குப் பிடிக்காத ஒன்றைக் கடைசி வரையிலும் வற்புறுத்தவேயில்லை. இந்த விஷயத்தில் ஒரு நோஞ்சான் பிள்ளையின் மீது வந்திருக்கக் கூடிய ஒரு சின்ன வருத்தம் கூட அவருக்கு வரவில்லையா என்று இன்றைக்கும் ஆச்சரியப்பட்டுக்கொண்டிருக்கிறேன்.

நான் ஒவ்வொரு முறையும் ஊருக்குப் போகிறபோதும் மிகப் பெரிய பரிசு அல்லது வாழ்க்கையில் பெற முடியாத விலையுயர்ந்த

ஒன்று இருக்கத்தான் செய்கிறது.. நான் போய் ஊரில் இறங்குகிறபோது கோலூன்றிக்கொண்டு சித்தப்பா வாப்பா என்று சொல்வாரே அப்போது அவர் கண்களில் கசிகிற ஒன்றிற்கு இன்னும் உலகில் யாரும் பெயர் வைத்திருக்க முடியாது. அதற்கு ஈடாக வேறெதையும் சொல்லிவிட முடியுமா என்றும் தெரியவில்லை. அந்தக் கணங்களில்தான் அவரது மொத்த வாழ்க்கையையும் என்மேல் இறக்கி வைத்தது மாதிரி இருக்கும்.

அவருக்கு நான் என்ன செய்துவிட்டேன்? ஒன்றுமேயில்லை. அவர் அன்பிற்கு முன் ஒரு பிச்சைக்காரனைப் போலக் கையேந்தி நிற்கத்தான் தோன்றும். அவர் என்னை எப்போதுமே காத்திருக்க விடாத அன்பின் வள்ளல். கோலூன்றித் தட்டுத் தடுமாறி என்கூட வந்த எனது சித்தப்பா எனது சித்தப்பாவா? சின்ன வயதில் அவருடன் நடந்துபோக நான் ஓட்டமாய் ஓடுவேனே அந்த சித்தப்பாவா இவர்? வயல் வரப்புகளில் என்னைத் தோளில்வைத்து அநாயசமாகத் தூக்கிச் சென்ற அந்த சித்தப்பாவை இந்தக் கருணையற்ற காலம் கொன்றுவிட்டது.

ஒருமுறை பேதி ஆகி தாரணை பாரணையாக நான் கிடக்கிறபோது யார் கூப்பிட்டும் டாக்டரிடம் போகாத நான் சித்தப்பா வரட்டும் என்று அவரது தோள்களில் ஏறி மருத்துவமனைக்குப் போய் வைத்தியம் பார்த்துக்கொண்டது ஞாபகத்துக்கு வருகிறது. இன்னும் ஒரு மணி நேரம் கழித்து வந்திருந்தால் உயிர் பிழைத்திருக்காது என்று டாக்டர் சொன்ன வார்த்தைகள் ஈனசுரத்தில் எனக்கும் கேட்டது. பன்னிரண்டு வயசுப் பையனை ஒரு நெல் கட்டைப் போல சர்வ சாதாரணமாகத் தூக்கிச் சுமந்து சென்று உயிர் காத்த அந்தச் சித்தப்பாவா இவர்? ஆஜானுபாகுவான உடல் மெலிந்து போயிருந்தது. ஆனால் அந்தக் கதர் சட்டை இன்னும் கம்பீரம் இழக்கவில்லை. தான் ஒரு காங்கிரஸ்காரன் என்று கடைசி வரையிலும் பெருமிதத்துடன் இருந்தவர்தான். கம்பீரமான சித்தப்பாவா இப்படி நோயால் இளைத்த தேகத்துடன் இருக்கிறார்? ஆனால் வார்த்தைகளில் அந்த நம்பிக்கை இன்னும் வற்றவே இல்லை. அது ஒரு ஊருணிக் குளம். அதன் ஒரு சொட்டு நீர் ஆயுளுக்கும் போதும்.

சித்தப்பாதான் எனது உலகம். ஆனால் காலம் தனது விசித்திரமான விளையாட்டுக் கூடத்தில் சித்தப்பாவின் இருப்பை வெறும் மருந்து மாத்திரைகளாக்கிவிட்டது. ஏழெட்டு விதமான மாத்திரைகள். அவரது இதயமும் பேருந்து மாதிரியாகிவிட்டது. இந்த மாத்திரைச் சக்கரங்களால்தான் அது தட்டுத் தடுமாறி உருண்டுகொண்டிருந்தது. ஊரில் எல்லாப் பிள்ளைகளும் ஏரடித்துவிட்டோ களை பறித்துவிட்டோ குறைந்தபட்சம் சின்னச் சின்ன வயல் வேலைகள் செய்துவிட்டோதான் பள்ளிக்கே வருவார்கள்.

அன்றைக்கு என் நண்பர்கள் எல்லோருடைய கதையும் இதுதான். ஆனால் அப்பா இல்லாத பிள்ளை நான். யாரும் எனக்கு எந்த வேலையும் இடக் கூடாது என்பதில் சித்தப்பா கடைசி வரையிலும் கண்டிப்பாக இருந்தவர். மற்றச் சித்தப்பாக்கள் கழனிக்குச் செத்த போய் வாப்பா என்று சொல்கிறபோதுகூட படிக்கிற புள்ளைய வேல வாங்காதீங்கடா என்று கறாராகச் சொல்லிவிடுவார். அவர் அனுமதித்ததனால்தான் வயல் வெளி முழுவதும் எனக்குத் திறந்தவெளி நூலகங்களாக இருந்தன. அவரைப் பார்த்துக் கொண்டே இருந்தேன். அவர் என்னைப் பார்த்துக்கொண்டே இருந்தார். ஒருநாள் ஓடிவிட்டது. ஊரில் தங்காமல் சென்னைக்குத் திரும்பியாக வேண்டுமே.

“சரிப்பா நான் கிளம்பட்டுமா” என்று கேட்டபோது முதல் முதலாய் முகத்தில் பிரிவின் கலவரம் தெரிந்தது. அதற்குமுன் அப்படியொரு கலவரத்தை அவர் முகத்தில் நான் பார்த்ததேயில்லை. அவர்தான் எனக்குப் பெயர் வைத்தவர். அந்தக் காலத்துப் போலீஸ் கமிஷனர் எஃப்.வி. அருள் அவருக்கு ரொம்பப் பிடிக்கும். அவர் நேர்மையான அதிகாரியாம். அவரது ஞாபகார்த்தமாகத்தான் அப்பா எனக்கிந்தப் பெயரை வைத்தார்.

சின்ன வயசில் தாய்ப்பால் கிடைக்காத பிள்ளைக்கு அதிகச் செல்லம் கிடைத்தது. சித்தப்பா ஒரு பிரிட்டானியா பிஸ்கட் டின்னை வாங்கிவந்து விட்டார். எங்கள் ஊருக்குள்

வந்த முதல் பிஸ்கட் டின் அவர் வாங்கி வந்ததாகத்தான் இருக்கும். அதற்கப்புறமும் இன்று வரைக்கும் பிஸ்கட் டின் யாரும் வாங்கி வந்தார்களா என்பது சந்தேகம்தான். அவரை நினைக்கிறபோதே பிரிட்டானியா பிஸ்கட் வாசனை வருவதைத் தவிர்க்கவே முடியாது. அந்த டின்னுக்குள் என் சித்தப்பாதான் வில்லை வில்லையாக வாசனை வீசியபடி இருந்திருப்பார். அவரை நான் இப்படித்தான் சிறுகச் சிறுகத் தின்றுவிட்டிருக்கிறேன்.

எனக்குப் பெயர் வைத்தது அவர்தான் என்று அறியாத அந்தப் பருவத்திலேயே அவருக்கு நான் வைத்த பெயர்தான் ‘பிஸ்கோத்து அப்பா’. கவிதை உலகம் எப்படி இருக்கிறது என்று கேட்டார். கவிதை உலகத்தில் நான் கடக்க முடியாத பாலைவனங்களையெல்லாம் அவரிடம் எப்படிச் சொல்வேன்? நான் முந்தி... நீ முந்தி... என்று இலக்கிய உலகில் ஏராளமான ஒட்டகங்கள், எத்தனையோ கரை தட்டிப்போன பாலைவனக் கப்பல்கள்.. “ஏதோ போகுதுப்பா” என்று இரண்டு வார்த்தைகளில் முடித்துக்கொண்டேன். அவரது மௌனத்திற்குள் ஏராளமான வார்த்தைகள் மீன்களைப் போல நீச்சல் அடித்துக்கொண்டிருந்தன.

பள்ளிப் படிப்பை முடித்தபின் மைலம் கல்லூரியில் தமிழ்தான் படிப்பேன் என்று அடம் பிடித்தேன். எனது குரு இந்திப் பண்டிட் மூலம் என்னை பி.காம். படிக்க வைத்தது அவர் நெஞ்சில் நிழலாடிக்கொண்டிருக்கலாம். அவரளவிற்கு எனது வாழ்க்கையின் உயரத்தை அப்படித்தான் அவர் அளந்து பார்த்தார். எனது வாழ்க்கையை ஒரு வசதியான நிலையில்தான் அவர் பார்க்க விரும்பினார். கூழ் கூட சரியாகக் குடிக்கக் கிடைக்காத ஒரு வாழ்க்கை தன் அண்ணன் மகனுக்கு வாய்த்துவிடக் கூடாது என்று வாழ்நாள் முழுவதும் ஒரு செருப்பைப் போலத் தேய்ந்து போனார்.

“இப்போ ஒரு புத்தகம் போட்டையாமே. அதுல அம்மாவப் பத்தி ரொம்ப நல்லா கவிதை எழுதியிருக்கியாமே. தலைப்பு கூட வெயிலுக்கு...” எங்கோ கூர்ந்து நோக்கியபடிச் சொன்னார். “வெயிலுக்கு இன்னொரு பெயர் மழை.” அவரைப் பற்றி ஒரு சின்னக் கவிதை கூட எழுதியில்லாத எனக்குச் சுரீர் என்றது. அதை அவர் உணர்ந்துதான் கேட்கிறாரோ?... சீ... சீ... இருக்காது.... “புத்தகம் எடுத்து வந்திருக்கியாப்பா” என்றார். சுருக்கென்றது.

எல்லாமாக இருந்த ஒருவருக்கு எல்லாமாக இருக்கும் ஒன்றை ஏன் கொடுக்கத் தோன்றவில்லை. ஒரு புத்தகத்தைப் பையில் எடுத்துப் போடுவதை எது தடுத்தது? வாழ்நாள் முழுவதும் தத்தம் செய்தவருக்கு ஒரு புத்தகத்தைக் காணிக்கை கூடச் செய்யவில்லையே... குறைந்தபட்சம் ஒரு புத்தகத்தை அவருக்குக் கொடுக்க வேண்டும் என்று கூடத் தோன்றவில்லையே... ஏன்? என்னையே எனக்குப் புரியவில்லை.

அவருடன் ரத்தமும் சதையுமாகப் பேசிய பேச்சுகள் அடங்கிய வீடியோவை இழந்திருந்த எனக்கு இப்போது கடைசியாக ஒரு வீடியோ கிடைத்திருக்கிறது. ஆனால், எனது சேமிப்பில் வைத்திருக்க விரும்பாத வீடியோ. எப்படி எப்படியோ என் சித்தப்பாவைப் பார்த்திருந்த நாட்கள் என்னைக் கேலி செய்கின்றன. இந்தக் கோலத்தில் ஒரு வீடியோவை நான் எப்படிப் பார்ப்பேன்? பார்ப்பதற்குக் கண்கள் அல்லாத வேறு என்ன உறுப்புகள் இருக்கின்றன? வீட்டுக்குமுன்பு ஊரே திரண்டிருந்தது. விசுப்பலகையின் மீது கிடத்தப்பட்டிருந்த அவர் மேலிருந்த மாலைகளையெல்லாம் அகற்றிக்கொண்டிருந்தார்கள். அவரது வாழ்க்கையில் தவிர்க்க முடியாத இருப்பாகிப் போயிருந்த என்னை அவர் அருகிலேயே வரவிடாத ஒரு நாளின் பிரிவு நொடிகளால் வடிவமைந்த கொடுமையான நிகழ்வு. கடைசியாகக் கனடாவிலிருந்தபடி நான் கவனித்துக்கொண்டிருக்கும் அவரது குளியல் நடக்கிற காட்சி. ஐஸ் போல உறைந்துபோன அக்டோபர் மாத இறுதிக் குளிரிலும் ஓர் எரிமலைக்குள் என்னை எடுத்து வீசியதைப் போல உணர்ந்தேன். முதல் முறையாக வீட்டுக்கு முன் அவர் சொம்பில் தண்ணீர் அள்ளி ஊற்றி அவராகவே குளித்துக்கொள்ள முடியாத குளியல். என் கண்ணீர்த் துளிகள் கலக்க முடியாத அவரது கடைசிக் குளியல். ■

தொடர் - 8

பச்சைய பாத்திரம்

● கோ.லீலா



# நிலமெனும் நங்கை நல்லாள்

உணவென்பது நிலத்தொடு நீரே.

ஆம்! நிலத்தொடு நீரே என்கிறார். எந்த நிலம் சார்ந்து வாழ்கிறோமோ, அந்நிலத்தில் விளையும் உணவுப்பொருளும், நீருமே உணவு என்கிறது பாடல்.

**இலம்என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம்என்னும் நல்லாள் நகும்**

*(அதிகாரம்: உழவு, குறள் எண்: 1040)*

என்கிறது குறள்.

ஆனால், இன்று நிலத்தின் நிலையென்ன?

மட்காக் கழிவுகளால் நிரப்பப்பட்டு மூச்சுத் திணறிக் கிடக்கும் நிலப் பெண்ணின் மீது இன்னும் இரசாயன உரங்களை வீசி, அவளை மலடாக்கி நிற்கும் பேதமையை என் சொல்வது?

•

விவசாயத்தால் பாழ்படும் நீரும் நிலமும்...

விவசாயத்திற்குப் பயன்படுத்தப்படும் இரசாயனங்கள் தண்ணீர் வழியே பல்வேறு நீர்நிலைகளை அடைகின்றன. கூடவே நிலத்தின்வழி ஊடுருவி 1000 அடி வரை கூட பயணித்து நிலத்தடி நீரை அடைந்துவிடுகின்றன.

நிலத்தடி நீர், பாய்ச்சும் நீர் இரண்டிலும் இரசாயனம் இருக்க, விளையும் பயிர்களில் தங்கிவிடும் இரசாயனங்கள் வைக்கோல்வழி கால்நடைகளை அடைகின்றன.

வைக்கோல் வழியே பசுவின் பாலிலும் இரண்டறக் கலந்துவிடுகின்றன இரசாயனங்கள்.

இதை ஒரு கர்ப்பிணிப் பெண் அருந்தும்போது அவளின் உடலிலும் கலந்துவிடுகிறது. அவள் ஈன்றெடுக்கும் மகவுக்குக் கொடுக்கப்படும் முதல் உணவே தாய்ப்பாலே விஷமாக இருப்பின், இச்சமூகத்தின் உடல் மற்றும் மனக் கட்டமைப்புகள் மாறும் அபாயங்கள் இருக்கின்றன.

காசர்கோட்டில், கறிவேப்பிலைக்கு அடிக்கப்படும் எண்டோ சல்ஃபான் இலைகளில் தங்கிவிட, அவற்றை உண்ணும் பெற்றோருக்குப் பிறக்கும் குழந்தைகள் பல்வேறு உடல் மற்றும் மனப்பிறழ்வுடன் பிறக்கிறார்கள் என்பது கண்கூடாகப் பார்க்க முடிகின்ற ஒன்று.

இது மட்டுமன்று, நிலத்தில் வாழும் பல்லாயிரக்கணக்கான நுண்ணுயிரிகளும், பூச்சிகளும், வண்டுகளும் இரசாயன உரங்களால் மாய்ந்துபோகின்றன.

எண்ணற்ற பறவைகள் தன் சிறகடிப்பை நிறுத்திக்கொள்கின்றன. இவை உரங்கள்தானா? உரத்திற்கும் எருவிற்கும் உள்ள வேறுபாடுதான் என்ன?

“ஏரினும் நன்றால் எரு இடுதல்” என்கிறார் வள்ளுவர். உழவர்களும் எரு என்றுதான் சொல்கிறார்கள்.

உரம் எனப்படுவது உள்ள வெறுக்கை என்கிறார் வள்ளுவர். பயிருக்கு உள்ளிருந்து வரும் ஊக்கம் உரம். பயிருக்கு யார் உரத்தைத் தர முடியும்?

உள்ளிருக்கும் உரம் மேம்பட, பயிரின் வாழ்விடத்தைச் சிறப்பானதாக, சீரிய இடமாகத் தயார் செய்து தரவேண்டியது நம் கடமை.

நாம் செடிக்குத் தருவது “எரு.” எருவை உண்பது நுண்ணுயிரிகளும், மண்புழுவும்... இவை தரும் கழிவைத்தான் செடி தின்கிறது. நுண்ணுயிர் மற்றும் மண்புழு மண்ணில் தொடர்ந்து வேலை செய்வதன் மூலம் மண் இலகுவாக்கப்பட்டு, வேர்களுக்குக் காற்றோட்டமும் கிடைக்கிறது. கூடவே நைட்ரஜன், மாங்கனீசு, பாஸ்பரஸ், இரும்பு கிடைக்க, பயிர் உரத்தோடு வளரும்.

ஆனால், எருவிற்கும், உரத்திற்கும் வேறுபாடு அறியாத நாம் இரசாயன உரங்களை நிலத்தில் கொட்டி, பயிர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரத்தை அழித்து மண்ணையும் மலடாக்கி மானுடமும் அழிகிறது.

இந்தோனேஷியாவில் பூச்சிகள் குறித்தான ஒரு பயிற்சிப் பட்டறையில், ஒவ்வொருவரிடமும் கையில் ஒரு வலையையும், நெகிழிப் பையையும் கொடுத்துத் தோட்டத்திலிருந்து பூச்சிகளைப் பிடித்து வரச் செய்து, அவற்றைப் படமாக வரைந்து பயன்தரும் பூச்சிகள், பயன்தராப் பூச்சிகள் எனப் பிரிக்கச் சொல்லி இருக்கின்றனர்.

அதில் பயன்தரும் பூச்சிகளே எண்ணிக்கையில் அதிகமாக இருந்திருக்கின்றன.. பயன்தராப் பூச்சிகள் குறைவாகவே இருந்திருக்கின்றன.

இப்போது இரசாயன உரக் கரைசலைப் பூச்சிகளின் மீது தெளிக்கச் சொல்லி இருக்கின்றனர். அதில் இறந்தவை அனைத்தும் பயன் தரும் பூச்சிகளே. இதன் மூலம் தீங்கு செய்யும் பூச்சிகள் ஏன் எண்ணிக்கையில் வளர்ந்துள்ளன என்பதைக் கண்டறிந்துள்ளனர். நன்மை தரும் பூச்சிகளைக் கொல்லவே இராசயன உரங்கள் பயன்படுகின்றன.

இன்று, புற்றுநோய், நுரையீரல் பிரச்சினை, சுவாசக் கோளாறுகள், செரிமானக் கோளாறுகள், குழந்தையின்மை என அத்தனைப் பிரச்சனைகளுக்கும் காரணம் நிலமெனும் நங்கை நல்லாள் மீது நாம் வீசும் இரசாயன உரங்களே.

நிலத்தை மூடி வைத்தலே முக்கியம். திறந்து கிடந்தால், பூமி சூடேறி, பூமியில் வாழும் உயிர்கள் அழியும். அதனால் நிலமெனும் நல்லாளை மூடி வைத்தல் வேண்டும். எதைக் கொண்டு மூடுவது?

மேல்மட்ட உயிரின் கழிவுதான் கீழ்மட்ட உயிரின் உணவு. நிலம் எதைக் கேட்கிறது? கழிவைத்தான் கேட்கிறது. *Law of Return* என்பதே இயற்கையின் விதி.

பூமியில், பாறையில் வேர்பிடித்து, அதிலிருக்கும் தாதுக்களை உறிஞ்சி உச்சியில் இருக்கும் இலை வரை கடத்தும். இலைகளில் இரும்பு, மாங்கனீசு, பாஸ்பரஸ், நைட்ரஜன் இன்னும் பல இருக்கும். அந்த இலைகள் உதிரும்போது அதை அப்படியே விட்டுவிடு. அதுவே மண்ணுக்கு மேலாடை ஆகும்.

மண்ணுக்கு மேலாடை மரத்தின் நிழலாகும் என்ற கவியரசரின் வரி எவ்வளவு பொருள் பொதிந்த வரி பாருங்கள். மண்ணுக்கு மரமும், அதன் நிழலும், உதிரும் இலையுமே மேலாடை.

மண் செடிக்குத் தாதுக்களைக் கொடுத்தது, மரம் அவற்றை மீண்டும் இலைகள் வழியே மண்ணுக்கே தருகிறது, இலை மட்கி மீண்டும் மரத்திற்கே வருகிறது.

இந்த எளிய அறிவியல் ஆறாயிரமாண்டுத் தொன்மை கொண்ட இந்திய உழவாண்மையின் கண்டுபிடிப்பு. அதைத்தான் இன்று நாம் அழித்துவருகிறோம்.

ஆயிரமாயிரம் ஆண்டுகளுக்கு முன் ஆயிரம் வகையான உணவுப்பொருட்களை விளைவித்த நம் உழவாண்மை அறிவை இரசாயனத்திடம் அடகு வைத்துவிட்டு, ஒரே ஒரு உணவு தானியம் அரிசியை மட்டுமே

செலவழிக்கிறோம்.

திராட்சை, தக்காளி, காலிஃப்ளவர், கறிவேப்பிலை அத்தனையிலும் இரசாயனத்தை அள்ளித் தெளித்து உண்கிறோம்.

**"வரப்புயர நீருயரும்**

**நீருயர நெல் உயரும்**

**நெல்லுயரக் குடி உயரும்**

**குடி உயரக் கோல் உயரும்**

**கோல் உயரக் கோன் உயர்வான்"**

- ஔவை

எனக் குலோத்துங்கச் சோழனை வாழ்த்துகிறார். இதில் வாழ்த்து எங்கே உள்ளது என்போருக்கு,

**நெல்லின்றேல் உணவில்லை**

**உணவின்றேல் உயிரில்லை**

**உயிரின்றேல் உலகமில்லை**

**உலகமின்றேல் உலகாளும் மன்னனில்லை**

**எல்லாம் நெல்லுக்குள் அடக்கம்**

**நெல்லுக்குள் மன்னனும் அடங்கும்**

**எண்ணமுடியாப் பெருமைசார் நெல்போல**

**வாழ்கவென மன்னனுக்கு வாழ்த்துரைத்து**

**விடுவிடுவென நடந்தார்!**

இது வாழ்த்து இல்லையா? வாழ்த்துதான், அதற்கும் நிலத்திற்கும் என்ன தொடர்பு?

நீருயர நெல்லுயரும் என்கிறார் ஔவை. இதை எவ்வளவு தவறாக நாம் புரிந்துகொண்டிருக்கிறோம் என்பதை நினைத்தால் வெட்கக்கேடாக இருக்கிறது. நீரைக் கட்டி நிறுத்தி (Damp irrigation) பாசனம் செய்யச் சொல்லியிருக்கிறார். அது நீர் மேலாண்மைக்கு எதிரானது எனக் கூவிக்கொண்டிருக்கிறோம்.

ஆனால் உண்மை என்ன?

யானை நின்றால் மறையும் அளவிற்கு ஏழடி உயரத்திற்கு நெல் விளைந்துள்ளது, அந்த நெல்லின் பெயர்தான் காட்டுயானம். ஏழடி உயரத்திற்கு நெல் விளைந்தால், வரப்பும் ஆளுயரத்திற்கு இருக்கும் அல்லவா, எனில் நீரும் உயரமாக கட்டி நிறுத்த வேண்டும் இல்லையா?

இங்குதான், நிலமெனும் நல்லாள் நகும் என்பது பொருந்தும். ஆனால், நாமோ, நிலமெனும் நல்லாளையே வறுமைக்கு உள்ளாக்கிவிட்டோம்.

ஆம்! பன்னாட்டு நிறுவனம் கொடுத்த முக்கால் முழ நெற்பயிருக்கான விதைகளை நடவு செய்தோம். உரப்பு குறைந்தது, நீர் மேலாண்மை குறைந்தது... கொடுத்த இரசாயன உரங்களின் உப்பு நிலத்தைப் பாழ் செய்து கெட்டிப்படுத்தியது. உப்பைத் தின்றவன் அதிக தண்ணீர் குடிப்பான் என்ற சொல்லுக்கேற்ப அதிக தண்ணீர் தேவைப்பட்டது.

பாண்டிச்சேரி குணசேகரன் அவர்களின் ஒரு பாட்டு நம்மாழ்வார் அய்யா சொல்லக் கேட்டிருக்கிறேன்...

**முக்கா மொழம் நெல்லுப்பயிறு**

**முப்பதுகெஜம் தண்ணிக்கிணறு**

**நிக்காமதான்**

**நான் நிக்காமதான் தண்ணி எறச்சேன்**

**நெல்லுப்பயிறு கருகிப்போச்சு**

**முக்கா மொழம்...**

மாடுகளுக்கு வைக்கோல் கிடைக்காது போயிற்று. எதற்கு இந்தப் பன்னாட்டு நிறுவனம் அடிப்போட்டிருக்குன்னு பாருங்க...

நிலத்திற்குத் தேவை பட்டறைச் சாமான் இல்லை. கழிவுகள்தான். கழிவுகள் தரக்கூடிய மாட்டை அழிக்க முதலில் அதன் உணவை அழிச்சான், அப்படியே தன்னுடைய இரசாயன உரத்தையும், பூச்சிக்கொல்லியையும், மலட்டு விதைகளையும் வித்துக்கிட்டான். அடுத்து ட்ராக்டர் விற்க மாட்டை ஓரங்கட்டினான். இரசாயன உரத்தால் கெட்டிப்பட்டுப்போன நிலத்தை உழவோட்ட ட்ராக்டர் கொடுத்தான். ட்ராக்டர் சாணி போடாதேன்னு J.C. குமரப்பா கேட்டப்போ சிரிச்சோம்.

இப்போ, நம்ம பொழப்பு சிரிப்பா சிரிக்குது இல்லையா? இரசாயனம் அள்ளித் தெளித்த உணவைத் தின்று, நோய் கண்டு, அவன்கிட்டேயே அதுக்கும் மருந்து வாங்கி அல்ப ஆயுசில் மடிகின்ற நம்மைப் பார்த்து மெல்ல மெல்ல நகுகிறாள் நிலமெனும் நங்கை நல்லாள்.

சிந்திப்போம், செயல்படுவோம்... ■

பாடல் பிறந்த கதை - 5

கவிஞர் ஏகாதசி



# மரங்களைப் பாட...

எல்லா மரங்களும் வானத்தை நோக்கியே வளர்கின்றன. தரை பார்க்கும் இலைகள் கொண்ட மரங்களும்கூட. மரம்தான் மனிதனுக்கு எல்லாமும். பெற்றாரும் உற்றாரும் கைவிட்டாலும் மாரில் சாய்ந்து அழ மரங்கள் இருக்கின்றன. நடந்துகொண்டே இருக்கும் நமது நிழல் யாருக்கும் பயன்படாது. ஆனால் நின்றுகொண்டிருக்கும் மரம்தான் நம் எல்லாருக்கும் நிழல் கொடுக்கிறது. மனிதனுக்கு இரண்டு கால், மரத்திற்கு ஒரு கால். இந்த மண்ணின் மீது மரங்களுக்கு எத்தனை காதல் இருந்தால் தன் வேர்களை மண்ணிற்குள் இறக்கிக் கட்டிப் பிடித்திருக்கும். நாம் அப்படியில்லை. மண்ணின் தலையில் இரும்பினாலான கம்பியை இறக்குகிறோம். நமக்கு மரங்களில் காய்க்கும் காய் கனிகளைத்தான் பறிக்கத் தெரியும். ஆனால் மரங்கள் மட்டும்தான் எட்டி வளர்ந்து வானத்தில் மழையைப் பறித்து நமக்கு வழங்குகின்றன. நாம் நீரூற்றி மரங்களை வளர்க்கிறோம் என்கிறோம். அந்த நீரைத் தந்ததே மரம்தானே.

எத்தனை மரம் எத்தனை அழகு. மூலிகைக் காற்றே முழு சுவாசமாக மாறிப்போனால் மனிதனுக்கு மரித்தல் என்று ஒன்றே இல்லாமல் போய்விடும். ஆனால் இயற்கைக்கு எதிராகச் செயல்பட்டுக்கொண்டிருக்கிறோம். அது நமக்கெதிரான செயல்பாடு என்பதறியாமல். இந்தப் பூமிவாழ் உயிரினங்களுக்குச் சாமரம் வீசிக்கொண்டிருக்கின்றன மரங்கள்.

நாம் உயிர்க்காற்றைத் தொழிற்சாலைக் கழிவுகளாலும் வாகனப் புகைகளாலும் காயப் படுத்திக்கொண்டிருக்கிறோம்.

வெயிலெரித்து வரும் நம்மை நிழல் போர்த்தி அரவணைக்கும் தாயுள்ளம் கொண்ட மரங்களை நாம் கொஞ்சித் தீர்க்க வேண்டும், அவற்றின் இலைகளை வருடிக் கொடுங்கள் அது உங்களோடு பேசும். மரத்தின் பூக்களை

விட வேறொரு அழகு இப்பூமியில் உண்டா.. நாம் கூட மகிழ்வான பொழுதுகளில் மட்டுமே சிரிக்கின்றோம். ஆனால் மரம் கோடையிலும் பூக்கும். ஊர்களெங்கும் மரங்கள் எண்ணற்ற கதைகளை வைத்திருக்கின்றன.

நமக்குப் பலன் தருவதற்காகவே மரங்கள் நம் கண்ணுக்குத் தெரியாமல் மண்ணுக்குள் வேர்விட்டுக் கொண்டிருக்கின்றன. பறவைகள் மரங்கள் மீது வைத்திருக்கும் சிநேகிதத்தில் இரண்டு சதவீதம் கூட மனிதன் வைப்பதில்லை. எத்தனையோ இலையுதிர்த்த மரக்கிளைகளில் குருவிகள் அமர்ந்து இலைகளைப் போல் காட்சி தந்திருக்கின்றன. ஆற்றங்கரை மரங்களின் நிழல்கள் அலைகளின் மேல் அமர்ந்து நெளிந்து நெளிந்து நடனமிடும் அழகைக் கண்டால் கல் கூட பூக்காமல் என்ன செய்யும்..

எங்கள் ஊரில் வெள்ளைக்கல் ஆலமரம் ஒன்று இருக்கிறது. அதிலிருந்து தெற்கே நூறடி தூரத்தில்தான் எங்கள் வீடு. அந்த மரம் இருப்பது நாகமலைச் சரிவில். நாங்கள் இருப்பது நாகமலையின் அடிவாரத்தில். என் சிறு வயதுகளில் என் அம்மா அடித்தாலோ திட்டினாலோ நான் ஓடிப்போய் அங்கேதான் உட்கார்ந்துகொள்வேன். அங்கே அழுது முடித்து ஆலம் பழங்கள் பொறுக்கித் தின்று பின் கிளம்பி வீடு வருவேன்.

அங்கே சதாகாலமும் சீட்டாட்டம் நடக்கும். அங்கே விளையாடுவதில் எங்கள் ஊருக்கு அப்படி ஒரு போதை. போலீஸ் வருவதாக இருந்தால் சாலையிலிருந்து மலையேறி ஆலமரம் வர 5 நிமிடங்கள் ஆகும். வருவது தெரிந்த சீட்டாட்டக்காரர்கள் கள்ளிக் கட்டாப்புகளுக்குள் ஓடி ஒளிந்துகொள்வார்கள். பெரும்பாலும் போலீஸ் ஏமாந்துதான் போகும். போலீஸ் போனபின் மீண்டும் விளையாடுவார்கள். இதற்காக வேலை வெட்டிக்குப் போகாமல் ஆலமரத்துச் சீட்டாட்டத்தில் கிடக்கும் இளவட்டங்கள் ஏராளம்.

நான் பார்க்க ஒருநாளைக்கு இரண்டு பேர் வீட்டிலிருந்தாவது மனைவிமார் விளக்குமாத்தோடு வந்து தத்தம் கணவனை அடித்து அசிங்கமாகப் பேசித் துரத்தும் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். அந்த ஆலமரம் மிகப் பெரிது. ஒரு பக்கம் சீட்டாட்டம். ஒரு பக்கம் விழுதுகளில் எங்களின் தூரியாட்டம்.

அங்கே மரத்தருகே உள்ள வெள்ளைக்கல்லின் மேல் விளக்கு ஏற்ற ஏதுவாக ஒரு குத்துக்கல் உண்டு. அது நாகர் தெய்வம். வெள்ளி செவ்வாய்க்கிழமைகளில் எங்கள் ஊரார் விளக்கு போடுவர் மற்றும் நேர்ந்துவிட்ட சிறு சேவல் கூவும் வயது வந்து கூவியவுடன் அங்கே கொண்டுபோய் அறுப்பார்கள். எங்கள் பணியான் கிராமம் மலையடிவாரக் கிராமம் என்பதால் பூச்சி பொட்டுகள் பாம்பு பல்லிகள் கண்ணில் படக்கூடாது என்பதற்காகத்தான் இதெல்லாம்.

இப்படிச் சொல்லிக்கொண்டே செல்ல வெள்ளைக்கல் ஆலமரம் பற்றி நூறு கதைகள் உண்டெனினும் அந்த மரத்தை அங்கே 75 வருடங்களுக்கு முன் நட்டவர் கைகால் விரல்கள் மடங்கிப் புண்கள் பூத்த ஒரு தொழுநோயாளி. ஊருக்குள் வாழ்ந்தால் நோய் மற்றவர்களுக்கும் பரவிவிடக் கூடுமென்று மலையில் வாழ்ந்து தன்னைத் தனிமைப்படுத்திக்கொண்டவர் எனும் உண்மைக் கதைதான் என் நெஞ்சாங் கூட்டுக்குள் இன்னும் ஆலம் சருகெனச் சத்தமிட்டுக்கொண்டே இருக்கிறது.

ஒரு முப்பது வருடங்களுக்கு முன்பெல்லாம் எங்கள் ஊர்களில் சாராயம் காய்ச்சுதல் என்பது விவசாயம் போல் நடந்தது. காடுகளிலும் மேடுகளிலும் இரு சக்கர வாகனங்களில் ட்யூபில் கட்டப்பட்ட சாராய மூட்டைகள் பறந்தவண்ணம் இருந்ததைப் பார்த்திருக்கிறேன். அந்தக் காலகட்டத்தில் சாராயம் காய்ச்சுவதற்காகக் காடு மலையில் இருக்கும் வேலம் மரப்பட்டைகளை உரித்து ஊறலில் போடுவார்கள். இதன் காரணமாகக் கண்ணில் தெரிகிற வேலம் மரங்கள் தங்கள் தோல்களை இழந்து நின்றதை நினைத்தால் இன்றும் என் கண்கள் கலங்குகின்றன.

தூரத்தூர் சென்று உச்சி வெயிலில் பொட்டல் காட்டு வழியாகக் காலில் செருப்பின்றி நடந்து வீடு வருகிறவனுக்குக் கண்ணில் தட்டுப்படும் ஒரு மரத்தின் பெயர் தாயின்றி வேறென்ன. அப்படித்தான் இந்தப் பூமியில் மரத்தை அண்டிப் பிழைக்கின்ற சீவராசிகள் ஏராளம். இப்படியெல்லாம் இருக்கையில் மரங்களைப் பட்டை உரித்துக் காயம் செய்கிறோம் வீடு கட்டுகிறோம் ரோடு போடுகிறோம் என்கிற பெயரில் மரக்கொலை செய்வது ஆரோக்கியமான செயல்பாடு அல்ல.



ஒவ்வொரு திருவிழாவின்போதும் எங்களூர் மந்தைத் திடல் வேப்பமரத்தின் உச்சியில் ரேடியோ குழாய் கட்டப்பட்டிருக்கும். அங்கிருந்து ஒலிக்கிற பாடல் சுமார் 4 கிலோமீட்டர் தூரம் வரை கேட்கும். இன்றும் நான் ஊருக்குச் செல்லும்போது அந்த மரத்தின் உச்சியை அண்ணாந்து பார்க்காமல் கடப்பதில்லை. தோட்டங்களில் உள்ள மரங்கள் கூலித் தொழிலாளர்களுக்கு மடிபோல் இருக்கும். சுடும் வெயிலில் குறுக்கொடிய வேலை பார்த்துவிட்டு மதிய சாப்பாட்டிற்காக மரத்து நிழலில் அமர்கிற தருணம்தான் அவர்களுக்குப் போன உயிர் வந்தது போலிருக்கும்.

இன்று பெரும்பாலான விவசாய நிலங்கள் வீடுகளாகிப் போயின. அதுவும் வழிப்போக்கர்கள் தங்கிப் போகிற திண்ணை இல்லாத வீடுகளாகிப்போனதில் சாலை மனிதர்களின் கால் பாதங்களின் சூடு புதிய ரக வீடுகளைச் சபிக்கின்றது. கைக்குழந்தைகளைக் காடுகளுக்குத் தூக்கிச் செல்கிறார்கள். கொஞ்சம் மீறிய குழந்தைகளை வீட்டில் விட்டுச் செல்கிறார்கள். இவ்விரண்டு சூழல்களிலும் குழந்தைகளைத் தூங்கவைக்கத் தொட்டில் கட்டியிருப்பதென்னவோ மரங்களில்தான். தொட்டிலில் கிடக்கும் குழந்தை தூங்காத நேரங்களில் கிளைகளோடும் பூக்களோடும் பேசும். கிளைகளும் பூக்களும் குழந்தையோடு பேசும். அப்படியாக நாம் எல்லோரும் ஏதோ தருணத்தில் மரங்களோடு பேசிக்கொண்டுதான் இவ்வாழ்வைக் கடக்கிறோம். ஆனால் எப்படித்தான் மனசு வருகிறதோ கையில் கோடரி பிடிக்க.

**பல்லவி**

மரங்களைப் பாட மறந்து விட்டோம் – அதன்
மடியினில் தூக்கம் இழந்து விட்டோம்

பறவைக்கெல்லாம் கூடு – மரம்
பல பேருக்கு வீடு..

**சரணம் - 1**

ஆதியில் மனிதர்க்கு ஆடைகள் தந்தது மரமே
சாதிகளற்ற சமத்துவ சீவனும் மரமே
தீக்குச்சி காகிதம் கதவும் தந்தது மரமே
பள்ளியில் வாத்தியார் மேசையைத் தந்ததும் மரமே

தொட்டில் கட்டிக் குழந்தையைத் தூங்க வைக்கலாம்
முட்டையிட்டுக் குருவிகள் அடையும் காக்கலாம்..

கிளையில் அமரும் பறவையிடம்
வாடகை வாங்காது – மரம்
சுள்ளி பொறுக்கும் கிழவியிடம்
விலையும் பேசாது

காடழித்து சோறு தின்னல் ஆகுமா – பிணமும்
கட்டைகளை அடுக்காமல் வேகுமா

**சரணம் - 2**

கிளைக் கைகள் நீட்டி மழைப்பூக்கள்
பறிப்பதும் மரமே
அலை கடல் மேலே உழைப்பவரைச்
சுமப்பதும் மரமே
வெயில் தீண்டும்போது குடை தந்து போகும்
மரமே
தடை பல தாண்டி தளைகிற போராளி மரமே

பிள்ளைகள் பெற்று என்ன பயன் மரங்கள்
வளர்க்கலாம்
பிளந்துடையும் பூமிப்பந்தின் மரணம்
தடுக்கலாம்

விளக்கில்லா வீதியிலே
வெளிச்சம் வீசும் – மரம்
காலடியில் உட்கார்ந்தால்
கதைகள் பேசும்..

குட்டிக் குட்டி மரங்களெல்லாம் சேயப்பா – நீ
வெட்டுகின்ற மரங்கள் உந்தன் தாயப்பா

இந்தப் பாடலுக்குத் தோழர் ராசை கபிலன் மனதைத் தாலாட்டும் விதமாக மெட்டமைத்துத் தனியிசையாகப் பாடி வெளியிட்டுள்ளார். இப்பாடலை மக்கள் மத்தியில் எண்ணற்ற கலைக்குழுக்கள் பாடுகின்றனர்.


பெண்ணுக்குப் பேய் பிடித்துவிட்டதாக நம்பப்படும் ஊர்களில், அந்தப் பேயை விரட்டச் செய்யப்படும் சாங்கியங்களில் இறுதியாக அந்தப் பெண்ணின் முடியைக் கொஞ்சம் கத்தரித்து அதை மரத்தில் வைத்து ஆணியடித்து அந்தப் பெண்ணைப் பிடித்த பேயின் விருப்பத்திற்கிணங்க சோப்பு, சீப்பு, கண்ணாடி, ரிப்பன், பூ, பொட்டு, பவுடர், மஞ்சள் போன்ற பொருட்கள் வைத்துவிட்டு வருவார்கள். அதன் பிறகு வெகு நாட்களுக்கு அந்த வழியாகச்



செல்கிறவர்கள் மரத்தைப் பூவோடும் பொட்டோடும் பார்த்துப் பயந்து திரிவார்கள். மேலும் வாழ்வின் கசப்பைத் தாங்க இயலாத இளம் பெண்கள் மரங்களில் தூக்குமாட்டி இறந்த கதைகள் இந்த மண்ணில் ஆண் சமூகம் வெட்கப்படும்படியான அளவிற்கு நிரம்ப இருக்கின்றன.

மரங்கள் அற்ற பூமியில் மனிதன் வாழமுடியாது. ஆனால் மனிதன் அற்ற பூமியில் மரங்கள் வாழும். ஆதியில் மரக்கூட்டங்களுக்குள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மனிதன் இருந்தான். இப்போது மனிதக் கூட்டங்களுக்குள் அங்கொன்றும் இங்கொன்றுமாக மரம் இருக்கிறது. இது மனிதனின் பெரும் இயற்கை அபகரிப்பு ஆகும். இந்தப் பூமி ஒரு பூச்செண்டு. ஒவ்வொரு மனிதனும் பிறக்கும்போது இதைக் கைகளில் பெற்று மரிக்கும்போது ஓரிதழும் உதிராமல் புதிதாகப் பிறக்கும் இன்னொருவர் கைகளில் கொடுத்துவிடுதல் கடமை ஆகும். நாம் சுவாசிக்க ஆக்சிசனை வெளியிடும் மரத்திற்கு நாம் மரணத்தைப் பரிசளிப்பது அறிவற்ற செயல். கிளைகளை வெட்டினாலும் உன் மீது பூக்களை உதிர்க்கும் பெருந்தன்மையைப் பார்த்ததுண்டா. மரத்தை மொத்தமாக நீ வெட்டிச் சாய்த்துவிட்டாலும் அது உன்னைவிட்டுப் பிரியாமல் உன் வீட்டின் ஏதோ ஒரு பொருளாக இருந்துகொள்ளும் பேரன்பை உணர்ந்ததுண்டா.

வேண்டாம்.. வேண்டாம்.. மரங்களை வெட்டாதீர்கள், பள்ளி மரத்தடியில் அமர்ந்து புத்தகம் வாசிக்காதவர் எவருண்டு. புத்தர் ஞானம் பெற்றது மட்டுமல்ல, இங்கே உள்ள ஒவ்வொரு மரமும் போதி மரம்தான். நாம் அதன் தாழ்வாரத்தில் அமர நேரமின்றி ஓடித் திரிகின்றோம். ■


FILMING IN PROGRESS...
PADAIPPU PRODUCTION
AISHWARYA DUTTA - SENDRAYAN
PRODUCTION NO:01
DIRECTED BY CHARLES RAYAPPAN
DOP MARUTHA NAYAGAM MUSIC DEV PRAKASH
EDITING TAMILARASAN CHOREOGRAPHER ABU & CHALS PRO NIKIL MURUKAN
CO PRODUCER SASIKUMAR NITHYANANTHAM
PRODUCED BY BALAJI NEDUNCHEZHIYAN
JINNA ASMI


படைப்பு
பரிசு 40000 ரூபாய்
கவிக்கோ
பிறந்தநாள் பரிசுப்போட்டி
தலைப்புகள்
1. யாருமற்ற சிலுவை
2. பால்வெளியில் விரியும் உன் குறுஞ்செய்தி
3. கொஞ்ச நேரம் இரு
இதில் ஏதேனும் ஒரு தலைப்பில் மட்டுமே எழுத வேண்டும்
நடுவர்: கவிஞர் மனுஷ்ய புத்திரன்
போட்டி நாள் : 09-11-2022
போட்டியில் பங்குபெற : padaippu.com